Registered as a News Paper in Sri Lanka

பக்கங்கள்: 12

# ஈழநாதம்

விலை 5/=

THE EELANAATHAM    PEOPLES DAILY    ● வெள்ளி மஞ்சரி ●

நாதம் 01    பிரமோதூத ஸூ வைகாசி மீ 25 ஆம் உ    வெள்ளிக்கிழமை    (08 - 06 - 1990)    ஹிஜ்ரி 1410    ஜுல்ஹஜ் 14    ஓசை 110

## ஏமாற்றும் ஏஜென்சிகளுக்கு கடும் தண்டனை

(கொழும்பு)

நாடு பூராகவுமுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களைக் கட்டுப்படுத்த புதிய சட்டப் பிரமாணங்களை அரசாங்கம் தயாரிக்கவுள்ளதாம்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட குழு, ஏமாற்றும் ஏஜென்சிகளை ஒழுங்கமைக்க பல ஆலோசனைகளைத் தொழில் அமைச்சருக்கு வழங்கியுள்ளது.

ஏமாற்றுதல், மோசடி ஆகிய குற்றங்களை இழைக்கும் ஏஜென்சி முகவர்களுக்கு ஐந்து வருடச் சிறையும், ரூபா 1,00,000 மேலான தண்டமும் விதிக்கும் படி குழு சிபார்சு செய்துள்ளது.

# வவுனியாவில் புலிகள் இராணுவம் மோதல்

## இலங்கை அபிவிருத்திக்கு 32கோடிரூபா சுவிடன் உதவி

(கொழும்பு)

இலங்கையில் மேற்கொள்ளப்படும் பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு 32 கோடிரூபாவை சுவிடன் அரசு வழங்கி இருக்கிறது.

இவ் உதவி இந்தவருடம் யூலை மாதத்தில் இருந்து அடுத்த வருடம் யூன் மாதம் 30ம் திகதி வரை கிடைக்கும்.

மாத்தறை ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டம், கல்வி சுகாதாரத் துறை பதுளை ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டம் கல்வித் திட்டங்கள் என்பனவற்றுக்கு இந்த உதவி பயன் படுத்தப்படும்.

இது தொடர்பான உடன்படிக்கையில் நிதியமைச்சின் செயலாளர் எஸ். எல்.குருப்புவும். சுவீடன் சர்வதேச கூட்டுறவுததிணைக்களத்தின்செயலாளர் ஸ்ராண்ட் வயலெட்டும் கைச்சாத்திட்டுள்ளனர்.

## மோட்டார் சைக்கிள் மோதி மூதாட்டி மரணம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள்மோதியதில் வேலணைத்துறையைச் சேர்ந்த திருமதி தம்பிப்பிள்ளை ரட்ணம் என்னும் 65 வயது மூதாட்டி காலமானார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## காஷ்மீர் பிரச்சினையைப் பேசித்தீர்க்க வேண்டுகோள்

இந்தியாவும் - பாகிஸ்தானும் காஷ்மீர் பிரச்சினைக்கு சார்க் நாடுகளின் ஒத்துழைப்புடன்பேசித்தீர்த்துக்கொள்ள வேண்டும் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். இவ்வாறு பேசித் தீர்த்துக் கொள்வதே சார்க் அமைப்பின் சித்தாந்தம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்தியாவும் - பாகிஸ்தானும் இலங்கையின் நட்புறவு நாடுகள் எனவும், இலங்கையுடன் நெருங்கிய கலாசார இணைப்பை அவை கொண்டிருக்கின்றன என்றும் இவைகளுக்கு நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் ஓடிவந்து உதவி செய்யும் நாடுகள் எனவும் தெரிவித்தார்.

## க. பொ. த. உயர்தரப் பரீட்சை

## மீளாய்வு செய்யப்பட்ட பெறுபேறுகள் அனுப்ப ஒழுங்கு

## போர் நிறுத்த ஒழுங்கு விதியை மீறியதால் புலிகள் நடவடிக்கை

(வவுனியா)

நேற்றுக்காலை வவுனியாவிலுள்ள தாண்டிக்குளத்தில் விடுதலைப்புலி வீரர்களுக்கும் சிங்கள இராணுவத்தினருக்கும் மத்தியில் கடும் சண்டை மூண்டது. இந்த மோதலில் ஒரு இராணுவ வீரர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டதுடன் 10 பேர் படுகாயமடைந்தனர். போர் நிறுத்த ஒழுங்குவிதியை மீறி விடுதலைப்புலிகளின் உத்தரவு பெறாமல் திடீரென கவச வாகனங்கள் சகிதம் நூற்றுக்கும் அதிகமான இராணுவத்தினர் வவுனியாவிலிருந்து முல்லைத்தீவு நோக்கிப் புறப்பட்டபொழுது இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. தாண்டிக்குளம் விவசாயப் பண்ணைக்கு அருகாமையிலுள்ள விடுதலைப்புலிகளின் காவல் அரணை உடைத்துக்கொண்டு சிங்கள இராணுவத்தொடர் வாகனங்கள் முன்னேற முயற்சித்தபொழுது விடுதலைப்புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத் தலைமைப்பீடத்திற்கும் மத்தியில் நடைபெற்ற பேச்சுக்களின் போது யுத்தநிறுத்தத்தைப் பேணுவதற்குச் சில ஒழுங்கு விதிகளை கடைப்பிடிப்பதென இரு தரப்பிலும் இணக்கம் காணப்பட்டது. இதன்படி சிங்கள இராணுவம் வடகிழக்கில் உள்ள முகாம்களை விட்டு வெளியேறுவதாயின் விடுதலைப் புலிகளின் முன் அனுமதி பெறவேண்டும். இந்த ஒழுங்கு விதி மீறப்பட்டதாலேயே வவுனியாவில் இந்த மோதல் நிகழ்ந்தது.

நேற்று முன்தினம் வவுனியா இராணுவ அதிகாரிகள் புலிகளைத் தொடர்புகொண்டு இராணுவப் படைப்பிரிவு ஒன்றை முல்லைத்தீவுக்கு அனுப்ப அனுமதி கோரினர். உடனடியாகத் துருப்புகளை வெளியே அனுப்பவேண்டாமென்றும், விடுதலைப் புலிகளின் தலைமையுடன் தொடர்புகொண்டு பின்னர் ஒரு திகதி குறிப்பிட்டுத் தருவதாகவும் வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஞானம் தெரிவித்தார் விடுதலைப்புலிகள் அனுமதி மறுத்தும் அதனையும் பொருட்படுத்தாமல் இரண்டு பவல் டாங்கிகள், மூன்று கவச வாகனங்கள், மூன்று டிரக்குகள் சகிதம் நூற்றுக்கும் மேற்பட்ட சிங்கள இராணுவத்தி

(12ஆம் பக்கம் பார்க்க)

## தற்செயல் சம்பவம் இராணுவத் தளபதி

(கொழும்பு)

வவுனியாவில் ஸ்ரீ லங்கா இராணுவத் தொடர்வாகனங்கள், விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையில்

### கடைசிச் செய்தி

## புலிகள் அனுமதி

(யாழ்ப்பாணம்)

நேற்று நடைபெற்ற மோதலையடுத்து வவுனியா முகாமுக்குத்திருப்பியனுப்பப்பட்ட சிங்கள இராணுவத்தினர் முல்லைத்தீவு செல்வதற்கு விடுதலைப்புலிகள் அனுமதி வழங்கினர்.

### உள்ளூராட்சி தேர்தலில்

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நட்புக் கட்சிகளுடன் உடன்பாடு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதனுடன் இணைந்து செயலாற்றும் கட்சிகளுடன் எதிர் வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக ஒரு தேர்தல் உடன் பாட்டுக்கு வரத் தீர்மானித்துள்ளது. இதற்கான அங்கீகாரத்தை ஸ்ரீ. ல. சு. கட்சி மத்திய குழு கட்சிகளுக்கு வழங்கியுள்ளது.

கொழும்பில் ஸ்ரீ. ல. சு கட்சித் தலைமைச் செயலகத்தில் செவ்வாயன்று கூடிய மத்திய குழு எடுத்த ஏகமனதான முடிவிற்கிணங்க, ஏனைய கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடு குறித்துப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுடன் நட்பை வளர்க்க இலங்கை ஆவல் - பிரேமதாசா

(கொழும்பு)

இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளை வளர்த்துக் கொள்ள இலங்கை வெகு ஆவலாக இருப்பதாக இலங்கையின்ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா தெரிவித்துள்ளார். இலங்கையிலிருந்து மாற்றலாகிச் செல்லும் தூதுவர் மல்ஹோத்தரா ஜனாதிபதியிடம் பிரியாவிடை பெறச் சென்றபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்திய ஜனாதிபதிக்கும், பிரதம மந்திரிக்கும் தனது அன்பையும், நல்லெண்ணத்தையும் தெரிவிக்குமாறும் பிரேமதாசா தூதுவரைக் கேட்டுக்கொண்டார். மேலும் இச்சந்திப்பின்போதுஇலங்கை இந்திய வர்த்தக உறவுகள் வலுவடைய பல்வேறு ஆக்க

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்தேசிய தன்னுரிமைப் பிரகடன மகாநாட்டிற்கு தடை

(சென்னை)

தஞ்சாவூரில் நாளை நடைபெறவிருந்த தமிழ் தேசிய தன்னுரிமை பிரகடன மகா

மாறன் ஒழுங்கு செய்திருந்தார்.

இம்மகாநாடு இரத்துச்செய்யப்படுவதற்கு அம்மகாநாட்டில் கண்காட்சிக்கு வைக்கப்படவிருந்த படங்களும், கோஷங்களும் இலங்கை, இந்திய நட்புறவைப் பாதிக்கும் தன்மை கொண்டவையாக உள்ளன எனக் காரணம் காட்டப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேசித்தீர்க்க வேண்டுகோள்

இந்தியாவும் - பாகிஸ்தானும் காஷ்மீர் பிரச்சினைக்கு சார்க் நாடுகளின் ஒத்துழைப்புடன்பேசித்தீர்த்துக்கொள்ள வேண்டும் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். இவ்வாறு பேசித் தீர்த்துக் கொள்வதே சார்க் அமைப்பின் சித்தாந்தம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்தியாவும் - பாகிஸ்தானும் இலங்கையின் நட்புறவு நாடுகள் எனவும், இலங்கையுடன் நெருங்கிய கலாசார இணைப்பை அவை கொண்டிருக்கின்றன என்றும் இவைகளுக்கு நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் ஓடிவந்து உதவி செய்யும் நாடுகள் எனவும் தெரிவித்தார்.

## க. பொ. த. உயர்தரப் பரீட்சை

# மீளாய்வு செய்யப்பட்ட பெறுபேறுகள் அனுப்ப ஒழுங்கு

(கொழும்பு)

கடந்த வருடம் டிசம்பரில் நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையின் மீளாய்வு செய்யப்பட்ட பெறுபேறுகளை அனுப்பிவைக்க பரீட்சைத் திணைக்களம் ஒழுங்குகள் செய்துள்ளது.

பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் இவை அனுப்பிவைக்கப்படும் என்று பரீட்சை ஆணையாளர் ஆசா வெதமுல்ல தெரிவித்தார்.

மீளாய்வு செய்யப்பட்ட பெறுபேறுகளும், மாணவர் பெற்ற மொத்தப்புள்ளி விபரங்களும் அனுப்பி வைக்கப் படுமென்றும், அதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாகவும் பரீட்சைத் திணைக்கள பணிப்பாளர் தெரிவித்தார்.

# பாடசாலை அதிபர்களுக்கு பதவி உயர்வு வழங்க முடிவு

(கொழும்பு)

பாடசாலை அதிபர்களுக்கு பதவி உயர்வுகளை வழங்க கல்விச்சேவை ஆணைக்குழு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

இப் பதவியுயர்வுகள் இந்த மாதத்தில் வழங்கப்படவிருக்கின்றன. இது தொடர்பாக கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் அனுமதி ஏற்கனவே பெற்றுக் கொள்ளப்பட்டது.

அரசாங்கப் பாடசாலைகளில் 1988ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியன்று மூன்றுவருடங்களுக்கு குறையாத காலஎல்லையில் பாடசாலை பதில் அதிபர்களாக கடமையாற்றியவர்கள் பதவி உயர்வுபெற தகுதியுடையவர்கள் எனவும் கூறப்பட்டுள்ளது.

விதிகளை கடைப்பிடிப்பதென இரு தரப்பிலும் இணக்கம் காணப்பட்டது. இதன்படி சிங்கள இராணுவம் வடகிழக்கில் உள்ள முகாம்களை விட்டு வெளியேறுவதாயின் விடுதலைப் புலிகளின் முன் அனுமதி பெறவேண்டும். இந்த ஒழுங்கு விதி மீறப்பட்டதாலேயே வவுனியாவில் இந்த மோதல் நிசழ்ந்தது.

## தற்செயல் சம்பவம் இராணுவத் தளபதி

(கொழும்பு)

வவுனியாவில் ஸ்ரீலங்கா இராணுவத் தொடர்வாகனங்கள், விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் ஏற்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையைமீறி நடந்து கொண்டதால், இருதரப்பினருக்குமிடையில் நேற்று ஏற்

(12ஆம் பக்கம் பார்க்க)

உடனடியாகத் துருப்புகளை வெளியே அனுப்பவேண்டாமென்றும், விடுதலைப் புலிக

### கடைசிச் செய்தி

## புலிகள் அனுமதி

(யாழ்ப்பாணம்)

நேற்று நடைபெற்ற மோதலையடுத்து வவுனியா முகாமுக்குத்திருப்பியனுப்பப்பட்ட சிங்கள இராணுவத்தினர் முல்லைத்தீவு செல்வதற்கு விடுதலைப்புலிகள் அனுமதி வழங்கினர்.

முல்லைத்தீவிலுள்ள இராணுவத்தினர் இடமாற்றம் பெற்று தென்னிலங்கை செல்வர்.

தலைப்புலிகள் அனுமதி மறுத்தும் அதனையும் பொருட்படுத்தாமல் இரண்டு பவல் டாங்கிகள், மூன்று கவச வாகனங்கள், மூன்று டிரக்குகள் சகிதம் நூற்றுக்கும் மேற்பட்ட சிங்கள இராணுவத்தி

(12ஆம் பக்கம் பார்க்க)

கையின் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா தெரிவித்துள்ளார். இலங்கையிலிருந்து மாற்றலாகிச் செல்லும் தூதுவர் மல்ஹோத்தரா ஜனாதிபதியிடம் பிரியாவிடை பெறச் சென்ற போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

ணத்தையும் தெரிவிக்குமாறும் பிரேமதாசா தூதுவரைக் கேட்டுக்கொண்டார். மேலும் இச்சந்திப்பின்போதுஇலங்கை இந்திய வர்த்தக உறவுகள் வலுவடைய பல்வேறு ஆக்க

(12ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்தேசிய தன்னுரிமைப் பிரகடன மகாநாட்டிற்கு தடை

(சென்னை)

தஞ்சாவூரில் நாளை நடைபெறவிருந்த தமிழ் தேசிய தன்னுரிமை பிரகடன மகாநாட்டிற்குத் தமிழக அரசு வழங்கியிருந்த அனுமதியை ரத்துச் செய்துள்ளது. இம் மகா நாட்டை திரு. நெடுமாறன் ஒழுங்கு செய்திருந்தார்.

இம்மகாநாடு இரத்துச்செய்யப்படுவதற்கு அம்மகாநாட்டில் கண்காட்சிக்கு வைக்கப்படவிருந்த படங்களும், கோஷங்களும் இலங்கை, இந்திய நட்புறவைப் பாதிக்கும் தன்மை கொண்டவையாக உள்ளன எனக் காரணம் காட்டப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# ராக்கிங் தொல்லைகளால் வீட்டிற்கு ஓடிவந்த மாணவர்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி இளைஞர் ஒருவர் தென்பகுதியில் மேற்படிப்புக்காக சென்ற இடத்தில் "ராக்கிங்" தொல்லை தாங்க முடியாது தமது வீட்டிற்கு ஓடிவந்துள்ளார்.

கண்டி அறப்பொல தொழில்நுட்பக்கல்லூரிக்கு இயந்திரவியல் பகுதிக்கு தெரிவுசெய்யப்பட்டு அங்கு மேற்படிப்பைத் தொடரவென சென்ற பொழுது தாம் மிகவும் மனிதாபிமான மற்றமுறையில் ராக்கிங்கிற்கு உள்ளாக்கப்பட்டதாகவும் இதனால் தாம் அங்கு தொடர்ந்து படிப்பைத்

(12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் - அரசாங்க பேச்சுவார்த்தை பயனுள்ளதாக அமைய வேண்டும்

- ராஜு முகம்மது

இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்களுக்கும் இடையில் தற்போது நடைபெற்றுவரும் பேச்சுக்கள் நாட்டிற்கு பயனுள்ளதாய் அமைய வேண்டுமென்று தமிழ்முஸ்லிம் மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் எம். ஏ. ராஜு முகம்மது அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

இன்றைய காலகட்டத்தில் அரசியல் கட்சிகளும் தலைவர்களும் நாட்டின்மீதும், நாட்டு மக்கள்மீதும் நல்ல ஆரோக்கியத்தை ஏற்படுத்த முன்வர வேண்டும் எனவும், கடந்த காலத்தில் சிறுபான்மை பிரச்சினையில் ஏற்பட்ட இழுபறி நிலை தற்காலத்தில் ஏற்பட இடமளிக்கக்கூடாது எனவும் வேண்டிக் கொண்டார்.

அத்துடன் இதனைக் கருத்திற்கொண்டு அரசியல் ஆதாயம் தேடும் நோக்கத்தைக் கைவிட்டு சிறுபான்மை மக்களின் உரிமைகளையும், உணர்வுகளையும் கட்டுப்படுத்த உருவாக்கப்பட்ட ஆறாவது திருத்

(12ஆம் பக்கம் பார்க்க)

# எம்.பிகளின் மெய்ப்பாதுகாவலர் பொலிஸ் சேவையில் இணைப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களதும், அமைச்சர்களதும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக, மெய்ப்பாதுகாவலர்களாக இருந்த சுமார் 1250பேர் பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

ஒவ்வொரு உறுப்பினரும் தனது சொந்தப் பாதுகாப்புக்கென தங்களால் தெரிவு செய்யப்பட்ட ஐந்து பேரை மெய்ப்பாதுகாவலர்களாக வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்க

(12ஆம் பக்கம் பார்க்க)

# அளவைகளுக்கு சீல் வைக்க வியாபாரிகள் ஆர்வமில்லை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள கடை உரிமையாளர்கள் தமது தராசு, படிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்வதில் ஆர்வமில்லாமல் காணப்படுகிறார்கள் என்று வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கான நிறுவைப் பரிசோதகர் திரு. வை. கிருஷ்ணதாசன் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

கடந்த ஆறாம் திகதி புதன் கிழமை வவுனியா கச்சேரியில் வைத்து தராசு, படிகளுக்கான முத்திரை இடும் வேலைகள் செய்யப்பட்டன. குறிப்பிட்ட சிலர் மட்டுமே தமது தராசு, படிகளுக்கான முத்திரைகளையிட்டுக் கொண்டனர். பலர் இதில் எதுவித நாட்டமுமின்றிக் காணப்பட்டனர். இதுபற்றி அவரிடம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அத்து மீறிய நெற் செய்கையால் அனுமதி பெற்ற விவசாயிகள் பாதிப்பு

(கிளிநொச்சி)

இரணைமடு நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் 500 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளில் அடாத்தாக வேளாண்மை செய்யப்படுகிறது. இதனால் நேர்மையாக வேளாண்மை செய்பவர்களின் வயல்கள் போதிய நீரின்றிவாடுகின்றன.

ஊரியான் உபகுழு தலைவர் திரு. மு. கந்தசாமி இது சம்பந்தப்பட்ட பொறியியலாளருக்கு புகார் செய்துள்ளார்.

இது தவிர இரணைமடு 3ஆம் வாய்க்கால் பிரதான வாய்க்காலில் நீர்ப்பாசன இலாகாவினால் பராமரித்து வரப்படும் நீர் பூட்டித் திறக்கும் கதவுகள் கள்ளத் திறப்புப் போட்டுத் திருடுவதும் நடைபெறுகிறது. இதனால் சட்டப்படி நீர்ப்பங்குகள் பெற்று வரும் விவசாயிகள் நீர் பெறுவதற்கு முடியாதுள்ளது.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட இலாகா உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து பாதிக்கப்படும் விவசாயிகளு

(12ஆம் பக்கம் பார்க்க)

# பற்றாக்குறையாயின் தொண்டர் ஆசிரியரை அனுமதிக்கலாம்

-யாழ். கல்விப்பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் பற்றாக்குறை இருக்கும் பட்சத்தில் தொண்டர் ஆசிரியர்களைத் தொடர்ந்து சேவையாற்ற பாடசாலை அதிபர்கள் அனுமதிக்க முடியும் இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அண்மையில் வழங்கப்பட்ட புதிய ஆசிரிய நியமனங்களினால் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகச் சேவையாற்றி வந்தவர்கள் கட்டாயமாகச் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டிருந்தார்கள். இவர்களின் சேவை, தேவைப்படுமிடத்து பாடசாலை அதிபர்கள் அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்குத் தடை யேதும் இல்லை.

அ... சா...ண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க

(12ஆம் பக்கம் பார்க்க)




# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நூற்றாண்டு 1890-1990

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## வீதி வேலைப் பொருட்களுக்கான கூறு விலை அறிவித்தல் - 1990

யாழ். மாநகராட்சி மன்றத்திற்கு வீதி வேலைப் பொருட்களுக்கான கண்டகல், கிறசர் சல்லிகள், மண் வகைகள், ஊரி, கிறசர் தூள், மக்கி, தேங்காய் மட்டை (பொச்சு) கிடுகு, சுண்ணாம்பு ஆகியவற்றிற்கான கூறுவிலை விநியோகஸ்தர்களிடமிருந்து கோரப்படுகிறது.

கூறு விலைகள் யாழ். மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 21. 06. 1990 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12. 00 மணிவரை ரூபா 500/- மீளளிக்கப்படும் பிணைப்பணமாகவும் ரூபா 50/-கேள்விப் படிவக் கட்டணமாகவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் இணைப் பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். கிடுகு, தேங்காய் மட்டை, சுண்ணாம்பு போன்ற பொருட்களுக்கு பிணைப்பணம் செலுத்தத் தேவையில்லை. ஒவ்வொரு பொருள் விநியோகத்திற்கும் தனித் தனியாக படிவங்களில் கூறுவிலை குறிக்கப்பட்டு 22. 6. 90 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12. 00 மணிக்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

கூறுவிலை அனுப்பும் கடித உறை அரக்கு முத்திரை இடப்பட்டு ''மராமத்துப் பகுதி வீதி வேலைப் பொருட்களுக்கான கூறுவிலை - 1990'' எனக் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு யாழ். மாநகர அலுவலக மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

வீ. பீ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மராமத்துப் பகுதி
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(B-1111)

## தேவை

### அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம், லிமிட்டெட்.

தபாற் கந்தோரடி - வட்டுக்கோட்டை

பதிவு இல. S 154

(1) முகவர்கள்:-

கமிஷன் அடிப்படையில் அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கும் பணம் வசூலிப்பதற்கும் முகவர்கள் தேவை. 25 வயதிற்கு மேற்பட்ட தகுதி வாய்ந்த இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(2) கணக்கு இலிகிதர் பயிற்சியாளர்கள்:-

இப் பயிற்சி நெறிக்கு பொதுத் தராதரப் பத்திரம் (உயர் தரம்) சித்தியடைந்தவரும், கணக்கியலில் திறமை சித்தி பெற்றவரும் 30 வயதிற்குட்பட்ட இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். பயிற்சிக் காலத்திற்கு அலவன்ஸ் வழங்கப்படும். சுருக்கெழுத்து, தட்டச்சு அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கவர்.

மேற் குறிப்பிட்ட பதவிகளுக்கு கல்வித் தகைமை, நற்சாட்சிப் பத்திரங்கள் போன்ற ஆவணங்களின் போட்டோ பிரதியுடன் 15 - 06 - 1990 க்கு முன்பாக விண்ணப்பிக்கவும்.

- பொது முகாமையாளர்

(B - 1112)

மட்டக்களப்பில்

# ஹமீத் சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் சந்திப்பு

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு சமாதானத் தூதுக்குழு தலைவரான ஏ. ஸி. எஸ். ஹமீத் மட்டக்களப்பிலுள்ளநிலைமைகளைப்பார்வையிட கடந்த திங்களன்று அங்கு சென்றார். அங்கு சட்ட அமுலாக்கல் அதிகாரிகளையும், முஸ்லிம் தூதுக்குழு ஒன்றையும் சந்தித்துப் பேசினார். சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது உள்ள நிலைமை, தாம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் அவற்றைத் தீர்த்து வைப்பதற்குரிய தமது யோசனைகள் ஆகியவற்றை ஜனாப் ஹமீத்துக்கு எடுத்துக் கூறினார்கள்.

மேலும் மட்டக்களப்பு பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தூதுக்குழு அமைச்சரைச் சந்தித்தபோது எதிர்கால அரசியல் ஏற்பாடுகள் வடக்கு-கிழக்குப்பகுதியிலுள்ள சகல சமூகங்களின் அக்கறைகளும், எதிர்பார்ப்புகளுக்கும் மதிப்பளிக்கக்கூடியதாக இருக்க வேண்டும் என்று தூதுக்குழுவினர் வலியுறுத்தினார்கள். மேலும் வடக்கு-கிழக்கு பகுதியை தமது தாயகமாகக் கொண்ட பல்வேறு இனமக்கள் மத்தியில் ஐக்கியத்தையும், புரிந்துணர்வையும்வலுப்படுத்துவதற்கு பதில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அக்குழுவினர் கேட்டுக்கொண்டனர்.

ஜனாப்ஹமீத் கூறுகையில் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கான எதிர்கால அரசியல் ஏற்பாடு இரண்டு பிரதான கோட்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதே ஜனாதிபதி பிரேமதாசாவின் நோக்கமாகும் என்றார்.

அரசாங்கத்திற்கும் மாகாண நிர்வாகத்திற்கும் இடையிலான புரிந்துணர்வையும், உறவுகளையும் வலுப்படுத்துவது.

வடக்கு,கிழக்கு பகுதியிலுள்ள பல்வேறு இனமக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படுத்துவன ஆகியனவே இந்த அடிப்படைக் கோட்பாடாகும்.

உளவளத் துணை நிலையம் நடாத்தும்

குறுகிய கால உளவளத்துணை

## பயிற்சித் திட்டம்

இப் பயிற்சியைத் தொடர விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பயிற்சி வார இறுதி நாட்களில் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படும்.

கிளிநொச்சி, வவுனியா, மன்னார் பகுதிகளிலிருந்து விண்ணப்பிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர்,

''சாந்தியகம்''
21, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு கடித மூலமாகவோ, நேரடியாகவோ தொடர்பு கொள்ளவும். விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி ஆகஸ்ட் 31, 1990 ஆகும்.

- நிறைவேற்றுப் பணிப்பாளர்

(R-305)

இன்னும் இரண்டு நாட்கள் மட்டுமே!

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு

10. 06. 90

ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு மேற்படி கல்லூரி மண்டபத்தில்.

முதலாம் பரிசு: தொலைக்காட்சிப் பெட்டி
இரண்டாம் பரிசு: றலி சைக்கிள்
மூன்றாம் பரிசு: வானொலிப் பெட்டி

ஐம்பது ஆறுதல் பரிசுகள்

★ பழைய மாணவர் சங்க உறுப்பினர் அனைவரையும் அன்றைய தினம் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

யா/ வைத்தீஸ்வர வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

ப. மா. சங்கம்

(B-1018)

### வின்ஸர்(யாழ்)

தினசரி 4-00, 6-45, 9-45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

### நியூ சாந்தி (யாழ்)

தினசரி 4.45, 7.00, 9.3
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும்
ஹாஸ்யச் சித்திரம்
**STUCK ON YOU**
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
(Colour)

### லிடோ (யாழ்)

தினசரி 4-30, 7-00, 9-30
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10-30, 2-30, 6-30, 9-30
**'ALIENS'**
Packed with Action, Thrill & Suspense
வருகிறது
மாவீரன்
(புதிய பிரதி)

### வெலிங்டன் (யாழ்)

தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30, 2.30, 6.30, 9 30
இன்று முதல்
ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற
விசு, லக்ஷ்மி, ரகுவரன், இளவரசி நடித்த
A. V .M இன்
**சம்சாரம் அது மின்சாரம்**
(கலர்)

### மனோகரா - (யாழ்)

தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30. 6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன், S. S. சந்திரன், பேபி ஷாலினி, சரளா
நடித்த
**ராஜா சின்ன ரோஜா**
கவுஸ்புல் காட்சியாக வெற்றிநடை போடுகிறது

06. 06. 90

### ஹரன் - (யாழ்)

தினசரி 4·00, 6.30, 9.30
சனி, ஞாயிறு நாட்களில்
10.30, 2.30, 6.30, 9.30
M G R, ஜெயலலிதா, அசோகன்,சுந்தாராஜன், பண்டரிபாய், சோ
நடித்த
**தேடிவந்த மாப்பிள்ளை**
(புதிய பிரதி)

### ராஜா (யாழ்)

தினசரி 4 00, 7 00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 4 காட்சிகள்
மோகன், ரேவதி, கார்த்திக்
நடித்த
**மௌனராகம்**
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.
அடுத்த புதிய வெளியீடு
கமல், கௌதமி நடித்த
அபூர்வ சகோதரர்கள்

## மேசைப்பந்தாட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வட-மாநிலத்தில் முதல்தர மேசைப் பந்தாட்ட வீரர்களையும், வீராங்கனைகளையும் தர வரிசைப்படுத்துவதற்கான போட்டியொன்று இம் மாதம் இரண்டாம்வார இறுதியளவில் நடைபெறவுள்ளது.

குறிப்பிட்ட போட்டியாளர்களே பங்குகொள்ளும் இவ் விளையாட்டுப் போட்டியில் முதல் மூவருக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.

# கமிஷன் அடிப்படையில் மக்கள் வங்கியில் வேலை

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு ''ஜனசவிய'' கடன் வழங்கும் வேலைகளில் கமிஷன் அடிப்படையில் வேலை வழங்குவதற்கு மக்கள் வங்கி முன்வந்துள்ளது.

ஒவ்வோர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அமுல் நடத்தப்படவுள்ள ஜனசவிய கடன் வழங்கும் வேலைகளில் இவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு மாதாந்தம் 500 ரூபா சம்பளமும் வழங்கப்படும்.

இவர்கள் ஆற்றும் சேவையின் அடிப்படையில் சமிஷனும் பிரத்தியேக கடன் வசதிகளும், துவிச்சக்கரவண்டியும் வழங்கப்படும். பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் அனுசரணையுடன் அந்தந்த மாவட்டங்களில் இத்தெரிவு இடம்பெறும். (மு

(1) முகவர்கள்:-

கமிஷன் அடிப்படையில் அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கும் பணம் வசூலிப்பதற்கும் முகவர்கள் தேவை. 25 வயதிற்கு மேற்பட்ட தகுதி வாய்ந்த இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(2) கணக்கு இலிகிதர் பயிற்சியாளர்கள்:-

இப் பயிற்சி நெறிக்கு பொதுத் தராதரப் பத்திரம் (உயர் தரம்) சித்தியடைந்தவரும், கணக்கியலில் திறமை சித்தி பெற்றவரும் 30 வயதிற்குட்பட்ட இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். பயிற்சிக் காலத்திற்கு அலவன்ஸ் வழங்கப்படும். சுருக்கெழுத்து, தட்டச்சு அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கவர்.

மேற் குறிப்பிட்ட பதவிகளுக்கு கல்வித் தகைமை, நற்சாட்சிப் பத்திரங்கள் போன்ற ஆவணங்களின் போட்டோ பிரதியுடன் 15 - 06 - 1990 க்கு முன்பாக விண்ணப்பிக்கவும்.

- பொது முகாமையாளர்

(B - 1112)

---

ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு மேற்படி கல்லூரி மண்டபத்தில்.

முதலாம் பரிசு: தொலைக்காட்சிப் பெட்டி
இரண்டாம் பரிசு: றலி சைக்கிள்
மூன்றாம் பரிசு: வானொலிப் பெட்டி

ஐம்பது ஆறுதல் பரிசுகள்

★ பழைய மாணவர் சங்க உறுப்பினர் அனைவரையும் அன்றைய தினம் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

யா/ வைத்தீஸ்வர வித்தியாலயம்
யாழ்ப்பாணம். ப. மா. சங்கம்

(B-1018)

---

அடிப்படைக் கோட்பாடா கும்.

## மேசைப் பந்தாட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வட-மாநிலத்தில் முதல்தர மேசைப் பந்தாட்ட வீரர்களையும், வீராங்கனைகளையும் தர வரிசைப்படுத்துவதற்கான போட்டியொன்று இம் மாதம் இரண்டாம்வார இறுதியளவில் நடைபெறவுள்ளது.

குறிப்பிட்ட போட்டியாளர்களே பங்குகொள்ளும் இவ் விளையாட்டுப் போட்டியில் முதல் மூவருக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.

## கமிஷன் அடிப்படையில் மக்கள் வங்கியில் வேலை

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு ''ஜனசவிய'' கடன் வழங்கும் வேலைகளில் கமிஷன் அடிப்படையில் வேலை வழங்குவதற்கு மக்கள் வங்கி முன்வந்துள்ளது.

ஒவ்வோர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அமுல் நடத்தப்படவுள்ள ஜனசவிய கடன் வழங்கும் வேலைகளில் இவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு மாதாந்தம் 500 ரூபா சம்பளமும் வழங்கப்படும்.

இவர்கள் ஆற்றும் சேவையின் அடிப்படையில் சமிஷனும் பிரத்தியேக கடன் வசதிகளும், துவிச்சக்கரவண்டியும் வழங்கப்படும். பல நோக்கு கூட்டுறவு சங்கங்களின் அனுசரணையுடன் அந்தந்த மாவட்டங்களில் இத்தெரிவு இடம்பெறும். (மு


குடாநாட்டின் பிரபல விற்பனையாளர்கள்

எம்மிடம் உங்கள் தேவைகளுக்கேற்றபடி...

உடைந்த அஸ்பெஸ்ரஸ் கூரைத் தகடுகள்...
சலுகை விலைகளில் விற்பனைக்குண்டு.

எல்லா ரக கூரை ஓடுகள் யாவும் எம்மிடம் கிடைக்கும்.

# புனிதவளன் ரிம்பர் டிப்போ

கே. கே. எஸ். வீதி, துர்க்காபுரம், மல்லாகம்.

(B.981)

ஈழநாதம்
வெள்ளி மஞ்சரி
08-06-1990

—கோழை அடிமையாகவே
வாழ விரும்புவான்
குற்றேவல் செய்வதே
அவனுக்கு சந்தோஷம்
விடுதலை-சுதந்திரம் இவற்றின்
அர்த்தம்
அவனுக்குப் புரியாது, புரிந்து
கொள்ள
முயல்வதுமில்லை: ஏனெனில்
அவன்
பகுத்தறிவுள்ள ஜீவனாக
என்றுமே இருக்க
விரும்பியதுமில்லை
—நீ...கோழையா? வீரனா?
—உன் நடவடிக்கைகளை
வைத்துக் காலம்
தீர்மானித்துக் கொள்ளும்

சுபாஷ் சந்திரபோஸ்





## மனோலயம்

பேச்சரங்குகள் பலவமைத்து
பேசியெங்களை ஏச்செறிந்தவர்
கூச்சலிட்டு எம் கொள்கை வீரரை
கொன்றொழித்துள்ளோம் என்று-
கூறினோர்

மூச்சு விட்டு எம் விடுதலைப் போரது
முனைப்புப் பெற்று வளர்ந்திடும்-
-வேளையில் மீண்டுமோர்
பேச்சரங்குக்கு அழைத்துள்ளார்
பேசி எம் குறை தீர்ப்பேன் என்கிறார்
வாச்சிருக்கும் இவ்வமைதி வேளையில்
வாஞ்சை அனைத்தையும் விட்டுக்-
கொடுத்து எம் உயிர்

மூச்சாய்த் திகழ்ந்திடும் ஆயுதம் தன்னினை
ஒப்படைத்திடோம் என்ற பாங்குடன்
பேச்சுத் தெரிந்திடா இந்தப் பாலகன்
பெருமனத்துடன் பற்றியே நிற்கிறான்.

கரவையூர் மோகன்.

பாரதம் புரிந்திட்ட
பாதகம் நொருங்கிட
போர்க்களம் எங்கணும்
புலிகளின் வேட்டொலி
போர்களம் இங்கொரு
ஏர்க்களமானது.
விதையென விழுந்த எம்-
ரங்கனே
இனியொரு விருட்சமாய்-
எழுந்திடு
விழுதுகள் விட்டிடு
நினைவிலே உயிர்த்தெழு
நீள்துயில் கலைத்திடு
சுதந்திர தாயகப் பூமியில்-
நீ ஒரு
சுடர் ஒளிக்கதிர்...

உரையில் பின்வருமாறு கூறுகிறார்.

'வீரத்தின் விளைநில்மான புன்னாலைக்கட்டுவன் பிரதேசத்தின் அரசியல் பொறுப்பாளனாகவே நான் முதன் முதலாக இந்த மண்ணில் காலடி எடுத்து வைத்தேன். படிப்படியான வளர்ச்சிக்கு உறுதுணையாகவிருந்து ஊக்கமும் உற்சாகமும் அன்பும் ஆதரவும் தந்தவர்கள் பலர். அவர்களுள் மிகச்சிறப்பாக எம்மீது அன்புபாராட்டி ஆதரித்து வந்த ரங்கன் அண்ணாவையும் அவரின் வீர அன்னையையும் குடும்பத்தாரை...

...பும் உணவு வகைகளையும் தேநீர் கோப்பி போன்றவற்றையும் இவனே எடுத்து வந்து கொடுப்பான். அத்தோடு இராணுவம் முகாமைவிட்டு வெளியே வர முயற்சித்த போதெல்லாம் விடுதலைப்புலிகளுக்கும் - இலங்கை இராணுவத்திற்கும் இடையில் பலத்த சண்டை மூண்ட போதெல்லாம் அவர்களைத் தடுத்து நிறுத்தி திருப்பி முகாம்களுக்குள் அனுப்பும் பணியிலும் இவன் தீவிரமாகச் செயல்ப்பட்டுள்ளான். இவ்வாறான பல யுத்தங்களில் மறக்க முடியாத ஒரு யுத்தம் ஒரு நாள்...


...திற்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தின போது கப்டன் லோலோவுடன் சேர்ந்து கப்டன் ரங்கன் பல தாக்குதல்களில் ஈடுபட்டான். வடக்கு புன்னாலைக் கட்டுவன் சந்திக்கு அருகில் 1987 ஒக்டோபர் 16ஆம் திகதி இவனால் மேற்கொள்ளப்பட்ட ஒரு தாக்குதலில் 7 இந்திய சிப்பாய்கள் மாண்டு போயினர். ஒரு கவச வாகனம் கண்ணிவெடியில் சிக்கிச் சேதமுற்றது. இதே போல 1988 தை மாதம் 14ஆம் திகதி தைப் பொங்கல் தினத்தன்று இவனால் இதே பலாலி வீதியில்...

...தியா ஏற்றுக் கொண்ட பணிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது' என்பதே இப்பேட்டியில் அவரால் கூறப்பட்ட மிக முக்கியமான வாக்கியமாகும். இக்கருத்து இந்திய அரசியலின் மேல்மட்டத்திலும் ஒரு புயலை கிளப்பி விட்டது.

### அத்துலத் முதலி கருத்து

இந்தியப் படையின் செக்மேற் மூன்றாம் கட்டம் தோல்வியுற்றதைத் தொடர்ந்து அப்போதைய தேசிய பந்தோபஸ்து அமைச்சராகவிருந்த அத்துலத் முதலி அவர்கள். 1988 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், 23 ஆம் திகதி கண்டியில் இடம்பெற்ற ஒரு கூட்டத்தில் பேசும் போது பின்வருமாறு சொன்னார்.

''இந்திய இராணுவம் இங்கிருப்பதை இந்திய மக்களே விரும்பவில்லை. அவர்களுக்கு எதிராக இந்தியாவில் எதிர்ப்புணர்வுகள் தோன்றியுள்ளன. விரைவில் அவர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேற வேண்டி ஏற்படும். கெரில்லா யுத்த முறையை அடக்குவதோ முறியடிப்பதோ கஷ்டமானது. இனப் பிரச்சினையை இராணுவ நடவடிக்கை மூலம் தீர்த்து வைக்க முடியாது'



கப்டன் ரங்கன்

மாதம் மூன்றாம் திகதி தெல்தெனியாவில் இடம்பெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும் போது எதிர்க்கட்சித் தலைவியான சிறிமாவோ அம்மையார் பின்வருமாறு சொன்னார்.

'எமது நாட்டு மக்களின் ஒரு பிரிவினரை அந்நிய நாட்டின் இராணுவம் அடக்குவதை அடிபணிய வைப்பதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. இன்றைய ஜனாதிபதியின் அழைப்பின் பேரிலேயே வடக்கு-கிழக்கிற்கு இந்தியப்படை வரவழைக்கப்பட்டது. அங்கு எமது மக்கள் அடிமைப்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு வருகிறார்கள். இதை அனுமதிக்க முடியாது'

இவ்வாறாகத் தென்னிலங்கையில் இந்தியப்படைகளுக்கு எதிரான கருத்துக்கள் கட்சி மாச்சரியங்களைக் கடந்த நிலையில் வலுவடையவே இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாகாண சபையை தோற்றுவித்து வடக்கு-கிழக்கில் தான் விரும்பும் ஒரு பொம்மை அரசைத் தோற்றுவிக்க இந்தியா முழுமூச்சுடன் இறங்கியது.

இதற்காக மூன்று வழிகளை இந்தியா மேற் கொண்டது. முதலாவது வடக்கு - கிழக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்தும்படி இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுத்தது. இரண்டாவது தனக்கு ஆதரவான கூலிப்படைகளைக் கொண்டு விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களைக் கொன்றுவித்தது. இவ்வாறு செய்வதன் மூலம் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக யாருமே தேர்தலில் போட்டியிடாமற் செய்வதன் மூலம் தான் விரும்பும் பொம்மை அரசை நிறுவுவது அதன் பிரதான நோக்மாகும். மூன்றாவது இந்தியா வன்னிப்பகுதியில் புதிதாக ஒரு இராணுவ நடவடிக்கையை மேற் கொண்டது அதற்கு ''ஒப்றேசன் மகாதியாகம்'' எனப் பெயரிட்டது.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது சுமார் 2000 தியாக ஆடுகள் இந்தியாவிலிருந்து தருவிக்கபபட்டன. விடுதலைப் புலிகளின் மிதிவெடிகளுக்குப் பயந்த இந்திய துருப்புகள் இந்த தியாக ஆடுகளை முன்னே விட்டு தாம் பின்னே சென்றனர்.

மிதிவெடியில் சிக்கிய ஆடுகள் நாலாபக்கமும் சிதறி ஓடத் தொடங்கின. இந்த நடவடிக்கைக்கு எதிராக எதிர்த் தாக்குதலில் ஈடுபட்ட படையணியில் பங்கு பற்றிய கப்டன் ரங்கன் கலைந்தோடிய ஆடுகளையும் சாய்த்துக் கொண்டு சுமார் பதினேழு மைல் காட்டுப் பாதைகளினூடாக நடந்து போராளிகளின் ஒரு முகாமைச் சென்றடைந்தான். அங்கு இரவிரவாகக் கண்விழித்துத் தான் கொண்டு வந்த ஆடுகளைப் போராளிகளின் நீண்டகால உணவிற்கு ஏற்றமுறையில் பதப்படுத்தும் வேலையையும் ஓர் இரவில் செய்து முடித்தான்.

## நேதாஜி

### இறுதித்தாக்குதல்.

1989 முற்பகுதி தொடக்கம் மீண்டும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இயக்கப்பணிகளில் கப்டன் ரங்கன் ஈடுபட்டான். புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் பொதுமக்களுக்கு அடிக்கடி தொல்லைகொடுத்து வந்த இந்தியப் படைகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை ஒன்று 22 - 4 - 89 அன்று விடுதலைப் புலிகளால் மேற் கொள்ளப்பட்டது. புத்தூர் - நிலாவரை வீதியில் வாதரவத்தை அருகில்வைத்து இராணுவத் தொடர்வண்டி மீது விடுதலைப்புலிகளால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதலில் ஐந்து இந்தியத் துருப்புக்கள் மாண்டனர். அஞ்சா நெஞ்சத்துடன் வெகுவேகமாக முன்னேறி யுத்தம் செய்த கப்டன் ரங்கன் எதிரியின் குண்டடிபட்டு களத்திலேயே வீரமரணமடைந்தனன்.

புன்னாலைக்கட்டுவனில் பிறந்து வன்னியில் களம்பல கண்டு புத்தூரில் மறைந்த கப்டன் ரங்கன் இந்திய செங்குருதி புத்தூரின் செம் மண்ணுடன் இரண்டறக் கலந்தது.

''இன்றைய செந்நீர்த்தீர்த்...

**பா**ரதம் புரிந்திட்ட
பாதகம் நொருங்கிட
போர்க்களம் எங்கணும்
புலிகளின் வேட்டொலி
போர்களம் இங்கொரு
ஏர்க்களமானது.
விதையென விழுந்த எம்-
ரங்கனே
இனியொரு விருட்சமாய்-
எழுந்திடு
விழுதுகள் விட்டிடு
நினைவிலே உயிர்த்தெழு
நீள்துயில் கலைத்திடு
சுதந்திர தாயகப் பூமியில்-
நீ ஒரு
சுடர் ஒளிக்கதிர்...

புன்னாலைக்கட்டுவன் கப்டன் ரங்கன் (துரைசிங்கம் ஜெயரங்கன்) போராட்டத்திற்குள் உள்வாங்கப்பட்ட போராட்டப்பின்னணியானது வித்தியாசமானது. இவன் வாழ்ந்த சூழல் போராட்டத்தின் ஆரம்ப நிலையில் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் கரந்துறை வாழ்வை மேற்கொண்டு போராட்டம் பற்றியசிந்தனையில் போராட்டத்தில் நகர்த்தல் பற்றிய திட்டங்களைத் தீட்டிய இடமாகும். அதற்கான முன்னோடித் தயாரிப்பு வேலைகளைமேற்கொண்டிருந்த இடமாகும் கப்டன் ரங்கனின் உறவினர்களில், நண்பர்கள் பலர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களாகவிருந்து எதிரிகளுடன் மோதி களத்தில் வீர மரணத்தைத் தழுவிக்கொண்டிருக்கிறார்கள். கப்டன் றொபின், லெப்டினன்ட் வாசன், கப்டன் லோலோ போன்ற போராளிகள் சரித்திரம் படைத்த சாதனையாளர்களாகும். கப்டன் ரங்கனும் இப்போராளிகள் வாழ்ந்த போராட்ட மையத்துள் வாழ்ந்தவனாகும். இவனது வீரம் தந்தைவழி பரம்பரைச் சொத்து. தாயார் குஞ்சி அன்ரி அவர்களோ விடுதலை இயக்கத்தின் தீவிர அபிமானி. வாசனின் தாயார் திருமதி மாணிக்கவாசகர், மேஜர் முரளியின் தாயார் திருமதி வேலுப்பிள்ளை ஆகியோர் இவனுக்கு உறுதுணையாக நின்ற போராட்ட சக்திகளாவார்கள். இவர்கள் ஊட்டிய வீரத்தால் இன்னும் பல போராளிகள் உயர்ந்து வளர்ந்தார்கள்.

## இராஜன் உரை

தற்போதைய யாழ்ப்பாண மாவட்ட மக்கள் முன்னணி அமைப்பாளர் இராஜன் அவர்கள் கப்டன் ரங்கனின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலியின் போது ஆற்றிய உரையில் பின்வருமாறு கூறுகிறார்.

'வீரத்தின் விளைநிலமான புன்னாலைக்கட்டுவன் பிரதேசத்தின் அரசியல் பொறுப்பாளனாகவே நான் முதன் முதலாக இந்த மண்ணில் காலடி எடுத்து வைத்தேன். படிப்படியான வளர்ச்சிக்கு உறுதுணையாகவிருந்து ஊக்கமும் உற்சாகமும் அன்பும் ஆதரவும் தந்தவர்கள் பலர். அவர்களுள் மிகச்சிறப்பாக எம்மீது அன்புபாராட்டி ஆதரித்து வந்த ரங்கன் அண்ணாவையும் அவரின் வீர அன்னையையும் குடும்பத்தாரையும் என் இதயத்தில் வைத்து வணங்குகிறேன்.'

– ஆதாரம் வீரகேசரி 1-5-90



## சென்றியில் ரங்கன்

1985 - 1987 ஆம் ஆண்டுக் காலகட்டத்தில் குடாநாடு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தபோது பலாலி இராணுவ முகாமுக்குத் தெற்குப் பக்கமாகப் போடப்பட்டிருந்த சென்றியில் நின்ற போராளிகளுக்கு உறுதுணையாக சென்றிக்கடமைகளைச் சிறப்பாகச் செய்வதில் பெரும் ஆர்வம் காட்டிய ரங்கன் தினமும் நாள் தவறாமல் இரவில் சென்றிக்கு வந்து தனது பங்களிப்பை நல்குவதில் என்றுமே பின்நின்றதில்லை. இவனது தாயார் இரவில் சென்றிக் கடமையில் நிற்கும் போராளிகளுக்குத் தயாரித்து அனுப்பும் உணவு வகைகளையும் தேநீர் கோப்பி போன்றவற்றையும் இவனே எடுத்து வந்து கொடுப்பான். அத்தோடு இராணுவம் முகாமைவிட்டு வெளியே வர முயற்சித்த போதெல்லாம் விடுதலைப்புலிகளுக்கும் - இலங்கை இராணுவத்திற்கும் இடையில் பலத்த சண்டை மூண்ட போதெல்லாம் அவர்களைத் தடுத்து நிறுத்தி திருப்பி முகாம்களுக்குள் அனுப்பும் பணியிலும் இவன் தீவிரமாகச் செயல்பட்டுள்ளான். இவ்வாறான பல யுத்தங்களில் மறக்க முடியாத ஒரு யுத்தம் ஒரு நாள் நடந்தது.

## துணிச்சலான ஒரு செயல்

1987 பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி விடுதலைப் புலிகளுக்கும் -இராணுவத்திற்கும் இடையில் ஒரு பெரிய மோதல் காலை ஏழு மணி தொடக்கம் மாலை ஐந்து மணி வரை இடம்பெற்றது. வசாவிளான், பலாலி, புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இடம் பெற்ற இந்த மோதலில் விடுதலைப் புலிகளால் ஒரு கவசவாகனம் சேதமாக்கப்பட்டது. வானத்தில் பறந்து கொண்டிருந்த உலங்கு வானூர்தி ஒன்று எரிகுண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியது. எதிரிகளின் இந்த தாக்குதலில் இளவாலையைச் சேர்ந்த வெள்ளை (எட்மண்ட் ரெஜினோல்ட்) காரைநகரைச் சேர்ந்த கபில் (பரமசாமி உருத்திரசிங்கம்) ஊரெழுவைச் சேர்ந்த அமுதன் (பேதுருப்பிள்ளை இராசேஸ்வரன்) ஆகிய மூன்று விடுதலைப்புலிகள் வீரமரணமடைந்தனர். இவர்களில் வெள்ளை என்ற போராளியின் இறந்த உடலை மீட்டு எடுப்பது சிரமமாகவிருந்தது. முன்னேற முயன்று கொண்டிருந்த இராணுவத்தை அச்சுதன் (குமாரலிங்கம் வல்வெட்டித்துறை)என்ற போராளியும் இன்னுமொரு போராளியும் தடுத்து நிறுத்தி போர் புரிந்து கொண்டிருந்தனர். இந்த இக்கட்டான நிலையில் அங்கே ஓடோடி வந்த கப்டன் ரங்கன் வெள்ளையின் இறந்த உடலை மீட்டு எடுத்ததோடு போராடிக் கொண்டிருந்த இரண்டு போராளிகளையும் காப்பாற்றினான்.

## இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட மோதல்

1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் விடுதலைப் புலிகளுக்கும்-இந்திய இராணுவத்திற்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தின போது கப்டன் லோலோவுடன் சேர்ந்து கப்டன் ரங்கன் பல தாக்குதல்களில் ஈடுபட்டான். வடக்கு புன்னாலைக் கட்டுவன் சந்திக்கு அருகில் 1987 ஒக்டோபர் 16ஆம் திகதி இவனால் மேற்கொள்ளப்பட்ட ஒரு தாக்குதலில் 7 இந்திய சிப்பாய்கள் மாண்டு போயினர். ஒரு கவச வாகனம் கண்ணிவெடியில் சிக்கிச் சேதமுற்றது. இதே போல 1988 தை மாதம் 14ஆம் திகதி தைப் பொங்கல் தினத்தன்று இவனால் இதே பலாலி வீதியில் தெற்குப் புன்னாலைக்கட்டுவன் சந்திக்கு அருகில் வைத்த சிலிண்டர் வெடி தாக்குதலில் அவ்வழியாக வந்த ஐந்து C.R.P பொலிசார் காயமுற்றனர். இணைந்து விடுதலைப் பணிகள் செய்த கப்டன் லோலோவையும் கப்டன் ரங்கனையும் போராளிகள் காந்தமும் இரும்பும் என நகைச்சுவையாகப் பெயரிட்டு அழைப்பார்கள்.

## இந்தியாவுக்கு எதிரான நோதியம்

1988ஆம் ஆண்டு மாசி பங்குனி மாதங்களில் கப்டன் ரங்கன் வன்னிப் பிராந்தியத்தில் இந்திய இராணுவத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பல தாக்குதல்களில் பங்கு பற்றினான்.


விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட 'செக்மேற்' எனப்படும் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கையின் மூன்றாம் கட்டமும் படுதோல்வியில் முடிந்த போது தென்னிலங்கை அரசியலிலும் இந்தியப் படைகளுக்கு எதிரான கருத்துக்கள் பல சிங்கள அரசியல் தலைவர்களிடமிருந்து வெளிவரத் தொடங்கின.

## முதலில் ஜே. ஆர்.

1988ஆம் ஆண்டு ஜூலை மாதம் முல்லைத்தீவு பகுதியில் செக்மேற் இரண்டாம் கட்டம் என்ற தேடுதல் நடவடிக்கை தோல்வியுற்ற கையோடு அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர் 1988 ஜூலை மாதம் 24ஆம் திகதி கொழும்பிலிருந்து வெளிவரும் 'திஐலண்ட்' பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டியில் பின்வருமாறு சொன்னார்.

'India had failed to fullfill its Functions under the Accord' அதாவது 'இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்

வைக்க முடியாது'



கப்டன் ரங்கன்

இதே காலப்பகுதியில் வடபகுதியில் பிரஜைகள் குழுவின் இணைப்புக் குழுவினர் அன்னையர் முன்னணியின் ஆதரவுடன் ஆறு அம்சக் கோரிக்கையை முன்வைத்து யுத்த நிறுத்தம் கோரி யாழ்ப்பாணத்தில் 1988 ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி ஏற்பாடு செய்த ஹர்த்தால் பூரண வெற்றியைத் தந்தது.

இலங்கையின் வடபகுதியிலும் தென்பகுதியிலும் ஏககாலத்தில் இந்தியப்படைகளின் இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிராக கருத்துக்களும் போராட்டங்களும் இடம் பெறலாயிற்று.

## பிரேமாவின் கருத்து

1988 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் ஹொங்கொங்கிற்கு விஜயம் செய்த அப்போதைய பிரதமர் பிரேமதாசா அங்கு பத்திரிகையாளர் மத்தியில் பேசும் போது பின்வருமாறு சொன்னார்.

'வடக்கு - கிழக்கில் சகஜ நிலையைக் கொண்டு வருவதற்காக அமைதிப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது பல அத்துமீறல்களைப் புரிந்துள்ளனர். இலங்கைப்பாதுகாப்புப்படையினரைப் பாராட்டும் வகையிலான கருத்துக்களைக் கூட வடக்கு கிழக்கு மக்கள் தெரிவிற்குமளவுக்கு இந்தியப் படையினரின் அத்துமீறல்கள் இருந்துள்ளன. சுயாதிபத்தியம் கொண்ட எந்தவொரு நாட்டிலும் வெளிநாட்டுப்படை ஒன்றின் பிரசன்னம் எப்பொழுதுமே எரிச்சல் ஊட்டுவதாகும்'

## சிறிமா கருத்து

ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல சிங்கள எதிர்க்கட்சியிலிருந்தும் இந்தியப்படைகளுக்கு எதிரான குரல்கள் ஒலிக்கலாயின' 1988 ஆம் ஆண்டு ஒக்டோபர்

கில் மாகாண சபைத் தேர்தலை நடத்தும்படி இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுத்தது. இரண்டாவது தனக்கு ஆதரவான கூலிப்படைகளைக் கொண்டு விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களைக் கொன்றுவித்தது. இவ்வாறு செய்வதன் மூலம் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக யாருமே தேர்தலில் போட்டியிடாமற் செய்வதன் மூலம் தான் விரும்பும் பொம்மை அரசை நிறுவுவது அதன் பிரதான நோக்மாகும். மூன்றாவது இந்தியா வன்னிப்பகுதியில் புதிதாக ஒரு இராணுவ நடவடிக்கையை மேற் கொண்டது அதற்கு ''ஒப்றேசன் மகாதியாகம்'' எனப் பெயரிட்டது.

## ஒப்றேசன் மகாதியாகம்.

வன்னிப்பகுதியில் 1988 ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் ''ஒப்றேசன் மகாதியாகம்'' என்ற பெயரில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்தியாவில் ஓர் இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்டது.

தலில் ஐந்து இந்தியத் துருப்புக்கள் மாண்டனர். அஞ்சா நெஞ்சத்துடன் வெகுவேகமாக முன்னேறி யுத்தம் செய்த கப்டன் ரங்கன் எதிரியின் குண்டடிபட்டு களத்திலேயே வீரமரணமடைந்தனன்.

புன்னாலைக்கட்டுவனில் பிறந்து வன்னியில் களம்பல கண்டு புத்தூரில் மறைந்த கப்டன் ரங்கன் இந்திய செங்குருதி புத்தூரின் செம்மண்ணுடன் இரண்டறக் கலந்தது.

''இன்றைய செந்நீர்த்தீர்த்தம் நாளைய சுதந்திரப் பூங்காவனம்'' என்று சிரித்திரன் சிவா குறிப்பிட்ட கருத்துக்கு கப்டன் ரங்கன் அர்ப்பணிப்பு மேலும் சிறப்பைக் கொடுத்தது. அவனின் தியாக வாழ்வை எமக்கு ஒரு பாடவிதான மாக்கியுள்ளது என்றால் அது மிகையாகாது □

---

## வள்ளுவ வாக்கியம்

நிலம் !

பூமியை உயிரற்ற அஃறிணையிற் கூற முடியவில்லை. இலட்சக் கணக்கான உயிரினங்களை கோடிக் கணக்கான வருடங்கள் வளர்த்து வாழ்வித்து மகிழும் புவியை நிலம் எனும் நல்லாள் என - தாய் என - வணங்கவே முடிகிறது. இந்தப் பாசத்துடன் எழுவதே மனித வாழ்வு! வரலாறாய் மிளிர்வதும் இந்த உன்னத உணர்வே!

எனவே மனிதனின் கூப்பும் கரங்கள் பூமியைத் தொழுகின்றன. தொழுது உழுது உணவெனும் வாழ்வின் ஆதாரத்தைத் தமக்கு மட்டுமின்றி உலகம் முழுதுக்கும் வழங்கி மகிழ்கின்றன! உழவன் மேலோன் ஆகிறான். பரிந்து மகிழும் தாயென பூமித்தாயும் அனைத்தையும் வழங்குகிறாள். இந்தப் பரிவும் பாசமும் ஆக்க ஈகையும் ஈடிணையற்றது! அனைத்திலும் சிறந்தது!

பாடுபடுவோனே உண்மைக்குரியவன். உயர்வுக்கும் உரியவன். இவற்றை மறந்து சோம்பியிருந்தபடி எது மில்லையே என்ற வறுமையில் வாடுபவனைப்பார்த்து நிலமகள் நகைக்கின்றாள்; வேதனையோடு சிரிக்கின்றாள்! வேறெது செய்ய முடியும்?

பாடுபடும் தன்மையை இழந்தவன் தன் கரங்களை இழந்தவன். நிலத்தை இழந்தவன் தன் வாழ்வை இழந்தவன் தானே? (குறள் 1040)

நாக பத்மநாதன்.

ஆய்வு



# தமிழீழத்தின் தேசிய வளங்களும் பொருளாதார மேம்படுத்தலும் -1

நீண்ட தொடர்ச்சியான தேசிய ஒடுக்குமுறையின் அழுத்தங்கள் தமிழீழ மக்களின் பொருளாதார வாழ்வில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தின. சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியிலிருந்து எமது மண் அபிவிருத்தித் திட்டங்களிலிருந்து புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளதுடன் இனக்கலவரங்களைத் தூண்டிவிட்டும், ஆயுதபடைகளை ஏவிவிட்டும், சிங்கள அரசுகள் தமிழ் மக்களின் சொத்துடமைகளுக்குப் பேரழிவை ஏற்படுத்தின. இவ்விதம் திட்டமிட்டமுறையில் ஈழத்தமிழ் மக்களின் பொருளாதார வாழ்வு சீரழிக்கப்பட்டதால் தமிழீழப் பொருளாதாரப் புனர்நிர்மாணப் பணியானது முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

## திட்டமிட்ட பொருளாதாரப் புறக்கணிப்பு

தமிழீழத்தின் பொருளாதார வளங்கள் தொடர்ந்து வந்த சிங்கள அரசுகளினால் சுரண்டப்பட்டு வந்துள்ளன. சிங்கள அரசுகள் தமிழீழ மண்ணிலிருந்து பெறப்படும் உற்பத்தி மூலதனங்களைக் கொண்டு சிங்களப் பகுதிகளில் கைத்தொழில் முயற்சிகளை மேற்கொள்வதன் மூலமும், இவ்வுற்பத்தி மூலதனங்களின் ஏற்றுமதியில் பெறப்படும் அந்நிய செலாவணியை சிங்களப் பகுதிகளின் அபிவிருத்திக்குப் பிரயோகிப்பதன் மூலமும் திட்டமிட்ட ரீதியில் தமிழீழத்தின் மீதான இப்பொருளாதாரச் சுரண்டலை நடைமுறைப்படுத்தி வந்தன.

இதன் நோக்கங்களாக:-

1) தமிழ் மக்கள் தமது அத்தியாவசியத் தேவைகளுக்குக் கூட சிங்களப் பிரதேசங்களையே நம்பியிருக்க வேண்டிய நிலையினைச் செயற்கையாகத் தோற்றுவித்தல்.

2) தமிழ்ப் பகுதிகளில் ஏற்படக்கூடிய தொழில்வாய்ப்புக்களைக் குறைத்து, அவற்றைச் சிங்களப் பகுதிகளுக்கு இடம் பெயர்த்தல்.

3) தமிழ் பிரதேசம் பொருளாதார வளங்களில் பின்னடைவானது என்ற மாயையை உருவாக்குதல்.

என்பவற்றைக் குறிப்பிடலாம். இவ்வகையில் தமிழ் பிரதேசங்களில் புதிய கைத்தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முயன்ற தனியார் நிறுவனங்கள் அரசினால் புறக்கணிக்கப்பட்ட அதேவேளை அவற்றைச் சிங்களப் பகுதிகளில் மேற்கொள்வதற்கு மறைமுகமாக ஊக்குவிக்கப்பட்டனர்.

ஸ்ரீலங்கா அரசுகளின் இத்திட்டமிட்ட பொருளாதாரப் புறக்கணிப்பிற்கும், சுரண்டலிற்கும் உதாரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

> தமிழீழ விடுதலைப் புலிகளின் சோசலிசப் பொருளாதாரத் திட்டமானது சுரண்டல் முறைகள் அற்ற, ஏற்றத்தாழ்வுகள் ஒழிந்த சமத்துவ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டது. இக்கோட்பாட்டைச் செயற்படுத்தும் வகையில் எமது பொருளுற்பத்தி வடிவங்கள் நெறிப்படுத்தப்பட வேண்டும். இதன் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அங்கமான தமிழீழ ஆய்வு நிறுவனம் (Research Organisation of Tamil Eelam) தமிழீழத்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதை நோக்காகக்கொண்டு செயற்பட்டு வருகிறது. நெருக்கடிகாலப் பொருளாதாரத் திட்டங்கள், நீண்டகாலப் பொருளாதாரத் திட்டங்கள, ஆராய்ச்சிகள், ஆய்வுகள, மாநாடுகள என Root இன் செயற்பாடுகள் விரிவடைந்து வருகின்றன.
>
> இக் கட்டுரையானது சிங்கள அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட பொருளாதாரப் புறக்கணிப்புகளையும், Root இன் செயற்பாடுகள். எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் சுருக்கமாக ஆய்வு செய்கின்றது.

அ) சீமெந்து தயாரிப்பின் முக்கிய மூலப்பொருளான சுண்ணாம்புக்கல் எமது மண்ணிலிருந்தே பெருமளவில் எடுக்கப்படுகின்றது. சுண்ணாம்புக்கல் அகழ்வதால் ஏற்படும் சூழல் பாதிப்புகளை (பயிர்ச்செய்கைப் பாதிப்பு, நன்னீர் உப்புநீராகும் அபாயம்) தவிர்ப்பதிலோ அன்றிக் குறைப்பதிலோ அக்கறை காட்டாது இருந்து வருதல்.

ஆ) ஸ்ரீலங்காவின் ஏற்றுமதியில் முக்கிய பங்கு வகிக்கும் கடல் வாழ் உயிரினங்களில் (இறால், கடலட்டை, சருவாடு) பெரும் பகுதி தமிழீழப் பகுதிகளிலிருந்தே பிடிக்கப்படுகின்ற போதும் பதனிடல், பெட்டிகளிலடைத்தல் ஆகிய வேலைகள் பெரும்பாலும் சிங்களப் பிரதேசங்களிலேயே மேற்கொள்ளப்படல்.

(இ) மகாவலி கங்கையை சிங்களப் பகுதிகளுக்குத் திசை திருப்பும் திட்டத்தின் கீழ் பெருமளவு பணத்தை முதலீடு செய்துள்ள அரசானது வரண்ட பிரதேசமான வட பகுதியின் நீர்ப்பாசனத்திற்கு அவசியமான சிறு அணைகள் நீர்த்தேக்கங்கள் கட்டுவதைக் கூடப் புறக்கணித்து வருதல்

ஈ) கந்தளாய், அம்பாறை ஆகிய பாரம்பரிய தமிழ் பிரதேசங்களிலுள்ள சீனித் தொழிற்சாலைகளில் கடமையாற்றும் 2000 (ஏறக்குறைய) தொழிலாளர்களில் 10வீதத்திற்கும் குறைவானவர்களே தமிழர்களாவர்.

உ) பன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின்கீழ் தமிழ் பிரதேச அபிவிருத்திக்கான ஒதுக்கீடுகள் சிங்களப் பகுதிகளுக்கே செலவிடப்பட்டு வருதல். தவிர வெளிநாட்டு உதவிகளைக் கொண்டு மேற்கொள்ளப்படும் வீடமைப்பு மற்றும் நகரப் புனருத்தாரணங்களும் சிங்களப் பகுதிகளில் மேற்கொள்ளப்படல்.

ஊ) கடற்பாதுகாப்புவலயம் என்ற பெயரில் தமிழீழப் பகுதிகளைச் சுற்றியுள்ள கடற்பிராந்தியங்களில் மீன்பிடி தடுக்கப்பட்டிருத்தல்,

எ) தமிழீழத்தின் உல்லாசப் பயணத்துறை இனப்போராட்டங்களுக்கு முன்பிருந்தே புறக்கணிக்கப்பட்டு வருதல்.

மேற் குறிப்பிடப்பட்டவை தமிழ்ப் பிரதேசம் மீதான சிங்கள அரச பொருளாதாரக் கொள்கையின் சில உதாரணங்களாகும். இப் பொருளாதாரக் கொள்கையின் மூலம் தமிழ்ப் பிரதேசங்கள் பொருளாதார வளங்களற்றவை என்னும் மாயையை ஏற்படுத்துவதில் சிங்கள அரசுகள் ஓரளவு வெற்றியடைந்துள்ளன என்றே கருதவேண்டும் தமிழீழம் தனியொரு நாடாகத் தனது பொருளாதாரப் பளுவைத் தாங்கும் வளங்களைக் கொண்டதா எனும் சந்தேகம் தமிழ் மக்களிற் பலருக்கு இன்றும் காணப்படுவது சிங்கள அரசுகள் ஏற்படுத்திய மாயையின் வெளிப்பாடுகளே ஆகும்.

தமிழீழம் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள் எவை? இவற்றை முகங்கொடுப்பதற்கு ஏற்ற உற்பத்திச் சாதனங்களை நாம் கொண்டிருக்கிறோமா? இவ்வுற்பத்திச் சாதனங்களின் அடிப்படையில் நாம் மேற்கொண்டு வரும் ஆய்வுகள் எத்தகையன என்பதைச் சுருக்கமாகத் தொடர்ந்து ஆராய்வோம்.

சுதந்திரத் தமிழீழம் தனது தேசியப் பொருளாதாரப் புனர்நிர்மாணத்தை வெற்றிகரமாகச் சாதிக்கும் வளங்களைக் கொண்டிருக்கிறது. இவற்றைச் சரியான முறையில் திட்டமிட்டு உபயோகிப்பின், தமிழீழம் சுயபூர்த்தியடைந்த நாடாக விளங்கும். தமிழீழ ஆய்வு நிறுவனமானது எமது மண்ணின் அரசியல். சமூக பொருளாதார வாழ்விற்கு ஏற்ற முறையில் தனது வேலைத் திட்டங்களை இரண்டு வகையாக மேற்கொண்டு வருகிறது.

1) நெருக்கடிகாலப் பொருளாதாரத்திட்டம்.

2) நீண்டகாலப் பொருளாதாரத் திட்டம்.

## நெருக்கடிகாலப் பொருளாதாரத் திட்டம்

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் 1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டமானது போராட்டத்தின் நெருக்கடியான காலத்தில் மக்களின் அத்தியாவசிய தேவையை ஓரளவேனும் பூர்த்தி செய்து கொள்வதை நோக்கமாகக் கொண்டது. கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்ட பாரிய பொருளாதாரத் தடைகளின் போது இந் நெருக்கடிகாலப் பொருளாதாரத்திட்டமானது வெற்றிகரமாகப் பரீட்சிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் சில அம்சங்களாவன:-

1) சிறு கைத்தொழில் முயற்சிகளான சவர்க்காரம், உடை, குளிர்பானம், ஜாம், பால்மா, வெண்கட்டி, பழரசம் என்பன உள்ளூரிலேயே உற்பத்தி செய்யப்பட்டன.


2) விலங்கு வளர்ப்புத்துறை, பால் உற்பத்தி என்பவற்றில் மக்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

3) விவசாய நிலமானது எல்லைநிலம், தோட்டநிலம், மேட்டுநிலம், வயல் நிலம் எனப்பிரிக்கப்பட்டு ஒவ்வொரு நிலத்திற்கும் ஏற்ற விஞ்ஞான ரீதியிலான உற்பத்திகளைப் பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

4) களஞ்சியப்படுத்தக் கூடிய கிழங்கினங்கள் எண்ணெய் வடித்தெடுக்கக் கூடிய எள்ளு நிலக்கடலை, ஆமணக்கு, சூரியகாந்தி என்பனவற்றின் உற்பத்தியில் கவனம் செலுத்தப்பட்டது.

(தொடரும்)

நன்றி:- சுதந்திரதாகம்



# போர்க்கால நிகழ்வுகள்

இன்னும் சோகம் இழைகிறது
அன்று,
மாரிப்பருவத்தின் மழை நாள்.
எங்கும் துயரம் பூசிய காற்று
அசைந்தும் அசையாமலும்
இரத்தத்தால் தோய்ந்த இரவு
வௌவாலும் கோட்டானுமே
பயந்த இருளில்
எனது கிராமம் முற்றுகையிடப்பட்டது.

இருளும் ஒளியும்
கலந்து பூசிய அதிகாலை விரிவில்
ஒவ்வொரு வீட்டிலுமிருந்தும்
கைதுகள் நிகழ்ந்தன.

வேலியைப் பிரித்து அடாத்தாக வந்தவர்
என்னை
இழுத்தெறிந்தனர் வெளியே.
மார்பினில் துப்பாக்கியை நீட்டியபடிக்கு,
'சொல்!
எங்கே அவர்கள்?
மறைவிடம் எங்கே? அதட்டினர்.

ஒவ்வொரு குடிலும் போர்ப் பாசறையே
இந்த மண்ணின்
ஒவ்வொரு துகளும் போரின் முனைவென்பதறியார்

அந்த இரவினை விட
எனது மௌனம் வலியது.

சப்பாத்துக்காலினால்
உதைத்துத் தள்ளினர்
முகத்தினில்
நரம்புகள் புடைக்க ஓங்கியறைந்தனர்.
ஜீப்பின் பின்புறம் கட்டி
இழுத்துச் சென்றனர்.
எனது மெய்யினில்
நசிந்தன செவ்விரத்தம் பூக்கள்
கொடியது எனினும்
இது புதிதல்ல.

உன்னையும் அவர்கள்
இப்படித்தான் செய்தனர்
எனது மக்களில் பலரும்
இவ்வாறே ஆயினர்.

உனதும் எனதும் வயல்களை
தீயிட்டுக் கொளுத்தினர்
வேலிகளை மிதித்து 'டாங்கிகள்'
கொல்லைகளில் அலைகையில்
தோட்டம் முழுவதும்
காலித் தோட்டங்களும் நிண மனிதருமாய்
எல்லை மீறிய சோகத்தை விதைத்தன.
உனது வாழ்க்கை
அங்குதானென்பதை அறிவேனாயினும்
என்னால் அப்போது ஏதும் இயலாதாயிற்று.

நீ எதிர்க்காய்

# உளவியல் கட்டுரை

குழந்தை தாயின் வயிற்றில் கருத்தரித்ததிலிருந்து ஏற்...

...கள் தவிர உடலியற் பண்பின் அடிப்படையில் ஒருமைத் தன்...

...மையாற் பாதிக்கப்பட்டு அதன் வளர்ச்சி தடைப்பட...

...றிவு படைத்தவர்களாக இருப்பர். நுண்ணறிவில் வேறுபாடுகளை ஏற்படுத்துவதில்...

...பாக ஒரு பிள்ளை பெறுகின்ற வளர்ச்சியே மனவெழுச்சி வளர்ச்சி எனப்படும்.

வந்தன.

இதன் நோக்கங்களாக:-

1) தமிழ் மக்கள் தமது அத்தியாவசியத் தேவைகளுக்குக் கூட சிங்களப் பிரதேசங்களையே நம்பியிருக்க வேண்டிய நிலையினைச் செயற்கையாகத் தோற்றுவித்தல்.

2) தமிழ்ப் பகுதிகளில் ஏற்படக்கூடிய தொழில்வாய்ப்புக்களைக் குறைத்து, அவற்றைச் சிங்களப் பகுதிகளுக்கு இடம் பெயர்த்தல்.

[illegible] அன்றிக் குறைப்பதிலோ அக்கறை காட்டாது இருந்து வருதல்.

ஆ) ஸ்ரீ லங்காவின் ஏற்றுமதியில் முக்கிய பங்கு வகிக்கும் கடல் வாழ் உயிரினங்களில் (இறால், கடலட்டை, சருவாடு) பெரும் பகுதி தமிழீழப் பகுதிகளிலிருந்தே பிடிக்கப்படுகின்ற போதும் பதனிடல், பெட்டிகளிலடைத்தல் ஆகிய வேலை[illegible]திற்கும் குறைவானவர்களே தமிழர்களாவர்.

உ) பன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின்கீழ் தமிழ் பிரதேச அபிவிருத்திக்கான ஒதுக்கீடுகள் சிங்களப் பகுதிகளுக்கே செலவிடப்பட்டு வருதல். தவிர வெளிநாட்டு உதவிகளைக் கொண்டு மேற்கொள்ளப்படும் வீடமைப்பு மற்றும் நகரப் புனருத்தாரணங்களும் சிங்களப் பகுதிகளில் மேற்[illegible]

சுதந்திரத் தமிழீழம் தனது தேசியப் பொருளாதாரப் புனர்நிர்மாணத்தை வெற்றிகரமாகச் சாதிக்கும் வளங்களைக் கொண்டிருக்கிறது. இவற்றைச் சரியான முறையில் திட்டமிட்டு உபயோகிப்பின், தமிழீழம் சுயபூர்த்தியடைந்த நாடாக விளங்கும். தமிழீழ ஆய்வு நிறுவனமானது எமது மண்ணின் அரசியல், சமூக பொருளாதார வாழ்விற்கு ஏற்ற முறையில் நிலத்திற்கும் ஏற்ற விஞ்ஞான ரீதியிலான உற்பத்திகளைப் பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

4) களஞ்சியப்படுத்தக் கூடிய கிழங்கினங்கள் எண்ணெய் வடித்தெடுக்கக் கூடிய எள்ளு நிலக்கடலை, ஆமணக்கு, சூரியகாந்தி என்பனவற்றின் உற்பத்தியில் கவனம் செலுத்தப்பட்டது.

(தொடரும்)

நன்றி:- சுதந்திரதாகம்

# உளவியல் கட்டுரை

# தனியாள் வேறுபாட்டுக் காரணிகளும் அதனை ஓர் ஆசிரியர் அறிந்துகொள்வதன் அவசியமும்

செல்வி அமுதா இராமநாதர் (B.A Hons)
-கல்விப்பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்-

குழந்தை தாயின் வயிற்றில் கருத்தரித்ததிலிருந்து ஏற்படுகின்ற உயிரியற் காரணிகளினதும், உலகிற் பிறந்து வாழுகின்ற காலம் முழுவதும் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற சூழற் காரணிகளினதும் வேறுபாடு காரணமாக மனிதர்களிடையே கூடுதலான வேறுபாடுகளை அவதானிக்க முடிகின்றது. மனிதனின் உயிரியல், உளவியல், சமூக கலாசாரச் சூழல்களிடையே நிகழ்கின்ற செயற்பாடுகள் அவனது வளர்ச்சியைப் பாதிக்கின்றன. உடல், நுண்ணறிவு, சமூக மனவெழுச்சி வளர்ச்சிகள் ஒன்றுடனொன்று மிக நெருங்கிய தொடர்புடையன. ஒன்றின் வளர்ச்சி நிலை சங்கிலிக் கோவையாக ஏனையவற்றில் பாதிப்பினை ஏற்படுத்தும் மனிதன் தனது வாழ்க்கைப் பாதையில் வளர்ச்சிக் கட்டங்களின் அடிப்படையில் முன்னேறிச் செல்கிறான். ஆனால் இம்முன்னேற்றம் சகல மனிதருக்கும் ஒரே வயதில் ஏற்படுவதில்லை. அதேபோல் வளர்ச்சி வேகமும் சகலருக்கும் ஒரே மாதிரி அமைவதில்லை இதன் விளைவாகவே தனி நபர்களுக்கிடையில் அதிக வேறுபாடுகள் காணப்படுகின்றன.

உயிரியல் - உடலியற் காரணிகள், உளவியற் காரணிகள், சமூக கலாசாரக் காரணிகள் இம் மூன்று காரணிகளுமே தனியாளை வேறுபடுத்தும் முக்கிய காரணிகளாகும். இக்காரணிகள் மூன்றும் தனியாள் ஒருவரின் உடலியல் வளர்ச்சியிலும், நுண்ணறிவு வளர்ச்சியிலும், மனவெழுச்சி வளர்ச்சியிலும் வேறுபாட்டைத் தோற்றுவிக்கின்றன.

உடலியல் வளர்ச்சியில் செல்வாக்குப் பெற்று தனி மனிதனை வேறுபடுத்தும் முதற் காரணியான உயிரியற் காரணியை ஆராயின், எல்லா வகையிலும் ஒரே தன்மையுள்ள இரட்டைப் பிள்ளைகள் தவிர உடலியற் பண்பின் அடிப்படையில் ஒருமைத் தன்மையுள்ள இருவரைக் காணுதல் இயலாத காரியமாகும். பருத்தவராக-மெலிந்தவராக, உயர்ந்தவராக - குட்டையானவராக, சுகதேகியாக - நோயாளியாக இவ்வாறு ஆளுக்காள் வேறுபட்டே காணப்படுகின்றனர் என்பது நாமறிந்ததே இதற்குப் பரம்பரையே காரணமென்பர் உளவியலாளர். அநேகமாகப் பெற்றோர்களைச் சார்ந்தோ, அல்லது அவர்களது பரம்பரையினைச் சார்ந்தோ பிள்ளைகளும் அமைந்து பிறத்தல் இயல்பு. சில நோய்களும் பரம்பரையாகவே ஏற்படுகின்றன. உதாரணமாக கோகேசியர் இனத்தவரிடையே பரவலாகக் காணப்படும் மூட்டுவீக்க நோய் பரம்பரைநோய் எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதேபோல் புற்றுநோய், தொழுநோய், வலிப்பு, குருட்டுத் தன்மை, செவிட்டுத் தன்மை போன்றன உயிரணுக்களின் செயற்பாட்டின் வாயிலாகப் பரம்பரை பரம்பரையாக மாறுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இங்கு உயிரியற்காரணி உடலியல் வளர்ச்சியில் வேறுபாடுகளைத் தோற்றுவிப்பதைக் காணலாம்.

மனிதனின் உடல் வளர்ச்சியை உள வளர்ச்சியும் பெருமளவு பாதிக்கின்றது. கருத்தரித்ததிலிருந்து தாயின் உள நிலை பிள்ளையின் வளர்ச்சியைப் பாதிக்கின்றது. பல்வேறுபட்ட உளவியற் கோளாறுகளாற் பாதிக்கப்பட்ட ஒரு தாய்க்குப் பிறக்கின்ற பிள்ளை பெரும்பாலும் உடலியற் கோளாறுகளுக்கு உட்படும்.

அடுத்து உடல் வளர்ச்சியில் சமூக கலாசாரக் காரணிகளும் வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும் [illegible]வந்த வீட்டுப்பிள்ளை போஷாக்குள்ள உணவைப் பெற முடிவதால் அதன் வளர்ச்சி ஒழுங்கு முறையானதாக விருக்கும். வறிய சூழ்நிலையில் வாழும் பிள்ளை மந்த போஷணையாற் பாதிக்கப்பட்டு அதன் வளர்ச்சி தடைப்படலாம். ஆரோக்கியமானதாயின் சிசு ஆரோக்கியமாகவும் நோயுள்ள தாயின் சிசு அங்கவீனமாகவும் பிறப்பதைக் காண முடிகின்றது. அத்துடன் சமூகத்தில் நுண்ணறிவு உள்ள பெற்றோரும், நுண்ணறிவு இல்லாத பெற்றோரும் காணப்படுவர். இதில் முதல் சாரார் குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான காரணிகளை அளிக்க ஆற்றல் பெற்றவர்களாகவும் மறு சாரார் அவ் வாற்றலைப் பெறாதவராகவும் விளங்குவர். எனவே அவ்வக்குழந்தைகளும் சமூகத்தில் வேறுபாடுடைய உடல் வளர்ச்சி கொண்டு விளங்குவர். உடலியல் வளர்ச்சியில் மூன்று காரணிகளும் செல்வாக்குச் செலுத்தி தனியாள் வேறுபாட்டை ஏற்படுத்தும் தன்மையை இதுவரை அறிந்தோம்.

அடுத்து, மனிதனின் நுண்ணறிவு வளர்ச்சியில் இப் மூன்று காரணிகளும் செல்வாக்குச் செலுத்தி தனியாள் வேறுபாட்டை ஏற்படுத்தும் தன்மையை நோக்கின், நடத்தை, அவதானம், நுண்ணறிவுப் பரீட்சை என்பவற்றின் மூலம் மனிதரிடையே நிலவும் நுண்ணறிவு வேறுபாட்டை விளங்கிக் கொள்ளலாம். ஒரு நுண்ணறிவுப்பரீட்சையைப் பெருந்தொகையானோரிடையே நடத்தி அவர்களது நுண்ணறிவினைப் பரீட்சித்தாற் சிலர் மந்த புத்தியுடையவர்களாகவும் இன்னும் சிலர் உயர்ந்த நுண்ணறிவு உள்ளவர்களாகவும் இருப்பர். பெரும்பாலானோர் சாதாரண நுண்ணறிவு படைத்தவர்களாக இருப்பர். நுண்ணறிவில் வேறுபாடுகளை ஏற்படுத்துவதில் பரம்பரை, சூழல் ஆதிக்கம் செலுத்துகின்றன. உயிரணுக்களின் செல்வாக்கினால் சிலர் சிறந்த நுண்ணறிவு உடையவர்களாகவும், அன்பு - பாதுகாப்பு என்பன முறையாக நிறைவேற்றப்படாத சூழலில் வாழும் பிள்ளைகள் நுண்ணறிவு குறைவாக இருப்பதனையும் அறிய முடிகின்றது. ஒத்த இரட்டைப்பிள்ளைகள் சகோதர இரட்டைப் பிள்ளைகளை விட நுண்ணறிவிற் சமனான தன்மையுள்ளவராக இருப்பதாக நில்மன் என்பவர் ஆய்விலிருந்து தெரிய வருகிறது. பொதுவான நுண்ணறிவுடன் பிறக்கின்ற பிள்ளை சிறப்பற்ற சூழலின் செல்வாக்கிற்குட்பட்டால் அப்பிள்ளையின் நுண்ணறிவு வளர்ச்சி பாதிக்கப்படலாம். இதே போன்று நுண்ணறிவு வளர்ச்சிக்கு ஏதுவான சிறந்த சூழலில் வளர்கின்ற பிள்ளைகளின் நுண்ணறிவு படிப்படியாக வளர்ச்சியடைவதாக உளவியலாளர் கருதுகின்றனர்.

அடுத்து மனவெழுச்சி வளர்ச்சியிற் செல்வாக்குப் பெறும் காரணிகளை ஆராயின், ஒருவரின் உள்ளத்திற் சம நிலையற்ற தன்மையை ஏற்படுத்துகின்ற உளச் சக்தியை மனவெழுச்சி எனலாம். சிறப்பற்ற அறிவினை ஏற்படுத்துகின்ற மனவெழுச்சியை மீறிச் சிறப்பான மனவெழுச்சியை ஏற்படுத்துதல் தொடர்பாக ஒரு பிள்ளை பெறுகின்ற வளர்ச்சியே மனவெழுச்சி வளர்ச்சி எனப்படும். இம்மனவெழுச்சி உடலியல் அடிப்படையில் ஏற்படுவதாக டபிள்யூ பீ. கெனன் கூறுகின்றார். சிலரின் கூற்றுப்படி எஜின பிரின் எனும் அமிலம் இரத்தத்தில் கலப்பதனால் மனவெழுச்சி ஏற்படுவதாகத் தெரிகிறது. எல்லா மனிதர்களதும் சுரப்பி நீர் ஒரே முறையில் சுரப்பதில்லை. இதனால் தான் அன்பு, மகிழ்ச்சி, கோபம், துக்க உணர்ச்சிகள் ஆளுக்காள் வேறுபட்டுத் தோன்றுகின்றன. உயிரியியற் காரணிகளாலும் மனவெழுச்சி ஏற்படுவதாக 'பன்கஸ்டீன் கோட்பாடு' தெரிவிக்கின்றது. சில மனவெழுச்சி தொடர்பாக பிறப்பிலே சிலர் உயிரியல் உருவாக்கத்தைப் பெற்றிருப்பதாக அவர் கருதுகின்றார். பிள்ளைகள் வாழும் சமூகச் சூழலும் மனவெழுச்சி வேறுபாட்டை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்துகிறது. தேவைகள் நிறை வேறுகின்ற சமூகச் சூழலில் வாழுகின்ற பிள்ளையின் மன வெழுச்சி வளர்ச்சியும், அது நிறைவேறாத சூழலில் வாழும் பிள்ளையின் மனவெழுச்சி வளர்ச்சியும் ஒரே மாதிரி இருப்பதில்லை. பெற்றோரிடையே பிணக்கு குடும்ப அங்கத்தவர்களிடையே சண்டை சச்சரவு போன்றவற்றால் பாதிக்கப்படும் ஒரு பிள்ளையின் மன

(10 ஆம் பக்கம் பார்க்க)

நசிந்தன செவ்விரத்தம் பூக்கள்
கொடியது எனினும்
இது புதிதல்ல.

உன்னையும் அவர்கள்
இப்படித்தான் செய்தனர்
எனது மக்களில் பலரும்
இவ்வாறே ஆயினர்.

உனதும் எனதும் வயல்களை
தீயிட்டுக் கொளுத்தினர்
வேலிகளை மிதித்து 'டாங்கிகள்'
கொல்லைகளில் அலைகையில்
தோட்டம் முழுவதும்
காலித் தோட்டங்களும் நிண மனிதருமாய்
எல்லை மீறிய சோகத்தை விதைத்தன.
உனது வாழ்க்கை
அங்குதானென்பதை அறிவேனாயினும்
என்னால் அப்போது ஏதும் இயலாதாயிற்று.

நீ எதிர்த்தாய்
கணநேரச் சங்காரம்
ஆதலால் நீ இன்றில்லை.
அருகில் நின்ற சிலரும்
உன்னுடனே மடிந்தனர்.

உடுக்கை இழந்தவன்
கை போலாயினும்
நம் நரம்புகள் அதிர்ந்தன
புதிய உணர்வுகள்
குருத்தெறிந்தன.

□

நேற்றைய நாளில் தூங்கிப் போனதால்
இன்றைய வாழ்வை இழந்தோம்.
இந்த மண்ணில்
விலங்கும் சிறையும் நிறைந்துளதால்
மக்களின் சுதந்திரம் மரணித்தது.

இனியிங்கு வானம் கீழிறங்க
அணியாய்த் திரள்வோம்,
அடிவானம் தொடும் எங்களின் தொடரை.

உழவும் தொழிலும்
பட்டறை குடிசை வயலும் நிலமும்
மறுபடி இந்த
மண்ணில் முளைக்கட்டும்.
தன்னுடைய மகனைத் தாய்
மடியுள் படுத்திய காலம் மறைந்தது விந்தை.
சுதந்திரம் பெற்றே
மகனுடன் கலந்து
குயிலின் பாட்டை மகிழ்வுடன் கேட்பாள்
பாட்டின் பொருள் தேடி
காற்றில் கரைவாள்.

-- எஸ். கருணாகரன்

## வைரவரிகள்

□ ஒவ்வொரு தாக்குதலிலும் ஓங்குவது சுதந்திரம்; செய்வோம்; செய்வோம்; அல்லது செத்து மடிவோம்.

- ரோபேட் பேர்ன்ஸ்

□ சுதந்திரம் நிலைப்பதையும், வெற்றி பெறுவதையும் உறுதிப்படுத்த நாங்கள் எந்த விலையும் கொடுப்போம். எந்தச் சுமையையும் தாங்குவோம். எந்த இன்னல்களையும் எதிர் கொள்வோம். எந்த நண்பரையும் ஆதரிப்போம். எந்த பகைவனையும் எதிர்ப்போம் என்பதை தம் நலனை நாடும் நாடுகளும் சரி, நமக்குத் தீங்கு நினைக்கும் நாடுகளும் சரி, அறிந்து கொள்ளட்டும்.

- ஜோன் கென்னடி

# விண்வெளி விஞ்ஞானம்

## செவ்வாயில் கால்வாய்கள்

1965ஆம் ஆண்டுவரையிலே, செவ்வாயைப் பற்றி அறிந்து கொள்ளப்பட்ட விபரமான விஷயங்கள் அத்தனையும், மிகத் திறமையும் பொறுமையும் வாய்ந்த பல அவதானிகளினால், பல ஆண்டுகளாக, தொலைநோக்கி மூலம், இரவிரவாக, இடைவிடாமல் அவதானித்துச் சேகரித்தவை ஆகும். 1965ஆம் ஆண்டிலே மரீனர் - நான்கு என்ற அமெரிக்க விண்கலம், செவ்வாய்க்கு அண்மையில் சென்று, மிகவும் தெளிவான புகைப்படங்களை எடுத்தது.

1965 ஆம் ஆண்டுக்குமுன், வானியல் அவதானிகள் தொலை நோக்கி மூலம் அவதானித்துச் சேகரித்த விபரங்கள் பல, ஒன்றுக்கொன்று முரணானவையாகவும், வேறு சில தகவல்கள் தவறானவையாகவும் காணப்பட்டன. இந்த முரண்பாடுகள் காரணமாக ஏற்பட்டதுதான் செவ்வாயில் உள்ளதாக எண்ணப்பட்ட கால்வாய்கள் பற்றிய விவகாரம் - நவீன வானியல் சரித்திரத்திலே, செவ்வாயில் இருப்பதாக எண்ணப்பட்ட கால்வாய்களைப்பற்றி, ஒன்றுக்கொன்று முரணாக வெளியிடப்பட்ட கருத்துக்கள் மிகவும் வேடிக்கையானவை.

1877ஆம் ஆண்டிலே இத்தாலிய வானியல் அறிஞர், ஜியோவானி ஷியாப்பரெலி என்பவர், நேரான பல கோடுகள் இருப்பதைத் தாம் அவதானித்ததாகக் கூறினார். இந்தக் கோடுகளை, கனாலி (Canali) என ஷியாப்பரெலி அழைத்தார். இத்தாலிய மொழியில் 'கனாலி' என்றால் 'வழிகள்' என்று அர்த்தம். இவை செயற்கையாக உருவாக்கப்பட்டவை என்று, ஷியாப்பரெலி கூறவில்லை. ஆகவே, அமெரிக்க வானியல் அறிஞர், பெர்ஸிவல் லொவல்,

இந்த நேர்கோடுகளை - வழிகளை - 'கனால்ஸ்' என்று அழைத்தபோது, ஷியாப்பரெலி ஆச்சரியப்பட்டிருக்கக் கூடும். செவ்வாயில் வசிக்கும், மிகவும் நாகரிகமடைந்த மக்களினால் இந்தக் கால்வாய்கள் உருவாக்கப்பட்டன என்றும், துருவப் பகுதிகளிலே கவிந்திருக்கும். உருகும்போது, அதனால் கிடைக்கும் நீரை, செவ்வாயின் ஏனைய இடங்களுக்குக் கொண்டு செல்வதற்காக இந்தக் கால்வாய்கள் அங்குள்ள மனிதரால் வெட்டப்பட்டவை என்றும் பெர்ஸிவல் லொவெல் கூறினார். தொடர்ந்து அவர் எழுதிய கட்டுரைகளிலும், நிகழ்த்திய பல சொற்பொழிவுகளிலும்,




செவ்வாயில் உள்ள மனிதர்கள் மிகவும் நெருக்கடி நிறைந்த ஒரு காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் செவ்வாய்க் கிரகத்திலே வரட்சி ஏற்பட்டு, நிலம் காய்ந்து, நீர்அற்றுப் போவதாகவும், அதனால் துருவப்பகுதிகளில் உள்ள பனிமூடி உருகும்போது உண்டாகும் நீரை பூரணமாக - சேதம் எதுவுமின்றி பயன்படுத்துவதன் பொருட்டு கால்வாய்களை அமைத்திருக்கிறார்கள் என்றும் விளக்கினார்.

செவ்வாயை மேலும் மேலும் தொடர்ந்து அவதானித்து வந்த லொவெல் புதிது புதிதாக பல கால்வாய்கள் அங்கிருப்பதைக் கண்டார். கடைசிக் காலத்தில் அவர் வரைந்த செவ்வாயின் படங்களிலே, பலகோடுகள் — இரட்டைக் கோடுகள் - குறுக்கும் நெடுக்குமாகக் காணப்பட்டன. இவை எல்லாம் கால்வாயின் இருபக்கத்திலும் விளைந்திருக்கும் பயிர்களின் தோற்றம் என்று அவர் கருதினார். இந்தக் கோடுகள் ஒன்றை ஒன்று குறுக்கிடும் இடங்களிலே, பரந்த பசுமையான பிரதேசங்கள் காணப்பட்டன. இந்தப் பசுமையான இடங்களில் செவ்வாய் மக்கள் வசித்து வருகிறார்கள் என்றும் கருதப்பட்டது.


பெர்ஸிவல் லொவெல் என்ற வானியல் அறிஞரின் நினைவாக, கடைசியாகக் கண்டுபிடிக்கப்பட்ட கிரகத்துக்கு, 'புளூற்றோ' என்று பெயர் சூட்டப்பட்டது. □

## எங்கும் கால்வாய்கள்

1877 இல் செவ்வாய் பூமிக்குச் சமீபமாக வந்தது.

அப்போது ஜியோவானி ஷியாப்பரெலி செவ்வாயைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். செவ்வாயிலே, குறுக்கும் நெடுக்குமாக, கோடுகள் காணப்படுகின்றன. என்று கூறி, உலகத்தை ஆச்சரியப் படுத்தினார். நூல் போன்ற மெல்லிதான இந்தக் கோடுகள், தற்செயலாகத், தாமாக ஏற்பட்டவைபோலத் தோன்றவில்லை என்றும், அந்தக் கோடுகள் அமைந்திருக்கும் விதத்தில் ஒரு ஒழுங்கு - முறை - காணப்படுகிறதென்றும் அவர் கூறினார். பூமியிலே காணப்படும் ஆறுகள், வளைந்து நெளிந்து செல்வதைப் போலன்றி, செவ்வாயில் காணப்படும் கோடுகள், ஒழுங்காக, நேராக, ஒரு வரிசைக் கிரமத்தில் காணப்படுகின்றன என்றும் அறிவித்தார்.

இவர் கீறிய படங்களின் படி, சில கோடுகள் - கனாலிகள் —ஆயிரக்கணக்கான மைல் நீள முடையனவாக இருந்தன. வேறு சில, நூறுமைல் வரை நீள முடையனவாகத் தோன்றின. இவற்றிலே பல ஒன்றை ஒன்று குறுக்கிடுவனவாகவும், செவ்வாயின் இருண்ட பிரதேசங்களிலே,



செவ்வாயின் தரைத் தோற்றம்

இக்கால்வாய்கள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டவையாகவும் தோன்றின. இந்த இருண்ட பிரதேசங்கள் பாலைவனப் பசுந்தரை என்று பொருள் படும் ஒயெஸீஸ் என்றும் கருதப்பட்டன. எந்த ஒரு கால்வாயாவது திடீரென முடிந்து விடவில்லை.

ஷியாப்பரெலி இவற்றைக் 'கனாலி' என்று அழைத்தார். இத்தாலிய மொழியில் 'வழிகள்' என்று அர்த்தம். கனாலி என்ற இத்தாலியச் சொல் ஆங்கில மொழிபெயர்ப்பிலே 'கனால்' - கால்வாய் நீரோடை - என்று மொழி பெயர்க்கப்பட்டது தற்செயலாக, மொழி பெயர்பிலே ஏற்பட்ட இந்தச் சிறிய தவறு காரணமாக, செவ்வாயில் நீர்ப்பாசனத்தின் பொருட்டு செயற்கையாக உருவாக்கப்பட்ட கால்வாய்கள் உள்ளன என்று எண்ண இடமேற்பட்டது.

இந்தக் கால்வாய்களிலே கப்பல்களும் செல்ல முடியும் என நினைத்தனர். இப்படிப்பட்ட கருத்து உண்மை என்றால், இவற்றை உருவாக்கியமைத்தவர்கள், மிகவும் நாகரிக முதிர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று சில வானியல் அறிஞர்கள் முடிவு செய்தனர். இயற்கையாகவே இப்படிப்பட்ட கால்வாய்கள் தோன்றியிருப்பது சாத்தியமில்லை என்று அபிப்பிராயப் பட்டனர்.

ஷியாப்பரெலி ஒருபோதும் இந்தக் கருத்தைக் கொண்டிருக்கவில்லை. செவ்வாயில் உள்ள கால்வாய்களுடன் ஒப்பிடும் போது, பனாமா கால்வாய் குழந்தைகளின் விளையாட்டுக் கால்வாய் போலத் தோன்றும். இந்தக்கருத்தை மறுத்து - எதிர்த்து ஷியாப்பரெலி அபிப்பிராயம் தெரிவிக்கவுமில்லை. இவற்றைக் கண்டுபிடித்து, இரண்டு வருடங்களுக்குப் பின், இந்தக் கால்வாய்களிலே நைலஸ் எனப் பெயரிடப்பட்ட கால்வாய் இரட்டைக் கால்வாய் எனவும் கூறினார். இதன்பிறகு செவ்வாயைத் தொடர்ந்து அவதானித்த போது, நைலஸ் போல, இரட்டைக் கால்வாய்கள் பலவற்றைக் கண்டார். ஆரம்பத்திலே ஒரு கால்வாய் இருந்த இடத்தில் இரண்டு கால்வாய்கள் இருப்பதைக் கண்டார். சமாந்திரமாக அமைந்த இரட்டைக் கால்வாய்களுக்கிடையில் உள்ள தூரம் சுமார் 50 மைல் முதல் 400 மைல் வரை இருப்பதாகக் கணக்கிடப்பட்டது. □

**உடுவில் விவியன் நமசிவாயம்**



கவிதை

## வந்தது எங்கள் ஆட்சி!

தடாரெனத் தகரக் கேற்றில்
தட்டிய போதும் நாங்கள்
நடுங்கினோம் ஓர் நாள் இங்கே
நாசந்தான் வந்ததென்று.
படபடப் போசை கேட்டால்
பயமிலா திருப்போம் இப்போ
வெடிகளைச் சுடுகின்றார்கள்
விளையாட்டுப் பொடிகள் என்போம்!
கடைத் தெரு வாசல் யாவும்
கன்னியர் சிரித்து நிற்பர்!

மாலையாகிற் றென்றாலே
மனதிலே கிலேசம் பொங்கும்.
நாலு மணியாகும் முன்பே
நடைகளைச் சுருக்கிக் கொண்டு
ஏழு மணிக் கெல்லாம் எங்கள்
கதவினை இழுத்தடைப்போம்.
பாலெனும் நிலவைக் காண
பல்லாண்டாய் தவம் கிடந்தோம்!
காலனாய் வந்த 'சூரர்'
கசப்பினைச் சுமந்து போனார்!.

இரவெலாம் எங்கள் ஆட்சி.
இளமையாய் நிலவு பூக்கும்!
பரபரப் பொன்றும் இல்லை.
பயமில்லை கள்வர் இல்லை.
அருமையெம் புலிகள் போவார்
அகமெலாம் மகிழ்ச்சி வெள்ளம்!
வருமெங்கள் ஆட்சி என்றோம்!
வந்தது தமிழர் ஆட்சி!
விரும்பி நாம் காப்போம் மண்ணை
விடுதலை பெறுவோம் உண்மை!

- மு.ஈழநாடன்

# இலக்கியத்தடம்

□ **கலை இலக்கியப் படைப்புக்கள்**

பார்வையுடன் வெளிவந்தால் உண்மையில் அவை பாராட்...

சினைக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் அவை ஆட்டம் கண்டு விடுகின்றன.

வெறும் இலக்கிய ஆர்வத்தினால், சஞ்சிகை நடாத்தப் புறப்பட்டு தமது கைப் பணத்தை இழந்த எழுத்தாளர்கள் அனேகம் பேர் உள்ளனர்.

எம்மிடையே விரல் விட்டு எண்ணக் கூடிய சில சஞ்சி...

எவ்வாறு எமக்கு என்று ஒரு சினிமாத்துறை இல்லாமல் உள்ளதோ, எவ்வாறு சுயதொழில் முயற்சிகள், சிறப்பாக வளரமுடியாமல் இருக்கின்றதோ அவ்வாறே எமது சஞ்சிகைகளும் (நூல் வெளியீட்டுத்துறையையும் சேர்த்துத்தான்) வளர்ச்சிபெற முடியாமைக்கு இறக்குமதியாகும் சஞ்சிகைகளும் ஒரு காரண...

...டும் இத்தகைகய சஞ்சிகைகள் எந்த விலைக்கும் விற்பனையாகி விடுகின்றன.

இத்தகைய சஞ்சிகைகளை வாங்குபவர்கள் அல்லது தீவிரமாகப் படிப்பவர்கள் வாங்குவதுடன் நின்று விடாது சிறிதளவு தன்னும் விரிந்த பார்வை இல்லாமல் இவற்றை எமது பிரதேசத்து சஞ்சிகைகளுடன் ஒப்பிட்டும் பார்க்...

வெளிநாட்டில் இருந்து கஷ்டப்பட்டு உழைத்த (இங்கு வேலை செய்பவர்களின் உழைப்பும் தான்) அனுப்பும் பணத்தில் பிரதான வீதியின் கரையோரமாக வீடும், வீட்டில் சகல வசதிகளையும், பெருந்தொகைப் பணத்தினை தங்க நகைகளில் முதலீடு செய்து கொண்டும், ஆடம்பரமான செலவுகளுடன் இருக்...

...கொண்டு உள்ளனர். விபரம் தெரியாமல் வெறும் மாயையில் சிக்கி அந்தச் சஞ்சிகைகளின் பின்னால் நிற்பவர்களை மீட்டெடுக்க வேண்டியது இத்துறைகளில் அக்கறை உள்ள அனைவரதும் கடமையுமாகும்.

இவ்வாறே ஏனைய சஞ்சிகைகள், மாதநாவல்களிலும்...

இவை செயற்கையாக உருவாக்கப்பட்டவை என்று, ஷியாப்பரெலி கூறவில்லை. ஆகவே, அமெரிக்க வானியல் அறிஞர், பெர்ஸிவல் லொவல்,

செவ்வாயின் படங்களிலே, பலகோடுகள் – இரட்டைக் கோடுகள் - குறுக்கும் நெடுக்குமாகக் காணப்பட்டன. இவை எல்லாம் கால்வாயின் இருபக்கத்திலும் விளைந்திருக்

சைக் கிரமத்தில் காணப்படுகின்றன என்றும் அறிவித்தார்.

இவர் கீறிய படங்களின் படி, சில கோடுகள் - கனாலிகள் –ஆயிரக்கணக்கான மைல் நீள முடையனவாக இருந்

இந்தக் கால்வாய்களிலே கப்பல்களும் செல்ல முடியும் என நினைத்தனர். இப்படிப் பட்ட கருத்து உண்மை என்றால், இவற்றை உருவாக்கியமைத்தவர்கள், மிகவும்

கால்வாய்கள் இருப்பதைக் கண்டார். சமாந்திரமாக அமைந்த இரட்டைக் கால்வாய்களுக்கிடையில் உள்ள தூரம் சுமார் 50 மைல் முதல் 400 மைல் வரை இருப்பதாகக் கணக்கிடப்பட்டது.□

விடுதலை பெறுவோம் உண்மை!

- மு.ஈழநாடன்

---

# இலக்கியத்தடம்

## “எமது வாசகர்களும் சிறு சஞ்சிகைகளும்.”

### □ கலை இலக்கியப் படைப்புக்கள்

மிக நீண்டகால இலக்கிய பாரம்பரியம் உள்ள நமக்கு சில விடயங்களில் தான் பெருமை பாராட்ட முடிகின்றது.

உலக இலக்கியங்களுடன் நாம் இணைய முடியுமா? அல்லது தலைசிறந்த உலக இலக்கியங்களுக்கு ஈடான இலக்கியப் படைப்புக்களை படைக்க முடியுமா? என்றெல்லாம் எம்மத்தியிலே கேள்விகள் கேட்கப்படுகின்றன.

போட்டிப் பரீட்சையில் தெரிவாவதற்குப் படிப்பது போலவோ ஐம்பது பேர் உள்ள வகுப்பில் முதலாம் பிள்ளையாக வருவதற்கு கஷ்டப்படுவது போலவோ இலக்கியம் படைக்கப்படுவதல்ல.

மிகச் சிறந்த இலக்கியப் படைப்பு என்றோ ஆகா அற்புதமான கவிதை, சிறுகதை, நாவல் என்று பலரும் போற்றுவதற்காகவோ யாரும் இலக்கியம் படைப்பதில்லை.

தன்னுடைய படைப்புக்களை இவ்விதமான தன்மைகளுடன் படைக்க வேண்டும் என யாரும் நினைத்துப் படைக்க முனைவதில்லை. இலக்கியம் உணர்வுகளோடு சம்பந்தப்பட்டது. உந்துதலால் நிகழ்வது. சில வேளை ஆகா ஓகோவாக வரும். சில வேளை ‘சா’ என்றோ பரவாயில்லை என்றோ என்ற நிலைக்கும் வந்துவிடும்.

இதுதான் உண்மையான நிலைமை. இதை மறந்து போகின்ற பலர் நம் மத்தியில் உள்ளனர். தாம் எல்லாம் உச்சமான மனிதர்களாகவும், தாம் படைப்பவை இலக்கிய தரம் மிக்கவையாகவும் தங்களைத் தாமே மெச்சிக் கொண்டு உள்ளனர்.

### □ தார்மீக ஆதரவு

நல்ல கலை இலக்கியப் படைப்புக்கள் ஆழமான பார்வையுடன் வெளிவந்தால் உண்மையில் அவை பாராட்டுக்குரியனவே.

ஆனால் ‘தாய் பிச்சை எடுக்க மகன் பூசை கொடுத்த கதை மாதிரியாக’ புற உலக பிரக்ஞை இன்றி மக்களின் அவலங்களைப் புரிந்து கொள்ளாமல் தலைக்கு மேல் அழுத்திக் கொண்டு இருக்கும் சுமைகளை உணராமல் ‘ரோம் நகரம் எரியும் போது பிடில் வாசித்த நீரோ மன்னனின் செயல் போல இருக்கலாமா?

அதுக்காக எல்லோரையும் ஈட்டியும் கத்தியும் ஏன் துப்பாக்கியும் கொண்டு சண்டைக்கு கிளம்புங்கள் புரட்சிக் கோஷமிடுங்கள் வேட்டுக்களைத் தீருங்கள் என்று கூறவில்லை. கடைசி உணர்வளவிலாவது எம் நிலைமையை எம் இனத்தின் நிலைமையை உணர்ந்து கொள்ள முடியாமல் தார்மீக ஆதரவையாவது செலுத்த முடியாது உள்ளவர்களைப் பற்றித் தான் யோசிக்க வேண்டியுள்ளது.

எழுத்தாளர்களின்நிலைமை தான் இப்படிஎன்பது அல்ல. தமது பகுதியில் இருந்து வெளியாகும் சஞ்சிகைகளுக்கு எமது வாசகர்கள் வழங்கும் ஆதரவின் நிலையும்இதுதான்.

### □ சிறு சஞ்சிகைகள்

எமது இலக்கியவரலாற்றில் தோன்றி மறைந்து போகும் இலக்கியச் சிறு சஞ்சிகைகளே ஏராளம். முதலாவது அல்லது இரண்டாவது வெளியீடுகளுடன் நின்று போய் விட்ட சஞ்சிகைகள் கணக்கில்லாதவை.

இச்சிறு சஞ்சிகைகள் இலக்கிய ஆர்வம் உள்ள சில தனிப்பட்ட வாசகர்களால் அல்லது இலக்கிய அமைப்புக்களின் தீராத அவாவினாலேயே உயிர் பெற்று வெளிவருகின்றன.

ஆனால் அவற்றின் விற்பனைத் தேக்கத்தின் காரணத்தால் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் அவை ஆட்டம் கண்டு விடுகின்றன.

வெறும் இலக்கிய ஆர்வத்தினால், சஞ்சிகை நடாத்தப் புறப்பட்டு தமது கைப் பணத்தை இழந்த எழுத்தாளர்கள் அனேகம் பேர் உள்ளனர்.

எம்மிடையே விரல் விட்டு எண்ணக் கூடிய சில சஞ்சிகைகள் தான் தொடர்ந்து வெளிவருகின்றன. ஆனால் அவற்றின் வெளியீடுகள் கூட ஒழுங்காக மாதாமாதமோ, இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை என்றோ, காலாண்டிற்கு ஒன்று என்றோ, எந்த வித கால இடைவெளியும் (ஒழுங்கான) இல்லாமல் அவ்வப்போது தான் வெளிவருகின்றன..

இவ்வாறு இலக்கியச் சஞ்சிகைகள் நலிவு பெறுவதற்கு பல காரணங்கள் உண்டு. சஞ்சிகையின் விடயங்கள், அவற்றின் அதிக விலை, ஒழுங்கின்மை, தென்னிந்திய சஞ்சிகைகளின் வரவு, இவை எல்லாவற்றினையும் விட எமது வாசகர்களின் அக்கறையின்மை போன்ற பல காரணங்களைச் சொல்லலாம்.

சிறிது காலத்திற்கு முன்னர் ‘‘ஒருசிறு’’ சஞ்சிகையில் இது பற்றி சில குறிப்புக்கள் இடம் பெற்றன. அதில் சஞ்சிகைகளின் வளர்ச்சிக்குத் தடையான காரணிகளில், அவற்றின் அதிக விலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இருந்தது.

நான் இங்கு அது பற்றிக் குறிப்பிட முனையவில்லை. எமது வாசகர்களின் அக்கறையின்மை பற்றி சில கருத்துக்களைக் குறிப்பிட முனைகின்றேன்.

### □ தென்னிந்தியச் சஞ்சிகைகளின் சந்தை

எமது பிரதேசம் நீண்டகாலமாக இறக்குமதியாகும் பல்வேறு வகையான தரங்களையுடைய சஞ்சிகைகளின் வியாபார சந்தையாகவே இருந்து வருகின்றது.

எவ்வாறு எமக்கு என்று ஒரு சினிமாத்துறை இல்லாமல் உள்ளதோ, எவ்வாறு சுய தொழில் முயற்சிகள், சிறப்பாக வளரமுடியாமல் இருக்கின்றதோ அவ்வாறே எமது சஞ்சிகைகளும் (நூல் வெளியீட்டுத்துறையையும் சேர்த்துத்தான்) வளர்ச்சிபெற முடியாமைக்கு இறக்குமதியாகும் சஞ்சிகைகளும் ஒரு காரணமாகும்.

மிக நீண்டகாலமாக இந்த இறக்குமதி சஞ்சிகைகள் எம் வாசகர்களோடு இரண்டறக் கலந்து விட்டன. அவற்றின் தரம் அவற்றில் எமக்குக் கிடைக்கும் பயன்பாடு இவை பற்றிய நுட்பமான சிந்தனை சிறிது கூட இல்லாமல் நமது வாசகர்கள் இருந்து வருகின்றனர்.

அந்த ஈர்ப்பும், தொடர்பும் காரணமாகவே அவை எத்தனையோ மடங்கு விலைக்கு வந்த பின்னரும் கூட அவற்றினைத் தொடர்ந்து வாங்கிக் கொண்டு உள்ளனர்.

நவீன அச்சுவசதி காரணமாக சிறிய விடயத்தை அல்லது உபயோகமற்ற புதினங்களைச் கூட வண்ணக்கலவையாக கவர்ச்சியாக பிரசுரித்து வாசகர்களை தம் பக்கம் இழுத்து விடும் முயற்சியினை எமது வாசகர்கள் உணர்ந்தாலுட\ அவற்றில் இருந்து விடுபட முடியாமலே உள்ளனர்.

### □ சினிமாச் சஞ்சிகைகள்

பெருந்தொகையான சினிமாச் சஞ்சிகைகள் இறக்குமதியாகின்றன. எந்த விதமான கட்டுப்பாடும் இல்லாமல் தரமற்ற சினிமாப்படங்கள் எவ்விதம் ஒளிப்பதிவு நாடாக்களாக இங்கு வந்து சேருகின்றதோ அவ்விதமே சினிமாச் சஞ்சிகைகளும் இங்கு வந்து விடுகின்றன.

அறிவுசார்ந்த செய்திகளையோ, உபயோகமான கருத்துக்களையோ கொண்டிராமல் வெறுமனே கீழ்த்தரமான உணர்வுகளைத் தூண்டும் இத்தகைய சஞ்சிகைகள் எந்த விலைக்கும் விற்பனையாகி விடுகின்றன.

இத்தகைய சஞ்சிகைகளை வாங்குபவர்கள் அல்லது தீவிரமாகப் படிப்பவர்கள் வாங்குவதுடன் நின்று விடாது சிறிதளவு தன்னும் விரிந்த பார்வை இல்லாமல் இவற்றை எமது பிரதேசத்து சஞ்சிகைகளுடன் ஒப்பிட்டும் பார்க்கின்றனர்.

‘‘என்ன செய்தாலும் அவர்களது தரத்திற்கு வருமா’ என்று தென்னிந்திய சஞ்சிகைகளின பளபளப்பையும் கவர்ச்சியையும் பெரிதாக நினைத்துக் கொண்டு சொல்வது கவலையான விடயங்களே.

ஆர்வமுள்ளஇலக்கியவாதிக்கும், தரமான இலக்கியங்களின் மீதும், எமது பிரதேச ஆக்க இலக்கியவாதிகள் மீதும் அக்கறையும் உள்ள குறிப்பிட்ட சிலர் மட்டுமே எமது பிரதேச இலக்கிய சிறு சஞ்சிகைகளில் அதிக அக்கறை காட்டுகின்றனர்.

எமது பிரதேசம், எமது மொழி, எமது இனம், அதன் வளர்ச்சி, என்பனவற்றின் மீது எள்ளளவும் அக்கறையில்லாத மேம்போக்கானவர்களே பரபரப்புக்கள்நிறைந்த வியாபாரச் சஞ்சிகைகளுக்கு குடை, கொடி, ஆலவட்டம் பிடிக்கின்றார்கள்.

### □ எமது மக்களின் மனோபாவம்

எமது பிரதேசத்தில் தரமான சஞ்சிகைகள் சிலஆவது தொடர்ந்து ஒழுங்காக வெளிவந்து பிரயோசனமாக ஏதாவது செய்தால் எப்படி இருக்கும்?

தனியே இலக்கியம் என்று மாத்திரம் அல்ல அபிவிருத்தி, விவசாயம், விளையாட்டு, விஞ்ஞானம் என்று சகலதுறைகளிலும் சஞ்சிகைகள் வெளிவரவேண்டும். அவ்வாறு வெளிவருவதுடன் எமது பிரதேசத்து எழுத்தாளர்களை வளர்த்தெடுக்கவும் அதனூடாக இன, மொழி உணர்வுகளைக் கட்டி வளர்த்து, எமது தாயகத்தில் சகல துறைகளினது வளர்ச்சியும் சீரான முறையில் வழி நடத்தலும் வேண்டும்.

வெளிநாட்டில் இருந்து கஷ்டப்பட்டு உழைத்த (இங்கு வேலை செய்பவர்களின் உழைப்பும் தான்) அனுப்பும் பணத்தில் பிரதான வீதியின் கரையோரமாக வீடும், வீட்டில் சகல வசதிகளையும், பெருந்தொகைப் பணத்தினை தங்க நகைகளில் முதலீடு செய்து கொண்டும், ஆடம்பரமான செலவுகளுடன் இருக்கும் எங்களில் பல பேருக்கு எவ்வாறு சுதேச சிந்தனைகள் வரும்?

அப்படி வந்தால் தான் எம்மிடம் உள்ள பணத்தினை எமக்குப் பயன் தரக் கூடிய வழிகளில் முதலீடு செய்து கொண்டு சுதேச முயற்சிகளுக்கே உதவ முனைவோம். இவ்வாறான சிந்தனை இயல்பாக வரவேண்டும். அம்மா, அப்பா என்று பாசம் இருப்பதுபோல எனது வீடு, எனது வளவு, எனது பொருட்கள் என்றஉரிமை உணர்வு உண்டாவதுபோல.

இத்தகைய தன்மைகள் இயல்பாக வராவிட்டால் என்ன செய்வது? என்ன செய்யலாம்?

### □ களையெடுப்பு

இறக்குமதியாகும் சஞ்சிகைகளில் சினிமாச் சஞ்சிகைகளில் உபயோகமாக ஏதாவது தேறுமா? என்பது சர்ச்சைக்குரிய கேள்வி அல்ல. சினிமா என்ற ஊடகம் எவ்விதம் மக்களுக்குப் பயன்படவேண்டும் என்றோ, அதன் தொழில் நுட்பங்களின் தன்மைகள் பற்றியோ ஏதாவது சஞ்சிகைகளில் (சிலவேளைதான் சில கட்டுரைகள் வருகின்றன). வருவதில்லை. எனவே மொத்தத்தில் இறக்குமதியாகும் சினிமாச் சஞ்சிகைகளை நிராகரிப்பதே பொருத்தமான செயலாகும்.

நல்ல சினிமாக்கள் பற்றிய கரிசனையுள்ள பெரும்பாலானோர் இந்தக் கருத்தினையே கொண்டு உள்ளனர். விபரம் தெரியாமல் வெறும் மாயையில் சிக்கி அந்தச் சஞ்சிகைகளின் பின்னால் நிற்பவர்களை மீட்டெடுக்க வேண்டியது இத்துறைகளில் அக்கறை உள்ள அனைவரதும் கடமையுமாகும்.

இவ்வாறே ஏனைய சஞ்சிகைகள், மாதநாவல்களிலும் களையெடுத்தல் அவசியமாகின்றது. சஞ்சிகை வெளியீடுகள்இலாப நோக்கம்கொண்ட தொழில்களாக மாறிவிட்டபடியால் இயல்பாகவே உள்ள வியாபாரத் தந்திரங்கள் காரணமாக மலினப்படுத்தப்பட்ட தரமற்ற விடயங்களே இச் சஞ்சிகைகளில் வெளியாகின்றன. இவையும் சினிமாத்தனங்கள் நிறைந்ததாக இருப்பதனாலும் சினிமாவுக்கே இவைகளும் முதன்மையான இடம் கொடுப்பதனாலும் இவையே விற்பனையில் முதன்மை பெறுகின்றன. இங்கும் அப்படியான நிலைமை தான்.

எனவே இத்தகையதரமற்ற சஞ்சிகைகளை இனம் கண்டு (மாத நாவல்களும் தான்) ஒதுக்கப்பட வேண்டும். உண்மையான விலையிலும் பார்க்க ஐந்து மடங்குக்குக் கிட்ட விலை கொடுத்துஇவற்றினை வாங்கி ஒருவகைப் போதைப் பொருளினைப் போல எமது வாசகர்கள் அக்கறை காட்டுவதை எவரும் விரும்பமாட்டார்கள்.

ஆகவே இந்த தரமற்ற சகல சஞ்சிகைகளும் இனம் காட்டப்பட்டு நிராகரித்தல் பொருத்தமானதே. பளபளப்பும் கவர்ச்சியும் கண்களை விட்டுமறைய எமது வாசகர்களின் செயல்பாடுகளில் மாற்றங்கள் வராதா?

ஆனால் தரமற்ற சஞ்சிகைகளின் இடத்திற்குஅதேசாயல் உடைய உள்ளூர் சஞ்சிகைகள் அவற்றின் நகல்களாக வெளிவராமல் பார்க்க வேண்டும்.

□□□

அழலாடிக்குட்டன்

# சிறுவர் பகுதி




## தேடி எடுத்துப் படியுங்கள்

### தொலைந்த உலகம்

அவர் ஒரு பேராசிரியர். பெயர் சலஞ்சர். பண்டைக் கால உலகத்தை ஆராய்வதில் ஆர்வம் கொண்டவர். அதற்காக உலகமெங்கும் சுற்றினார். அப்படிச் சுற்றுகையில் தென் அமெரிக்காவில் தான் கண்ட அதிசயத்தைக் கூறினார்.

டைனோசர், ரெர்ரோடோடிக்ஸ் என்ற ஆதிகால இராட்சத பறவை, விலங்குகளை கண்டதாகவே பேராசிரியர் கூறினார். ஆனால் அதை உலகம் நம்பவில்லை. பேராசிரியர் புளுகுகிறார் என இகழ்ந்தார்கள்.

அதனால் பேராசிரியர் தான் கண்டதை நிரூபிப்பதற்காக பொதுமக்களில் படித்த சிலரை அழைத்துச் செல்கிறார்.

பலவித இன்னல்களுக்கு மத்தியில் மனித நாகரிகமே அற்ற ஒரு மலைப் பிரதேசத்தை பேராசிரியர் குழுவினர் அடைகின்றனர்.

அங்கு டைனோசர்கள், பறவைகள் போன்றவற்றை காண்கின்றனர். அவற்றால் பலவித இன்னல்களை அடைகின்றனர்.

பல நூறு அடிகள் பாரிய விலங்குகள் செய்த இடையூறுகளை இந்த மனிதர்கள் சமாளிக்கின்றார்கள்...........

மிக மிக இரசனையுடன் அறிவியல் அம்சங்களை உள்ளடக்கி எழுதப்பட்ட இக்கதை உண்மையில் பெரியவர்களுக்காகவே எழுதப்பட்டது. ஆனால் உலக நாடுகளில் பெரியவர்களை விட சிறியவர்களே ஆவலாகப் படித்தனர். உங்கள் இரசனைக்கு தீனி போடும் வகையில் பல திகில், மர்மச் சம்பவங்களும் இதில் அமைக்கப்பட்டுள்ளது.

இதனை எழுதியவரும் ஒரு திகில், துப்பறியும் கதைகளை எழுதும் கதாசிரியர்தான். 'எசர்லக் ஹோம்ஸ்' என்ற துப்பறியும் பாத்திரத்தை உருவாக்கிப் புகழ்பெற்ற 'சேர் ஆர்தர் காணன் டொயில்' என்பவரே இக்கதையை எழுதியவர். தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டு அண்மையில் வெளியிடப்பட்டது.

அறிவிற்கு தீனி போடும் இக்கதை உங்களுக்கு மிகவும் பயனளிக்கும் 'THE LOST WORLD' என்ற தலைப்பில் இது நூலாக உள்ளது. எளிய ஆங்கிலம். படிக்க இலகு. நூலகங்களில் இதனை எடுத்துப் படிக்கலாம்.

தொலைந்த உலகை நீங்கள் தேடத் தொடங்குங்கள்......

## வழிகாட்டுங்கள்



''தமிழினி சென்றவாரம் பத்திரிகை பார்த்தாயா? அதில் அமெரிக்க கறுப்பின உரிமைப் போராட்டம் பற்றி வந்ததல்லவா''? என தங்கையைக்கேட்டான் திலீபன்.

''ஆம் அண்ணா அமெரிக்காவில் கறுப்பினத்திற்காக போராடிய ''மாட்டின் லூதர்கிங்'' என்ற பெரியவர் பற்றியும் இந்தவாரம் போடுவதாக அதில் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் இந்தவாரம் காணவில்லை''?

''அண்ணா உனக்கு அவரைப்பற்றித் தெரியுமா? என தொடராக கூறினாள் தமிழினி.

ஆம். தெரியும். உனக்கு அவரைப் பற்றி அறிய ஆவலாக உள்ளது போல் தெரிகிறது. எனக்குத் தெரிந்ததை கூறட்டுமா?

''உனக்குத் தெரியுமா? அப்படியானால் சொல் கேட்கிறேன்'' தமிழினி அனுமதி தர திலீபன் மாட்டின் லூதர் கிங்கை பற்றி கூறத் தொடங்கினான்....

அமெரிக்காவிற்கு ஆபிரிக்க கறுப்பர்களை அடிமையாகக் கொண்டு போனது உனக்குத் தெரியுமல்லவா? அதற்குமேல் கூறுகின்றேன்...

அமெரிக்காவின் அற்லான்ரா என்ற ஊரில் மாட்டின் லூதர்கிங் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு கறுப்பர். ஆனால் படித்தவர் தன் படிப்பிற்கேற்ற வேலையை செய்தார். அவர் மனைவி பெயர் அல்பெற்றா, இவர்களுக்கு 1929 ஆம் ஆண்டில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக் குழந்தை தான் மாட்டின் லூதர்கிங், (தந்தைக்கும் மகனுக்கும் ஒரேபெயர்)

அப்போது லூதர்கிங்கிற்கு வயது ஆறு. வெள்ளைக்கார சிறுவர்களுடன் லூதர்கிங் விளையாடுவார். வெள்ளைச் சிறுவர்களும் சிறுவர்கள் தானே அதனால் அவர்களுக்குப் பெரியவர்கள்போராடும் இனச் சண்டை தெரியாது? வலுகுதூகலமாக விளையாடுவார்கள். ஆனால் இவர்களின் விளையாட்டை பெற்றோர்கள் கண்டதில்லை. ஒரு நாள் லூதர்கிங் வெள்ளைக்காரச் சிறுவனொருவனிடம் பாடத்தில் சந்தேகம் கேட்கச் சென்றான்.

''என்னண்ணா கறுப்பருக்கும், வெள்ளையருக்கும் தனிப் பாடசாலை என்றார்கள். நீ இங்கு இப்படிச் சொல்கிறாயே'' தமிழினி இடைமறித்தாள்.

''இவர்கள் இருவரும் தத்தமக்குரிய பாடசாலைகளிலேயேபடித்தார்கள். ஆனால் வீதிகள் பக்கத்தில் இருக்கும்



மார்ட்டின் லூதர்கிங்

## விடுதலை வீரர் வரிசை

போது விளையாட மாட்டார்களா?

சரி லூதர்கிங் வெள்ளைக்காரச் சிறுவன் வீட்டிற்குச் சென்றானல்லவா அங்கு வெள்ளைக்காரச் சிறுவனின் அம்மா நின்றிருந்தார். அவர் ''அடேய் நீ நீக்ரோ பையனல்லவா இங்கு எங்கு வந்தாய். ஓடு இங்கே வராதே, பார் அவரை வெள்ளைக்கார வீட்டிற்கு வர என்னதிமிர் அவனுக்கு'' திட்டி அனுப்பி விட்டாள்.

''பாவம்லூதர்கிங்'' என இரங்கினாள் தமிழினி. ''ஆமாம் வெள்ளைக்காரம்மா வின்திட்டினால் லூதர்கிங் பயந்து போனான். அழுதவாறே தன்வீட்டிற்குச் சென்றான்.

அவன் அம்மாவிடம் சென்றான் அப்போது அவர் தமது அடிமைத் தனத்தைப் பற்றி லூதர்கிங்கிற்கு விரிவாகக் கூறினான்.

இதுகேட்டு ஆறுவயதுலூதர் கிங்கிற்கு மனதில் தன் இனம் பற்றி விளங்க ஆரம்பித்தது.

தன் இன உரிமைக்காக உழைக்க எண்ணினான். ஆனால் அவன் சிறுவனல்லவா! அவனால் என்னசெய்ய முடியும்?

அதனால் அவன் தான் போராட வரும் வயது வரை காத்திருந்தான். ஆனால் நன்றாகப் படித்தான். மூல் ஹவுஸ் என்ற கல்லூரியில் உயர் கல்விக்காக சேர்ந்தார். கல்லூரியில் உலகம் பற்றிய தன் அறிவை விரிவாக வளர்த்துக் கொண்டார்.


இப்போது லூதர் கிங் போராட்டத்திற்கு தன்னை தயாராக்கி விட்டார். சரி போராட மக்களைச் சேர்க்க வேண்டுமே அதற்கு என்ன வழி. லூதர்கிங்யோசித்தார்..?

''சரி லூதர்கிங் யோசிக்கட்டும் நான் விளையாடப்போகிறேன்மீதியை நாளை சொல்கிறன் என்ன? என்று விட்டு திலீபன் பந்தும் துடுப்புமாகப் பறந்தான்.

''சீ இந்த அண்ணா இப்படித்தான்நல்ல நேரம் பார்த்து ஓடி விடுவான்.

(இன்னும்வரும்)

## வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



இரு படங்களுக்குமிடையே உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்




(13)

- பாப்பாணன்

எட்டுத்திக்கும் இருந்து குரல்கள்
 எழுந்தன கண்டனமாய்
விட்டுக் கொடுக்க மனமில்லாத
 விறைப்பு நெஞ்சினராய்
சொட்டுத்தானும் கருணையில்லா
 சோரிப் புனலாட்டம்
கட்டுக் கடங்கா நிலையில் சோகக்
 கதையாய் தொடர்ந்ததுவே,

செந்தமிழ் நாட்டில் செறிந்துள தமிழர்
 செயல் படவும் முனைந்தார்
எந்தமிழர்தம் இடரைப் போக்க
 இயன்ற வரை துடித்தார்
தந்தலை அரசை தலையிடும்படியாய்
 தவிப்பொடு இடித்துரைத்தார்
இந்திய அரசு, இந்திரா அரசு
 இடைப் புகுந்தது இதனால்,

நடு நிலை நின்று நம்மவர் இடரை
 நலம் பெறவே நீக்கும்
கடும் பணியாற்றும் கடமைசெய்ய
 கருமம் தொடங்கியது
கொடும் வெயிலிடையே குளிர் நிழல் தந்து
 குறுக்கே ஒரு மேகம்
சுடும்வெயில் தணித்த செயலது போல
 சுகமொன்றளித்தது காண்.

பார்த்த சாரதி பறந்து வந்தும்
 பயனென் றேது மில்லை
கூர்த்த மதியன் ரொமேஷ் பண்டாரி
 கூத்தும் வெல்ல வில்லை
வார்த்தை வல்லான் வெங்கடேஷ்வரனின்
 வரவில் லாபமில் லை
வேர்த்த முகமும், விரிந்த கைகளும்
 விரக்தியும் விடையாச்சு.

திம்புப் பேச்சும் திசை மாறிற்று
 தீர்வு கிட்டவில்லை
நம்பிச் சென்ற பெங்களூர்ப்பேச்சும்
 நன்மை கொட்டவில்லை
நம்பச் செய்து நாளைக் கடத்தி
 நச்சுப் புத்தியுடன்
தம்படை பெருக்கி ஆயுதம் வாங்கி
 தமிழர் மேல் பாய்ந்தார்.


சுத்தம் அற்ற இதயத் தோடும்
 சூழ்ச்சி வலை விரித்தும்
'யுத்தம் நிறுத்தம்' என்றும் சொல்லும்
 யுக்தி தனைக் கொண்டும்
சத்தம் இன்றி சமரும் தொடர்ந்து
 சங்காரம் செய்த
பித்தம் கொண்ட ஜே. ஆர். படைகள்
 பிணமாய் சரிந்தனவே.

இந்திரா காந்தி இறந்தும் ராஜீவ்
 இராச்சியப் பொறுப்பேற்றும்


காண்கின்றனர். அவற்றால் பலவித இன்னல்களை அடைகின்றனர்.

தொலைந்த உலகை நீங்கள் தேடத் தொடங்குங்கள்......

## வழிகாட்டுங்கள்



மூன்றிடத்திற்குச் செல்ல வழிகாட்டுங்கள்



இரு படங்களுக்குமிடையே உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்

திம்புப் பேச்சும் திசை மாறிற்று
    தீர்வு கிட்டவில்லை
நம்பிச் சென்ற பெங்களூர்ப்பேச்சும்
    நன்மை கொட்டவில்லை
நம்பச் செய்து நாளைக் கடத்தி
    நச்சுப் புத்தியுடன்
தம்படை பெருக்கி ஆயுதம் வாங்கி
    தமிழர் மேல் பாய்ந்தார்.

சுத்தம் அற்ற இதயத் தோடும்
    சூழ்ச்சி வலை விரித்தும்
'யுத்தம் நிறுத்தம்' என்றும் சொல்லும்
    யுக்தி தனைக் கொண்டும்
சத்தம் இன்றி சமரும் தொடர்ந்து
    சங்காரம் செய்த
பித்தம் கொண்ட ஜே. ஆர். படைகள்
    பிணமாய் சரிந்தனவே.

இந்திரா காந்தி இறந்தும் ராஜீவ்
    இராச்சியப் பொறுப்பேற்றும்
மந்திராலோசனை மாற்றுத்திட்டம்
    மணி மணியாய் வகுத்தும்
தந்திரக் கிழவன் ஜே. ஆர். திட்டம்
    தமிழர்க் கெதிராக
இந்த'ரா' ஒன்றாய், மறுபகல் வேறாய்
    இடறினன் வாய்மையிலே.

பேச்சு வார்த்தை ஒருபுறம் மறுபுறம்
    'நேபாம்' எரிகுண்டு
வீச்சும், தமிழர் எரிந்து அனலாய்
    வீசும் பெருமூச்சும்
'ஆச் சுது இனிமேல்' அடுத்தது என்று
    இந்தியா இறங்கியது
கூச்சல் போட்டு சிங்களச் சாதி
    ''குடியழிந்தது'' என்றார்.

– தொடரும்

## சிரிக்கும் பறவை ●●

மாலை இரண்டுமணி...தீபன், துர்க்கா, கஜன், பிரபன் குழு என்னசெய்வது என்று யோசித்தவாறு இருந்தது.

'பேசாம அப்புசாமித்தாத்தா வீட்டுக்குப் போவம் அண்டைக்குப் பறவைகளைப் பற்றிச் சொன்னவர். இண்டைக்குப் பறவை ஒன்றைப் பற்றிச் சொல்கிறேன் என்று சொன்னவர்' என்று நல்ல யோசனை கூறினான் பிரபன்.

தன்விட்டு வாசலில் அப்புசாமி இருக்கிறார். சிறுவர்படையைக் கண்டதும் 'என்ன நேரத் தோடை வந்திட்டியள்' என விசாரித்தார். சிறுவர் படை விடைசொன்னது.

உங்களுக்கு இப்ப சிரிக்கிற பறவையைப் பற்றிச் சொல்லப்போறன்...

சிரிப்பு மனிதர்களாகிய நமக்கு கிடைத்துள்ளவரப்பிரசாதம் மனிதருக்குமட்டுமா? ஒரு பறவைக்கும் கூட. ஆம் அவுஸ்திரேலியாவைமட்டும் இருப்பிடமாகக் கொண்ட கூக்காபாரா என்ற பறவை கத்துவது சிரிப்பது போல இருக்கும். இது சிரிப்பதும் ஒரு இசையில் தான். இதன் சிரிப்பை 'மரியன் சின்க்ளையர்' என்ற சங்கீத ஆசிரியை 1934 இல் ஒரு மெட்டாக இசை அமைத்தார்.

இச்சிரிக்கும் சங்கீத மேதையான கூக்காபாராவின் பிறப்பிடம் நியுகினியா. ஆனால் இன்று இக்கூக்காபாரா ஒன்று கூட அந்நாட்டில் இல்லை. இது ஒரு மீன் கொத்தி இனப்



பறவையாகும். முழுவளர்ச்சியடைந்த கூக்கா பாராவின் நீளம் 46 சென்ரி மீற்றராகும். இதன் உயிரியல் பெயர் டக்கீலோ நோவாகினி (Dacelo novaguineae) ஆகும். 1880இல் இப்பெயர் இதற்கிடப்பட்டது.

இக் கூக்கா பாரா ஒன்று சிரிக்கத் தொடங்கினால் போதும். அயல் கூக்காபாராக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு சிரிப்புக் கச்சேரியே வைக்கும். இதனை இச்சிரிப்பினால் அவுஸ்திரேலியர் 'வானத்து மனிதன்' என்று அழைப்பர்.

### உணவு

இதன் அபிமான உணவு நம் படையே கண்டு நடுங்கும் பாம்புதான், பாம்பைக்கண்டால் மிகுந்த ஆவலோடு கொத்திச் சென்று உண்ணும். மேலும் கூரிய பார்வை சக்திகொண்ட கூக்கா பாராக்கள் 35 மீற்றர் தூரத்திலிருந்து கூட நிலத்திலுள்ள தவளை, பல்லி, வெட்டுக்கிளி, சிலந்தி போன்றவற்றை குறிபார்த்து வந்து பிடிக்கும் ஆற்றல் கொண்டன.

### உறைவிடம்

மரப்பொந்துகளே இவை விரும்பி உறையும் வீடுகளாகும். பிசின் மரங்கள், இயூக்கலிப்டஸ் ஆகிய வற்றில் கூடுகளை கண்டால் போதும். உடனே அதனைச் சரிப்படுத்தித்தன் கூடாக்கிவிடும். கூட்டின் அடி சமமட்டமாக இருக்கும். எதிரிகளால்தாக்கப்பட முடியாதமிகுந்தபாதுகாப்பு டையதாக கூக்காபாராவின் கூடு இருக்கும்.

இதனை முதலில் ஆய்வுசெய்தவர் 'விர்கோனியா பாரி' என்ற 24 வயதுடைய அமெரிக்கப் பெண் ஆவார். இவரும் தன் எதிர்காலக் கணவரான 'எர்னி மடெவி போக்ட்' என்பவரும் சேர்ந்து இக் கூக்கா பாராக்களைப் பற்றி ஆய்வு செய்தனர்.

### சிரிக்கும் சங்கீத மேதை
#### 'கூக்காபாரா'

முட்டை இடும் காலங்களில் பாரி ஒவ்வொரு மரமாக ஏறி கூக்காபாராக்களின் முட்டைகளை எடுத்து அதன் பருமன், நிறை ஆகியவற்றைக் குறித்து வந்தார். அவ்வேளைகளில் ஆவேசம் கொண்டு வரும் கூக்காபாராக்களிடமிருந்து தன்னைப் பாதுகாக்கப் பாரிய தலைக்கவசத்துடன் கூடிய கவச உடையை அணிவார். இவ்வாறு இரண்டு ஆண்டுகள் அவுஸ்திரேலியாவில் தங்கி இருந்து கூக்கா பாராக்களை ஆய்வுசெய்தார்.

கூக்காபாராக்கள் 20 வருடங்கள் வரையே உயிர்வாழும் தன்மை உடையவை. இது ஒரு கூட்டையே 15 ஆண்டுகள் உபயோகிக்கும்.

எப்படி இருக்கின்றார் சிரிக்கும் சங்கீத மேதை?

தாத்தா உண்மையிலே இப்பிடிசிரிக்கிறபறவை இருக்கோ' என கூக்காபாராமேல்சந்தேகப்பட்டான் துர்க்கா.

'நான் என்ன புளுகிறனே. இந்தா பாருங்கோ அதின்ரை படம்' அப்புசாமி படத்தைக் காட்ட சிறுவர்படை திருப்தி கண்டது.

'சரி அடுத்த பறவையைச் சொல்லிறதிற்கு முந்தி அங்கை உள்ள பாட்டி பலகாரம் சுட்டு வச்சிருக்கிறா. வேண்டிச் சாப்பிட்டுட்டு வாருங்கோ' என அப்புசாமி கூற சிறுவர்படை பாட்டி அருகே நின்றது.

□

## [4] கணனியின் கதை

## ரோபோட்டின் இயக்கம்

நீங்கள் உங்களைப் போல ஒரு பருமட்டான உருவத்தை உலோகங்களினால் உருவாக்குகின்றீர்கள் என வைத்துக்கொள்வோம். அந்த உருவத்தின் உடலில் கை, கால்களை மடக்கக்கூடியதாக அமையுங்கள்.

உங்கள் உடலில் கை கால்கள் அசைய வேண்டுமானால் நார்த்தசைகள் இயங்க வேண்டும் என விஞ்ஞானத்தில் படித்திருப்பீர்கள்,

அதனைப் போல நீங்கள் செய்த உருவத்தின் கை கால்களுக்கு கம்பி (cable) இணைப்புகளை தொடுங்கள்.

அப்படி இணைக்கப்பட்ட கம்பிகளை அசைப்பதன் மூலம் அந்த உருவத்தை அசையச் செய்யலாம்.

இதே போன்றது தான் 'ரோபோட்' எனப்படும் இயந்திர மனிதன். உலோகத்தினால் செய்யப்பட்ட ரோபோட்டின் கைகால்கள் ஒரு கணனியுடன் பொருத்தப் பட்டிருக்கும். ரோபோட்டின் நெஞ்சில் கணனி அமைந்திருக்கும். இந்தக்கணனி இடும் கட்டளைக்கேற்ப கம்பிகள் அசைக்கப்பட ரோபோட் இயங்கும்.

இன்று உலக நாடுகள் பெரும்பாலானவற்றில் ரோபோட்கள் உள்ளன. மனிதர்கள் செய்யும் வேலைகளைச் செய்கின்றன.

மனிதனுடன் சதுரங்கம் ஆடுகின்றன. இதற்கு காரணமாக அமைவது அதில் அமைந்துள்ள சிறந்த கணனியேயாகும்.

இன்றைய ரோபோட்கள் மனிதர்கள் இடும் கட்டளைகளையே செயற்படுத்துகின்றன ஆனால் எதிர்காலத்தில் சுயமாக மனிதர்களைப் போல் சிந்திக்கும் ஆற்றல் கொண்ட ரோபோட்கள் வரலாம். அவை வரின் நாமெல்லாம் அவற்றின்கீழ் அடிமையாக இருக்கவேண்டியும் வரலாம். அவற்றுக்கு வேலைக்காரராக நாமும் வேலை பார்க்கலாம்.

ஐயய்யோ இந்தக் கணனியை வளரவிட்டால் பெரும் தொல்லையாக இருக்குமே என நீங்கள் இப்போது கவலைப்படுகின்றீர்கள் இல்லையா? □

## சிறுகதை

விடிகாலைப் பொழுதின் சூரியக் கதிர்கள் கடலின் மேற்பரப்பில் பட்டுக் கம்பளங்கள் விரித்துக் கொண்டிருந்தன. திருமலைத் துறைமுகத்தில் இந்தியக் கப்பல்கள் தங்கள் சிப்பாய்களை ஏற்றிக் கொண்டு புறப்பட ஆயத்தம் செய்து கொண்டிருந்தன. ஆறுமணி லோஞ்ச் சடலலைசளை விழித்துக் கொண்டு மூதூருக்கு புறப்பட்டது. வாகன ஓட்டங்கள் குறைந்திருந்தாலும், சைக்கிள்களும், சாலிகளும் பறந்து கொண்டிருந்தன. பள்ளிக் கூட நாளாதலால் வெள்ளை சீருடை சிறுவர் சிறுமியர் வீதியில் சுறுசுறுப்பாய் போய்க்கொண்டிருந்தனர்.

மாதங்கி டீச்சர் பள்ளிக் கூடம் போக ஆயத்தமாகினாள். யாருக்காகவும் காத்திராபல் நேரம் போய்க் கொண்டிருந்தது. சரியாக மணி எட்டடிக்கும் பொழுது பாடசாலையை அண்மித்து விடுவாள் மாதங்கி. காளி கோவிலடியை அண்மித்ததும் செருப்பைக் கழட்டி ஓரமாக வைத்துவிட்டு, பிள்ளையாரையும், காளியாச்சியையும் வேண்டிக் கொள்ளும் விடயம் ஒன்றுதான். - 'காளியாச்சி, என்ர அவர் வந்து சேர வேண்டும்' கடந்த நாலுவருடமாக அவள் வேண்டுவதெல்லாம் இந்த ஒன்றுதான். அந்தச்சில நிமிடங்களில் விழிகள் குளமாகும். கைக்குட்டையை அணையாக்கி நீர்முத்துக்கள் சிதறாமல் ஒற்றி எடுத்து விடுவாள் மாதங்கி. தன் சுகதுக்கங்களை தினமும் கடவுளிடம் பரிமாறிக் கொண்டு ஆறுதலை தேடமுனைந்தாள் மாதங்கி. இதற்கிடையில் பறந்து செல்லும் மாணவமணிகளின் 'குட்மோனிங்' டீச்சருக்குப்பதில் குட்மோனிங் சொல்லி, ரோஜாவாய் முகத்தை மலரச் செய்து, தன் இயல்பை மாற்றி.... இப்படியெல்லாம் செய்ய மாதங்கியால் தான் முடியும்.

மாதங்கிக்கு மின்னல் அடித்தற்போல் கணவன் நினைவு வந்தது. அவள் முதன் முதலாக ஆசிரியத் தொழில் கிடைத்து சந்தித்த முதல் நபர் வேந்தன்மாஸ்டர் தான். அதே போல் அவரையே வாழ்க்கைத் துணைவராக அடைந்த பொழுது அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. வேந்தன் மாஸ்டரின் வீட்டில் எதிர்ப்புக்கள் கிளம்பியபோது... 'வேந்தன் உங்கட அப்பா அம்மாக்கு விருப்பமில்லாமல்'... அவள் மேலே சொல்ல வார்த்தை வராமல் அவள் விழிகள் கலங்கிய போது, 'மாதங்கி இந்த உலகத்தில் மனுஷர் வாழுற காலம்கொஞ்சம்தான். இதெல்லாம் சின்னபிரச்சினை. நீங்க ஒன்றுக்கும் யோசியாதீங்க' அவள் மனப்புண்ணுக்கு ஒத்தடம்ட்டு அவளை வாழ்க்கை துணைவியாய் ஏற்றுக் கொண்டார் வேந்தன் மாஸ்டர்.

சின்னஞ்சிறிய வீட்டில் அவர்களது இல்லறம் ஆரம்பித்தது. மாதங்கியின் முகமெல்லாம் மகிழ்ச்சி. மனசின் நிறைவு உடலில் புதுப் பொலிவை ஏற்படுத்தியிருந்தது. நெற்றியிலும் வகிட்டிலும் புதிதாய் குங்குமம் குடியேறியிருந்தது. இருவரும் பள்ளிக்கூடம்போய் வருவதுபுதிய அனுபவமாயிருந்தது. திருகோணமலை அடிக்கடி இலங்கை ராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட நேரமது. அது ஒன்று தான் வேந்தனை அடிக்கடி பயமுறுத்தியது.

'மாதங்கி 'ரவுண்டப்' பண்ணப் போகினமாம் பயமாத்தான் இருக்கு' வேந்தன் சொன்ன பொழுது மாதங்கி சிரித்தாள். நீங்கள் என்ன சின்ன பெடியனே! பெடியள் ஓடியிருப்பினம். கலியாணம் கட்டி, உத்தியோகம் பார்க்கிற உங்களை ஏன் பிடிக்கப் போகினம்' அவள் சமாதானம் சொன்னாள்.

'ராணுவத்தானுக்கு ஆறெண்டு இடக்கு'

'சும்மா இல்லாததை யோசித்து குழம்பாதீங்க! எனக்கொரு ஆசை. இரண்டு பேரும் தியேட்டரில் போய் ஒருபடம் பார்க்க வேணும்!'

'இது என்ன பெரிய ஆசை. நாளைக்கு கட்டாயம் போவம்.'

ஆனால் இருவராலும்போக முடியவில்லை.

விடியவும் ஆமிக்காரர் வீதியெல்லாம் நின்றனர். ஒருவரையும் வீட்டை விட்டுவெளியேறக் கூடாது என்று கட்டளையிட்டார்கள்.

மாதங்கிக்கு உடம்பெல்லாம் நடுங்கியது.

'மாதங்கி! நீங்கள் ஏன் பதட்டப் படுறீங்க! அவன் வந்திட்டு போறான். நமக்கென்ன'

அவன் அவளுக்கு ஆறுதல் சொல்லி விட்டு, எல்லாதெய்வங்களையும் வேண்டுதல் செய்தான். எதிர்வீட்டு ராசா, அகிலன் இப்படி எல்லாரையும் பஸ்ஸுக்குள் ஏற்றுவதை ஜன்னல் துவாரத்தின் வழியாக பார்த்துக் கொண்டிருந்தாள் மாதங்கி.

அவர்கள் வீட்டு கதவு தட்டவும் போய் திறக்க முடியாமல் கால்கள் அசையமறுத்தன. உடல் வியர்வையில் குளிக்க, இதயம் திக் திக் என்று அடித்தது. வெளியில் நின்று கேட்ட உக்கிரமான சத்தம் அவளையறியாமல் கதவுதிறக்க வைத்தது. கேள்வி கேட்க இடமில்லாமல் வேந்தனை இழுத்துக் கொண்டு போனார்கள்.

'ஐயோ! இவர் மாஸ்டர் அவருக்கும் இயக்கத்துக்கும் தொடர்பு இல்லை'

சிங்களத்தில் திட்டினான். அவள் அவன் காலைப் பிடித்தாள். அவன்உதறி விட்டு மற்ற வீட்டுப் படியேறினான். வேந்தன் அழுது அழுது பஸ்ஸில் இருந்து அவளைப்பார்த்தான். ஒரு சோடி சிட்டுக் குருவியை ஒவ்வொன்றாய்ப் பிரித்து அவை ஒன்றை ஒன்று பிரியமுடியாமல் வெறுமனே கத்தும் நிலையில் இருவரும் இருந்தனர். வாயில் வார்த்தைகள் வரவில்லை. வெறுமனே அழுகைதான் அவளிடம் வெளிப்பட்டது.

பின்னர்...தமிழ்பெண்களின் அன்றைய நிலை அவளுக்கும் ஏற்பட்டது. கோட்டைக்குள் போய் விசாரித்தாள். பிடித்த லிஸ்டில் அந்தப் பெயர் இல்லையாம்! கையை விரித்தார்கள். பல இடங்களில் விசாரித்தாள். ஊரே பொறாமைப் படும்படி வாழ்ந்த நான்கு ..ாத இல்லற வாழ்க்கை! இன்னும் கல்யாண அல்டம் பார்த்தே அலுக்க வில்லை. வேந்தன் ஆசையோடு வாங்கித் தந்த சேலையை கட்டி அழகு பார்க்க வில்லை; இது அணு அணுவாய் சாகடிக்கிற கொடுமை. மாதங்கி வீட்டின் மூலையில் முடங்கிக் கொண்டாள். பள்ளிக்கூட ஆசிரியர்கள் பலர் வந்தார்கள். மாதங்கியையும், வேந்தன் மாஸ்டரையும் நேசிக்கும் மாணவ மணிகள் வந்து போனார்கள். ஆறுதல் சொன்னார்கள்.


'டீச்சர்! இப்படி வீட்டுக்க கிடந்து என்ன செய்யப்போறீங்க. லீவும் வீணாப்போகுது அவரை விசாரிச்சுட்டு விட்டுப் போடுவாங்கள். அதிபரும் அது விசயமாத்தான் ஓடித் திரியிறார். வீட்டுக்க இருந்து யோசியாம நாளைக்கு பள்ளிக்கூடம் வாங்கோ' என்றார் ஒரு ஆசிரியர்.

'என்னால ஏலாது மாஸ்டர்' அவள் விம்மி அழுதாள்.

'நீங்கள் கட்டாயம் வாங்கோ எங்களால முடிஞ்சதை செய்வம்'

இப்படி பலரின் வேண்டுதல்களின் பின் பள்ளிக் கூடம் வெளிக்கிட்டாள்.

— சித்ரா நாகநாதன்



## எதிர்பார்ப்புகள்

மெலிந்து உருவமே மாறியிருந்தாள். மிகவும் சிரமப் பட்டுவெளிக்கிட்டாள். நெற்றியிலே குங்குமத்தை வைக்கும் பொழுது நீர் கண்களை நிறைத்தது.

'மாதங்கி உம்மடை முகத்துக்கு பெரிய குங்குமப் பொட்டு நல்ல வடிவு'...வேந்தனின் குரல் அவள் காதுகளில் ஒலித்தது.

வீதியில் இறங்கினாள் மாதங்கி.

'டீச்சர்! மாஸ்டர் வந்திட்டாரே?'

எதிர்ப்படும் முகங்களின் கேள்விக்கு 'இ...ல்லை' என்ற வார்த்தையை மிகவும் சிரமப் பட்டு சொல்லிக் கொண்டு பள்ளிக்கூடம் போய்ச் சேர்ந்தாள்.

அதிபர் வந்து ஆறுதல் சொன்னார்.

'சேர் என்னால ஒழுங்கா படிப்பிக்க முடியாது. எனக்கு இன்னும் லீவு வேண்டும்'...

'இல்லை மாதங்கி, உங்கட மனசை மாத்த வேண்டும் என்றுதான் வரச் சொன்னனான். வீட்டுக்க இருந்து அழுறதைவிட, இங்க நாலுபேரை சந்திக்கக்குள்ள மனம் கொஞ்சம் நிம்மதிப்படும்! நீங்கள் வகுப்பு எடுக்காட்டாலும் பரவாயில்லை.'

'இல்லைசேர்! நான் வகுப்பு எடுப்பன். சும்மா வாறதென்றால் எனக்கு விருப்பமில்லை.

அவருக்கு தெரியும் வேலை விசயத்தில் மாதங்கியின் நேர்மையும், உண்மையான உழைப்பு, நேரத்தை வீணடிக்காத தன்மை எத்தகையது என்று. இதனால் அவர் மாதங்கியிடம் ஒரு தனி மதிப்பை வைத்திருந்தார்.

தன் மாணவ மணிகளின் அன்பில் அவள் தன்னை மறப்பாள். இது அவளது மனப் புண்ணுக்கு நல்ல மருந்து என்று அவர் கருதினார். இந்த இராணுவ ஆட்டம் எப்ப முடியுதோ, எங்கடசனங்களின்ர மனசுக்கு எப்ப நிம்மதி வந்து சேருமோ? இப்படி யோசித்து அவளை அன்போடு ஆதரித்தார்.


காலங்கள் தான் எத்தனை வேகமாக ஓடுகின்றது. அவர் பூசாவில அல்லது வெலிக்கடையில தான் இருப்பார் இப்படி யாரோ சொன்ன நம்பிக்கை வார்த்தைகளை வைத்துக்கொண்டு காலத்தை ஓட்டினாள் மாதங்கி. இந்தியா வந்தது அவளுக்கு புதிய நம்பிக்கை பிறந்தது. பூஸாவில் இருக்கிறவையளை விடுவிப்பினமாம். அப்ப அவரும் வருவார். இந்த புதிய நம்பிக்கை அவளது நிலையில் கொஞ்சம் மாறுதலை ஏற்படுத்தியது. இப்பொழுதெல்லாம் அவளது நிலையில் கொஞ்சம் மாறுதல் தென்பட்டது. அவனது படத்தில் முகம் பதித்து, தனக்குள் சிரித்து. பெரிய எதிர் பார்ப்பில் காலத்தை ஓட்டினாள்.

இந்த சந்தோஷம் மிக சொற்ப காலமே! திரும்பவும் ஓட்டமும் ஒளிப்பும் இதென்ன சீவியம்! அலுத்துக்கொண்டாள் மாதங்கி. திரும்பவும் ''ரவுண்டப்'' இப்பொழுது இந்தியா செய்தது. அவள் வீட்டில் பிடிக்க ஆண்கள் இருக்கவில்லை. ஆனால் வேறுபலர் அவளது நிலையை அடைந்தனர்! அவர் பூஸாவிலோ வெலிக்கடையிலோ இருக்கட்டும்! இப்ப வந்து திரும்பவும் பிடிபடாமல் ... வேறு விதமாய் சிந்தித்தாள். மனசைத் தைரியப் படுத்திக் கொண்டாள் மாதங்கி.

இரண்டரை ஆண்டுகளின் பின் இந்திய இராணுவம் இழுபறியில் நாடு திரும்புகிறது. கூடவே பலரின் பூவையும் பொட்டையும், பறித்துச் செல்கிறது. வீடு வாசல்களை நிர்மூலமாக்கி விட்டு இவை எல்லாவற்றையும் தூக்கி எறிகிற மாதிரி எமது இளைஞர்களுக்கு போதை மருந்தை அறிமுகப்படுத்தி விட்டு செல்கிறது. இவர்கள் போகட்டும்! இனியாவது என் வேந்தனை எங்கே என்று கண்டு பிடிப்பேன். மனசைத் திடப்படுத்திப் பார்த்தாள் மாதங்கி. வேந்தன் வாங்கித் தந்த சேலையை தன் கன்னத்தில் ஒற்றிக் கொண்டாள். கூறைச் சேலையை தடவிக் கொடுத்தாள். கல்யாண அல்பத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்தாள்! விழிகள் கலங்கின. ஆனாலும் அவளுக்கு ஒரு நம்பிக்கை! 'வேந்தன் வருவார்'

இப்போதும் அதே நம்பிக்கையுடன் தான் பாடசாலை நோக்கி நடக்கிறாள்.

> □ சுதந்திரமாய் இருக்க உறுதி கொண்ட மனிதன் மீது அடிமைத்தளையை நாட்டுவதை விட, நிலையான மலையை அடியோடு பெயர்த்து அப்பால் எறிவது கூட எளிதானது.
>
> ரொபேட் ஸதே



## இலக்கியம்

ஈழத்துத் தமிழ்இன உணர்வானதுமுறையே நாடகம், சிறுகதை என்பவற்றில் வெளிப்படத் தொடங்கியது.

**நாடகங்களில்......**

தனக்கெனத் தனித்தன்மை வாய்ந்த நாட்டுக்கூத்துப் பாரம்பரியத்தையும் அதன் யாழ்ப்பாணப்பிரதேசத் தமிழர்) என்போரை உணர்த்தி நிற்பன என்பதுவெளிப்படை. நாகநாடு என்ற தளத்தில் (யாழ்ப்பாணப் பிரதேசம்) நிகழும் நாடக நிகழ்ச்சிகள் அக்காலப் பகுதியில் அரசியலில் ஈடுபட்டவர்களின் சுய கொண்டுதான் உந்த வேலை எல்லாம்.

(இருநாடகம்–ப. 78)

இடதுசாரி அரசியல்வாதி ஒருவரின் கண்ணோட்டத்தில் முன் வைக்கப்படும் மேற்படி கருத்து பேராசிரியரது சொந்தக் கருத்து என நாம் மயங்க வேண்டியதில்லை. ஆனாலும் இதற்கு எதிரான அல்லது தமிழருக்கு ஒரு தனியான அரசியல் சிந்தனையின் தேவையை நியாயப்படுத்தும் கருத்து எதுவும் நாடகத்தில் இடம் பெறவில்லை என்பது நாம் கவனத் பரநிருபசிங்கன் ஆகியோர் அவனை அந்நியரிடம் காட்டிக் கொடுத்த துரோகிகளாகவும் இந்நாடகம் சித்திரிக்கிறது. பேராசிரியரின் 'சங்கிலி' நாடகத்திலும் இத்தகு பாத்திரப் பண்புச் சித்தரிப்பே அமைந்துள்ளது. சொக்கன் தமது நாடகத்தின் அறிமுகத்திலே,

'யாழ்ப்பாணத்தைத் தமிழ் மன்னன் ஆண்டகாலம். ரிஷபக்கொடி வான் உயர்ந்து பறந்த காலம் பண்பும் வளனும் பரந்துகிடந்த பொற் களோடு ஒத்துழைக்க முயன்றமையைச் சாடும் எண்ணப் பாங்கு இதில் தொனிக்கக் காணலாம்.

சங்கிலி எனப்படும் செகராசசேகரன் (கி. பி. 1519—65) வரலாற்றாய்வாளரால் பொதுவாக துஷ்டனாகவும் அதேவேளை நாட்டுப்பற்றும், வீரமும் உடையவனாகவும் கணிக்கப்பெற்று வந்தவன். சொக்கனும் பேராசிரியரும் சமகால அரசியல் சூழ்நிலையிலே அந்தத் தலைவனுக்குத் துஷ்டத்தனத்தை நீக்கிப் தப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது. இவை யாவும் பொதுவாக சமகால அறப்போராட்டசூழலின் கதையம்சங் கொண்டனவாகும். நா வேந்தனின் 'அரசியல் ராஜினாமா' (21-1-57) 'கடைசி முத்தம்' (9-6-57), எஸ. சிவபாதம்எழுதிய 'நல்ல தீர்ப்பு' (23-3-57), கரிகாலனின் 'நிரபராதி' (31-3-'57), 'சிறைகள் நிறைந்தன' (12-5- 57), அன்பனின் 'தளபதி குமார்' (5-6-57) என்பனஅவை.

தலை தேடமுனைந்தாள் மாதங்கி. இதற்கிடையில் பறந்து செல்லும் மாணவமணிகளின் 'குட்மோனிங்' டீச்சருக்குப் பதில் குட்மோனிங் சொல்லி, ரோஜாவாய்

யது.

'மாதங்கி 'ரவுண்டப்' பண்ணப் போகினமாம் பயமாத்தான் இருக்கு' வேந்தன் சொன்ன பொழுது மாதங்கி

சிங்களத்தில் திட்டினான். அவள் அவன் காலைப் பிடித்தாள். அவன்உதறி விட்டு மற்ற வீட்டுப் படியேறினான். வேந்தன் அழுது அழுது பஸ்

மாஸ்டரையும் நேசிக்கும் மாணவ மணிகள் வந்து போனார்கள். ஆறுதல் சொன்னார்கள்.

'டீச்சர்! மாஸ்டர் வந்திட்டாரே?'

எதிர்ப்படும் முகங்களின் கேள்விக்கு 'இ...ல்லை' என்ற

அவளது நிலையில் கொஞ்சம் மாறுதலை ஏற்படுத்தியது. இப்பொழுதெல்லாம் அவளது நிலையில் கொஞ்சம் மாறுதல்

யோடு பெயர்த்து அப்பால் எறிவது கூட எளிதானது.

ரொபேட் ஸதே



# இலக்கியம்

# ஈழத்துத் தமிழ் இன உணர்வின் இலக்கிய வெளிப்பாடு

**கலாநிதி - நா - சுப்பிரமணியன்**

## ஈழத்துத் தமிழ் இனஉணர்வின் உணர்ச்சிக் கவிதைகள் பகுதி-4

ஈழத்துத் தமிழ் இன, உணர்வின் உணர்ச்சிக் கவிதைகளின் முதல் தொகுதியான தமிழ் எங்கள் ஆயுதம் என்ற முற்சுட்டிய தொகுப்பில் அமைந்த கவிதைகளின் தரத்துக்குப் பதச் சோறாகச் சில கவிதைகளை இங்கு நோக்கலாம்.

கறையிலாத் தமிழ் தெருக்
கணிகைமா தென வெறிக்
கயவரின் தயவிலாக்
காலிடைப் படுவதா
முறையிலா வழிகளில்
முரடர் எம் முடிவையே
முயல நாம் மூடியோர்
மூலையில் துயில்வதா?
பறையெலாம் அதிர்க நம்
பலமெலாம் திரள்கவே!
பாதிநா டெங்களுக்
காக என் றெழுகவே
அறமெலாம் ஒரு கரைப்
படின் அவர் வெல்லுதல்
அணு பிளந்தெறியினும்
ஆவதொன் றல்லவே.!

இது (காலஞ் சென்ற) மஹாகவியின் கதை.

ஈழ நிலந்தனில் இன்ப நறுந்
தமிழ் மீதே தாம்
எண்ணிய வாறிடர் செய்பவர்
தீவழி போவாரேல்
ஆழ அகழ்ந்தெறி தீமைகள்
வேருடன்: ஆராத
அன்புடையாய் தமிழ் மீதினில்
என்பது பொய்யாமோ?

தாயை ஒறுத்திடு வோரை
எதிர்த்திடு; தாழ்வோடத்
தானை நடத்துக; போதுமினிப்
பொறை; தன்மானச்
சீயமெனப் பகை சாய வலத்
தொடு செல்லாயோ
தேயமிதிற் பிறழ் ஞாயம்
இருப்பது தீராயோ?

இவை முருகையன் அவர்களின் கவிதைகள்.

இக்கவிதைகளில்போராட்ட கால உணர்வெழுச்சிக்கு ஏற்ப ஓசை (சந்த)ச் சிறப்பை அவதானிக்கலாம்.

இவ்வாறு தமிழ் உணர்ச்சிக் கவிதைகள் எழுதப்பட்டுவந்த 50-60 காலப்பகுதியில் கவிதைத் துறைக்கு அடுத்ததாக ஈழத்துத் தமிழ்இன உணர்வானதுமுறையே நாடகம், சிறுகதை என்பவற்றில் வெளிப்படத் தொடங்கியது.

**நாடகங்களில்......**

தனக்கெனத் தனித்தன்மை வாய்ந்த நாட்டுக்கூத்துப் பாரம்பரியத்தையும் அதன் தொடர்ச்சியான நாடக பாரம்பரியத்தையும் கொண்ட ஈழத்தில் நாடக இலக்கியம் ஒரு தனித்துறையாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலே சமயம், தத்துவம் அறப்போதனை ஆகிய உள்ளடக்கங்கள் கொண்ட நாடகங்கள் எழுதப்பட்டன. 1940ஐ அடுத்து சமூக விழிப்புநோக்கு நாடகங்களில் முதன்மை பெறத் தொடங்கியது. 50களின் ஆரம்பத்திலே தமிழ்க் காங்கிரஸ்-தமிழரசு வேறுபாடுகள் முனைப்புப் பெறத் தொடங்கிய காலப்பகுதியிலே அக்காலப்பகுதி அரசியற் சூழ்நிலையை அங்கதச் சுவைபட விமர்சிப்பதாக பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் தவறான எண்ணம் நாடகம் வெளிவந்துள்ளது. (1951ஆம் ஆண்டில் இருநாடகம் என்ற தலைப்பில் வெளிவந்த தொகுப்பில் இது இடம் பெற்றது.)

இந்த நாடகத்திலே ஈழத் தமிழரின் இன உணர்வு பற்றி வெளிப்படையாக எதுவும் பேசப்படவில்லை. ஆயினும் பெரும்பான்மையினத்தின் அரசியற் கட்சிகளின் தேசியம் பேசும் குரலும் இடதுசாரி வலதுசாரி உணர்வுகளும் சிறுபான்மையினங்கள் மேற்படி பெரும்பான்மையினத்தோடு ஒத்துழைத்தும் முரண்பட்டும் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள முற்படுவதும் உணர்த்தப்பட்டுள்ளது. தெங்கந்திவு என்ற பெயரில் இலங்கை சுட்டப்பட்டுள்ளது. அதிற் பெரும்பான்மையினர் ஆகக் கூறப்படுபவர்களை அவுணர் எனப் பேராசிரியர் சுட்டுகிறார். சிறுபான்மையினராக தேவர், நாகர் முதலியோர் சுட்டப்பட்டனர். மேற்படி பெரும்பான்மை சிறுபான்மைக் குறியீடுகள் முறையே சிங்களவர், இந்திய வம்சாவழித் தமிழர், இலங்கைத்தமிழர் (குறிப்பாக யாழ்ப்பாணப்பிரதேசத் தமிழர்) என்போரை உணர்த்தி நிற்பன என்பதுவெளிப்படை. நாகநாடு என்ற தளத்தில் (யாழ்ப்பாணப் பிரதேசம்) நிகழும் நாடக நிகழ்ச்சிகள் அக்காலப் பகுதியில் அரசியலில் ஈடுபட்டவர்களின் சுய நலம், கொள்கை முரண்பாடு என்பவற்றைச் சுட்டிக் காட்டி எள்ளி நகையாடும் இயல்பில் அமைந்தன. குறிப்பாக நாகர்களுக்காக தமிழர்களுக்காக தனிக்கட்சிஅமைத்தவர்களின் எண்ணமும் செயன்முறையும் தீவிர விமர்சனத்துக்குள்ளாகின்றன.

''இந்தத் தெங்கந்தீவிலே உள்ள சனங்களில் பெருந் தொகையானவர்கள்அவுணர்கள். அதனால் பாளிமேந்திலை(Parliment) அவுணர் மெம்பேசு (members) தான் கூடிவிடுவாங்கள். அதைப் பாத்துப் போட்டு, தங்களுக்கு ஒரு பட்டம் பதவி ஒண்டும்வராது எண்டுநினைச்சுத்தான், இந்த நாகர் காங்கிரசை உங்கள் தலைவர்கள் தொடங்கினது. ஆனால் நாசனல் பாட்டிக்காரரிலை உங்கடைபாருப்புவேகயில்லை அப்ப காங்கிரசிலை ஒரு பகுதிக்காரர் பாத்தான்கள் நாசனல் பாட்டியோடை சேராமல் பிறிஞ்சு நிண்டால் சாயம் கழண்டு போடும் எண்டு. பின்னை, அவங்களோடை ஒத்துழைச்சால் நாகருக்கு ஏதோ பெரிய லாபம் வந்து விடுமெண்டு எண்ணிக் கொண்டு மெதுவாக வெக்கத்தைக் கக்கத்துக்கை வச்சுக் கொண்டு மற்றப் பாட்டிக்குத் தெரியாமல் போய், பழியோ முறையோ எண்டு நாசனல் பாட்டியின்ரை காலிலை விழுந்தாங்கள். இது மற்றப் பாட்டிக்குக் கோவம். இவங்கள் தங்களைமற்றவங்கள் விளையாடிப்போட்டாங்கள் எண்டு நினைச்சுக் கொண்டு சாதிப் புனிதம், மொழிப் புனிதம் என்னும் வகுப்பு வாதங்களைக் கொதிப்பிச்சுக் கொண்டுதிரியினம். நாகருக்குப் பிறிம்பான இராச்சியம் வேணுமாம். அப்பிடிப் பிறிம்பான இராச்சியம் வந்தால் குட்டிக் கவுணர், மந்திரி ஆகலாம் எண்டு கனாக் கண்டு கொண்டுதான் உந்த வேலை எல்லாம்.

(இருநாடகம்-ப. 78)

இடதுசாரி அரசியல்வாதி ஒருவரின் கண்ணோட்டத்தில் முன் வைக்கப்படும் மேற்படி கருத்து பேராசிரியரது சொந்தக் கருத்து என நாம் மயங்க வேண்டியதில்லை. ஆனாலும் இதற்கு எதிரான அல்லது தமிழருக்கு ஒரு தனியான அரசியல் சிந்தனையின் தேவையை நியாயப்படுத்தும் கருத்து எதுவும் நாடகத்தில் இடம் பெறவில்லை என்பது நாம் கவனத்திற் கொள்ள வேண்டிய அம்சமாகும்.

இவ்வாறு ஐம்பதுகளின் ஆரம்பத்தில் தமிழரின் அரசியல் அணுகு முறைகளை விமர்சித்து நின்ற பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் ஐம்பதுகளின் நடுக்கூற்றில், யாழ்ப்பாணத்தின் பண்டைய வேந்தருள் ஒருவனான சங்கிலியன் வரலாற்றை நாடகமாக எழுதினார். ஈழத் தமிழரின் இன உணர்வினைத் தூண்டிவிடத் தக்கவகையிலே இந்த நாடகம் அமைந்தது என்பது ஈண்டு சுட்டிக் காட்டத் தக்கது. சங்கிலி என்ற பெயரில் அமைந்த இந்த நாடகம் 1956ஆம் ஆண்டு நூல் வடிவம் பெற்றது. பேராசிரியரது இந்த நாடகம் வெளிவரும் முன்பே சங்கிலி மன்னனது வரலாறு 'சொக்கன்' (சொக்கலிங்கம்) அவர்களால் 1953இல் நாடகமாக எழுதப்பட்டுள்ளது. 22-2-1953 சுதந்திரன் இதழிலே 'தீர்ப்பு' என்ற தலைப்பில் இந்நாடகம் பிரசுரமாயிற்று. சங்கிலி மன்னனைத் தமிழ் இன உணர்வு கொண்ட ஒரு வீரத்தலை மகனாகவும் காக்கை வன்னியன், பரநிருபசிங்கன் ஆகியோர் அவனை அந்நியரிடம் காட்டிக் கொடுத்த துரோகிகளாகவும் இந்நாடகம் சித்திரிக்கிறது. பேராசிரியரின் 'சங்கிலி' நாடகத்திலும் இத்தகு பாத்திரப் பண்புச் சித்தரிப்பே அமைந்துள்ளது. சொக்கன் தமது நாடகத்தின் அறிமுகத்திலே,

'யாழ்ப்பாணத்தைத் தமிழ் மன்னன் ஆண்டகாலம். ரிஷபக்கொடி வான் உயர்ந்து பறந்த காலம் பண்பும் வளனும் பரந்துகிடந்த பொற்காலம். கூழங்கை ஆரியனிலிருந்து சங்கிலியன் வரை யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர் பலர். ஆண்ட நாடு சிறிதுதான். ஆயினும் அவர்கள் புகழோ வானிலும் பெரிது. பரநிருபனும் காக்கை வன்னியனும் வெட்டிய சதிக்கிடங்கு சங்கிலியனை மட்டுமல்ல நாட்டையே அடிமைக் கண்ணியில் வீழ்த்தியது...'

என்கிறார். நாடகத்திலே மரணதண்டனை பெற்ற சங்கிலியன் கூற்றாக,

'உங்கள் சந்ததியினர் (பரநிருபசிங்கன் காக்கை வன்னியன் சந்ததியினர்) பறங்கியருக்கும் ஏன்அயலவரான சிங்களவருக்கும் அடிமைகளாகும் காலம் அதிக தூரத்திலில்லை...'

என்ற வாசகம் அமைகிறது. சமகாலத்திலே தமிழரின் அரசியல் தலைமையில் ஒரு பகுதியினர் சிங்கள பேரினவாதிகளோடு ஒத்துழைக்க முயன்றமையைச் சாடும் எண்ணப் பாங்கு இதில் தொனிக்கக் காணலாம்.

சங்கிலி எனப்படும் செகராசசேகரன் (கி. பி. 1519—65) வரலாற்றாய்வாளரால் பொதுவாக துஷ்டனாகவும் அதேவேளை நாட்டுப்பற்றும், வீரமும் உடையவனாகவும் கணிக்கப்பெற்று வந்தவன். சொக்கனும் பேராசிரியரும் சமகால அரசியல் சூழ்நிலையிலே அந்தத் தலைவனுக்குத் துஷ்டத்தனத்தை நீக்கிப் புதிய [illegible]ரிமாணத்தைக் கொடுக்க முயன்றமை தெரிகிறது. அவனூடாகத் தமிழ்த் தேசிய உணர்வைக் கட்டியெழுப்ப முயன்றுள்ளமை புலனாகிறது. இவ்வாறு இவர்கள் வரலாற்றுப் பாத்திரமொன்றினூடாகக் கட்டியெழுப்ப முயன்ற தமிழ்த் தேசிய உணர்வோட்டத்தின் தொடர்ச்சியாகவே பின்னாளில் வன்னிப் பிரதேசத்தில் பண்டாரவன்னியன் கயிலை வன்னியன் ஆகியோர் கலை இலக்கிய அரங்கில் அறிமுகமாகின்றனர். அவர்கள் பற்றிய ஆக்கங்கள் பின்னர் நோக்கப்படும்.

மேற்சுட்டிய சங்கிலியன் தொடர்பான நாடகங்களின் பின் 1957 சுதந்திரன் இதழ்களில் பல நாடகங்கள் எழுதப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது. இவை யாவும் பொதுவாக சமகால அறப்போராட்டசூழலின் கதையம்சங் கொண்டனவாகும். நாவேந்தனின் 'அரசியல் ராஜினாமா' (21-1-57) 'கடைசி முத்தம்' (9-6-57), எஸ. சிவபாதம்எழுதிய 'நல்ல தீர்ப்பு' (23-3-57), கரிகாலனின் 'நிரபராதி' (31-3-'57), 'சிறைகள் நிறைந்தன' (12-5- 57), அன்பனின் 'தளபதி குமார்' (5-6-57) என்பனஅவை.

அறப் போராட்டத்தின் விளைவாக அன்றையபிரதமர் ராஜினாமாச் செய்வதாகவும் தமிழர்கள் பிரதேச சுயாட்சி பெறுவதாகவும் 'அரசியல் ராஜினாமா' நாடகம் கூறுகிறது. கடைசி முத்தம் நாவலில் அறப்போரில் சிலர் பலியான பின் தமிழரசு மலர்வதான கதையம்சம் உளது. புத்த பகவான் சிங்களவர்கட்குத் தமிழருடன் சமாதானமாக இருக்கப் போதிப்பதாக 'நல்ல தீர்ப்பு' அமைகிறது. நிரபராதி நாடகத்தில் தமிழரசுத் தந்தை செல்வ நாயகம் அன்றைய பிரதமர் பண்டாரநாயகாவால் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படுவதான கதையம்சம்உளது. ஈற்றில் செல்வநாயகத்தின் நிலைப்பாடு நியாயமானது எனத் தீர்ப்பு அமைகிறது.

'சிறைகள் நிறைந்தன' நாடகத்தில் பண்டாரநாயகா சமஷ்டியை ஏற்பதான முடிவு தரப்பட்டுள்ளது. அறப்போரில் மகனுக்கு முன் தந்தை தியாகியாவதான கதையம்சம் உளது.

இந்நாடகங்களிற் பெரும்பாலானவற்றிலே, அறப்போரால் தமிழரசு மலரும் என்ற நம்பிக்கை தொனிப்பதைக் காணலாம். சமகாலக் கவிதைகளிற் பொதுவாகக் காணப்பட்ட ஆழமற்ற-உணர்ச்சிகரமான-உளப்பாங்கின் மற்றொரு முகத்தை இந்த நம்பிக்கைகள் புலப்படுத்தி நிற்பதை உய்த்துணர முடிகிறது.

-வளரும்-

☐ மனித சுதந்திரம் மீறப்படும் ஒவ்வொரு முறையும், அதற்கு சொல்லப்படும் சமாதானம் நிலைமையின் நிர்ப்பந்தம் என்பது அது, கொடுங்கோலரின் வாதம்; அடிமைகளின் தத்துவம்.

வில்லியம் பிட்

# நினைவுகளில் நிற்கும் இழப்புக்கள்

நாம் பிறந்து விட்டோம். சுகமாகவோ- சோகமாகவோ பிறந்து விட்டோம்; விழி திறந்தது, இந்த உலகத்தை வினோதமாகப் பார்த்து விட்டோம்; பார்த்துக் கொண்டுமிருக்கின்றோம்.

வாழ்க்கை என்னும் நெடும் பயணத்தை ஆரம்பித்து விட்டோம்.

நாம் பிறந்தது, தாயின் மடியில் புரண்டது, நீலாம்பரி கேட்டு நித்திரை செய்தது எல்லாம் நினைத்துப் பார்க்கும் போது இனிப்பாக இருக்கின்றன.

வசந்தம் என்பதும் கோடை என்பதும் வருஷம் ஒவ்வொன்றிலும் முகம் காட்டிக் கொண்டேயிருக்கின்றன.

ஜனனமான பின்னர் தான் விழிகளில் வெளிச்சம் படர்கிறது.

ஆகாயத்தை அண்ணாந்து பார்க்கிறோம். சலசலத்தோடும் தண்ணீரை சந்தோசத்துடன் அளைகிறோம். எம்மைப் புரிந்தோ அல்லது புரியாமலோ எம்முடன் பரிச்சயம் கொள்ளும் மனிதர்களை மிக மகிழ்ச்சியுடன் நேசிக்கிறோம்.

மரங்களையும், பறவைகளையும், மிருகங்களையும் பார்த்து பாசம் வைக்கிறோம். எமது இதயத்தின் வாசல்களைத் திறந்து, நேசம் கொள்ளும் நினைப்புடன் வழி விடுகிறோம்.

எமக்குத் தெரியாமலே யே- எம்மால் உயர்திணை உயிர்களுடன் சேர்த்து அஃறிணைகளும் நேசிக்கப்படுகின்றன.

எமது பிரிய உணர்ச்சிக்கு, அன்பு என்றும், விருப்பம் என்றும் நேசம் என்றும் ஆடை கட்டி வைத்து அழகு பார்க்கிறோம்.

நாம் பிரியம் வைத்துள்ள ஜீவன்கள் என்றும் சுகமானவை தாம்.

பாஷைகளிலோ, வார்த்தைகளிலோ, இசை வடிவங்களிலோ இவற்றை முற்று முழுதாக படையல் செய்ய முடியுமா?

நாம் பிறந்தது சரித்திரமாக இருக்கலாம்; சிறு சம்பவமாக இருக்கலாம்; ஏன் ... விபத்தாகக் கூட இருக்கலாம்.

ஆனால்-

இவற்றைப் பற்றி ஆராய்ந்து, முடிவு செய்யப்பாவது நாம் வாழும் காலத்தில் தான்.

நாம் பிறந்தது எமக்கே தெரியாமல், ஏன் பிறந்தோம், என்ன சாதித்தோம் என்று எம்மை நாமே ஆராய்ந்து பார்க்கும் போது தான், எமது வாழ்க்கையின் வடிவம் எமக்குப் புரியத் தொடங்கும்.

மனிதனின் வாழ்க்கைக் காலத்தில் பலதை இழக்க நேரிடுகின்றது. பல ஜீவன்கள் எமது பார்வைகளிலிருந்து விலகி பறந்து போய் விடுகின்றன.

பிரிவும்! இழப்புக்களும் மிக.... மிக... சோகமானவை.




இழப்புக்களில் மிகப் பெரிய இழப்பு எம்மை, நாமே இழப்பது தான்.

பழகிய நண்பனிடம் எமது முகத்தைப் பார்க்கிறோம். இரவுகளிலும், பகல்களிலும் சல சலத்துக் கொண்டிருக்கும் மரங்களிடம் எமது மனனாச ரசிக்கின்றோம்.

நேற்றுப் "புன்னகை புரிந்த உதடுகள் இன்றில்லை; நேற்று என் கண்ணீரைத் துடைத்து விட்ட கைகள் இன்றில்லை.

வானம் சாசுவதமானது. அதனுடன் தொங்கிக் கொண்டிருக்கும் சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும் சாசுவதமானவையே.

இரவில் இல்லாத சூரியன் நாளை அதிகாலை காட்சி தருவான் என்கிற நம்பிக்கை எமக்குண்டு. அமாவாசை இரவில் காணாமல் போன நிலவு, மறு நாள் மௌன மொழி பேசி வானுக்கு வருகை தரும் என்பது எமக்குத் தெரிந்ததே. பகலில் ஒளிந்திருக்கும் நட்சத்திரகங்ள், இராப் பொழுதில் புன்னகைக்கும் என்பது நாம் அறிந்ததே.

ஆகவே-

இவற்றின் இழப்புக்கள் தற்காலிக இழப்புக்கள்.

ஆனால்-

என் வீட்டு முற்றத்தில், உயர்ந்து- மேகங்களை முத்தமிட்டுக் கொண்டிருந்த அந்தத் தென்னை மரம் இன்றில்லை. நான் விதைத்து, உரமிட்டு, வளர்த்த பயிர் இன்றில்லை

இந்த இழப்புக்கள் கொடியன. இந்த இழப்புக்களை ஞாபகிக்கும் போது மனசுக்குள் கண்ணீர் பிசு பிசுக்கும்.

என் விரல்களிலிருந்து விழுந்து, தொலைந்து போன பேனாக்கள் அதிகம்.

என் பார்வைகளிலிருந்து பறந்து போன பறவைகள் அதிகம்.

என்னுடன் பேசி, என்னுடன் சிரித்து, அழுது, உறங்கி, என்னிலிருந்து அந்நியப் பட்டுப் போன நண்பர்கள் ஏராளம்... ஏராளம்...

நான் ரசித்து, மகிழ்ந்த பூக்கள் இன்று என் அருகாமையில் இல்லை.

ஆம்; நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே, இழந்து கொண்டிருக்கின்றோம்.

இந்த சோகங்கள் தான் வாழ்க்கை என்று அர்த்தப்படும் என்றால், இழப்புக்களையே சுகமெனச் சொல்லிக் கொள்வோம்.

இன்னும்....

---

09 - 09 - 1989

நேற்றுப் பகல் பத்து மணியிலிருந்து ஆஸ்த்மாவின் வேதனையால் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்த எனக்கு இன்று பிற்பகல் ஐந்து மணிக்கு மாத்திரைகள் கொண்டுவந்து தந்தனர். நேற்றிலிருந்து நான் படும் வேதனையைப் பார்த்த நமது பையன்கள் இந்தக் K.K.S முகாமிலுள்ள ஆஸ்பத்திரிக்கு என்னைக் கொண்டுபோகுமாறு இங்கு வரும் போகும் அனைத்து அமைதிப்படையினரிடமும் வேண்டுகோள் விடுத்தனர். எல்லோரும் வந்து என் நிலைமையைப் பார்த்துவிட்டு என்னவியாதி? என்றெல்லாம் கேட்டுவிட்டுச் செல்வர். எனக்கு இருக்கும் வேதனையில் அனைவருக்கும் பதில் சொல்லியே களைத்து விட்டேன். ஒவ்வொருவரும் விசாரித்துவிட்டுச் செல்லும் போது விரைவில் மருந்து கொண்டுவந்து தருவார்கள் அல்லது ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்வார்கள் என்று பையன்கள் எனக்கு நம்பிக்கையூட்டினார்கள். இச்சிறைக்குள்ளே இருப்பவர்கள் மனித ஜென்மங்கள் என்ற விடயத்தை அமைதிப்படையினர் நினைப்பதில்லை. எப்படியோ இன்று கிடைத்த மாத்திரைகளை உட்கொள்வதற்காக கடதாசியைப் பிரித்தேன். உள்ளே இருந்தது மலேரியா நோய்க்கான மாத்திரை. இந்த முகாமில் வியாதிக்கேற்ற மருந்து கிடைக்காது. இவர்கள் தரும் மருந்துக்கேற்ற மாதிரித்தான் எங்களுக்கு வியாதி வரவேண்டும்.

'இவர்கள் என்ன மனித ஜென்மங்கள்? டொக்டரிடம் நோயாளியைக் கொண்டு சென்று இவருக்கு என்ன வியாதி என்று பரிசோதித்து விட்டு அவர் சொல்லும் மாத்திரையைக் கொடுக்காமல் ஏதோ அகப்பட்டதை எடுத்துக் கொடுக்கிறார்களே?' என்று ஒருவன் சினந்தபடியே கூறினான். அப்போது வேறொருவன் இங்கு இருக்கும் டொக்டர்கள் மட்டும் என்ன இவர்களிலிருந்து வேறுபட்டவர்களா? அவர்களும் இராணுவத்தில் ஒருபகுதி தானே? குருநகரைச் சேர்ந்த சுரேஷ் என்றபையன் துப்பாக்கிச்சூட்டுக் காயத்துடன் பிடிபட்டு பலாலியிலுள்ள I.P.K.F ஆஸ்பத்திரியில் கிடந்தான். அவனுக்குக் குளுக்கோஸ் ஏறிக் கொண்டிருந்தது. அதேசமயம் அவனது காயத்துக்குள்ளே கம்பியை ஒட்டி ஆயுதம் எங்கே? என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஒரு டொக்டரின் கண்ணெதிரில் சித்திரவதை நடந்து கொண்டிருந்தது. ஆயுதம் எங்கே? என்ற விஷயத்தை அறியும் வரை இவனை எப்படியும் உயிரோடு வைத்திருக்க வேண்டும் என்று தான் வைத்தியரும் முயற்சி செய்தாரே ஒழிய வைத்தியசாலைக்குள் சித்திரவதை செய்வதை அனுமதிப்பது வைத்தியதர்மமாகாது என்று நினைக்கவில்லை. ஏதோ நடப்பதைப் பார்க்க வேண்டியதுதான். பட்டமரத்தில் பாலை எதிர்பார்ப்பது நமது அறியாத்தனம்! என்றான். அப்போது பாலா என்பவன் 'நான் ஒருநாள் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். டொக்டர் வரவில்லை. அவர் வரவுக்காகக் காத்திருந்தேன். ஆஸ்பத்திரிவாசலில் கடமையில் இருந்த ஒரு தமிழ்ச் சிப்பாய்க்கு தேநீர் வந்தது. ஒரு தடவை குடித்தபின் என்னைக் கூப்பிட்டான். அவனுக்குக் கிட்டப் போனேன். கையிலிருந்த தேநீரை எனது முகத்தில் வீசினான். ரீயின் சுவை நன்றாக இல்லை என்றாலும் அதற்காக எங்கள்மீது ஏன் தங்கள் ஆத்திரத்தைக் காட்டுகிறார்கள்? கொதித்துக் கொண்டிருந்த தேநீர் முகத்தில் ஊற்றப்பட்டதால் நான் பட்ட வேதனை! நோயின் வேதனையைத் தீர்க்க ஆஸ்பத்திரிக்குச் சென்ற நான் மேலதிக வேதனையுடன் திரும்பினேன். ஒரு இந்திய இராணுவம் இப்படித்தான் நடக்குமென்று தெரியும். ஆனால் இப்படிச் செய்தவன் ஒரு தமிழன் என்பதை நினைக்கும்போதுதான் மனவேதனை ஏற்படுகிறது!' என்றான்.

'இப்படிச் செய்தவன் தமிழன் என்பதற்காக வேதனைப் படலாம். ஆனால் இதெல்லாம் இங்கு புதிதல்ல. வேறொரு முகாமில் நடந்த ஒரு விஷயம் இதைவிட மோசமானது. பிடிபட்ட ஒரு பையனுக்கு பிளேட்டால் உடம்பெல்லாம் கீறிச் சித்திரவதை செய்திருந்தார்கள். எந்த வைத்தியமும் செய்யவில்லை. சிதலும் ரத்தமும் அவனது உடையுடன் ஒட்டிக்கொண்டிருந்தன; அவனது உடம்பிலிருந்து சேட்டைக்கழற்ற ஒருநாள் எடுத்தது. உடம்பிலிருந்து சிதலின் துர்நாற்றம் வீசியது. அப்போது கைதியாக இருந்த ஒருவர் வாசலில் கடமையில் இருந்த சிப்பாயிடம் சென்று அவனுக்கு வைத்தியம் செய்யுமாறு வேண்டினார். அந்தச் சிப்பாயோ குடித்துக் கொண்டிருந்த ரீயை அந்த நோயாளியின்மீதுஊற்றி விட்டுச் சென்றான். அப்படியெல்லாம் நடந்திருக்கும் போது; உனக்கு நடந்தது சாதாரண சம்பவம் என்று தான் சொல்லவேண்டும்!' என்றான் இன்னொருவன்.

'எங்கள் வேதனை இவர்களுக்குச் சுவாரஸ்யமாயிருக்கும். மூக்குக்குள் சவ்வு வளர்ந்ததால் மூச்சுவிடவே சிரமப்பட்டுக் கொண்டிருந்தார் ராஜன் என்பவர். அவருக்கு வைத்தியம் செய்வதற்கு தங்களிடம் வசதியில்லை என்றார்கள். யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் இதற்கான சத்திர சிகிச்சை செய்யலாம் என்று சொன்னபோது பாதுகாப்புக் காரணங்களுக்காக யாழ்ப்பாணம் கொண்டு செல்லமுடியாது என்றார்கள். எங்களுடைய பாதுகாப்புக்காக தாங்கள் வந்ததாக வானொலியில் உரத்துக்கூறும் இவர்கள் தங்கள் பாதுகாப்புக்காக ஒருநோயாளிக்கு உரிய சிகிச்சையைச் செய்யாமலிருக்கிறார்கள். அது மட்டுமல்ல இவரால் மூக்கால் சுவாசிக்க முடியவில்லை என்று கப்டன் ஷப்றாவிடம் சொன்னபோது 'மூக்கால் சுவாசிக்கமுடியாவிட்டால் வாயால் சுவாசிப்பதுதானே' என்று வைத்திய ஆலோசனை சொன்னான் கப்டன் ஷப்றா என்றான் இன்னொருவன்.

இராணுவத்தில் சேர்ந்ததால் மனிதநேயமே அற்றுப் போன இவர்கள் தங்கள் குடும்ப வாழ்க்கையில் எப்படித்தான் நடந்துகொள்ளப் போகிறார்களோ? இந்திரா காந்தி கொல்லப்பட்ட சமயத்தில் ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டபோது 'ஆலமரம் வீழ்ந்தால் அதிர்வுகள் ஏற்படத்தான் செய்யும்' என்று தனது சொந்த நாட்டு மக்களின் அகால மரணங்களைப் பற்றி அலட்சியமாகக் கூறிய ராஜீவ் காந்தியால் வழிநடத்தப்படும் படைகளால் இன்னொரு நாட்டில்இப்படித்தான்நடந்து கொள்ளமுடியும். □




---

வதில் தீவிரம் காட்டினர்.

விட்மனிடம் தன்னம்பிக்கை மனிதநேயம், நிறைவு என்

மாந்தோப்பு- வசந்தத்தின்

ஜீவன்கள் என்றும் சுகமா னவை தாம்.

பாஷைகளிலோ, வார்த்தைகளிலோ, இசை வடிவங்களிலோ இவற்றை முற்று முழுதாக படையல் செய்ய முடியுமா?

நாம் பிறந்தது சரித்திரமாக இருக்கலாம்; சிறு சம்பவமாக இருக்கலாம்; ஏன் ... விபத்தாகக் கூட இருக்கலாம்.

ஆனால்–

இவற்றைப் பற்றி ஆராய்ந்து, முடிவு செய்யப் பாவது நாம் வாழும் காலத்

நேற்றுப் "புன்னகை புரிந்த உதடுகள் இன்றில்லை; நேற்று என் கண்ணீரைத் துடைத்து விட்ட கைகள் இன்றில்லை.

வானம் சாசுவதமானது. அதனுடன் தொங்கிக் கொண்டிருக்கும் சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும் சாசுவதமானவையே.

இரவில் இல்லாத சூரியன் நாளை அதிகாலை காட்சி தருவான் என்கிற நம்பிக்கை எமக்குண்டு. அமாவாசை இரவில் காணாமல் போன நிலவு,

என்னிலிருந்து அந்நியப் பட்டுப் போன நண்பர்கள் ஏராளம்... ஏராளம்...

நான் ரசித்து, மகிழ்ந்த பூக்கள் இன்று என் அருகாமையில் இல்லை.


ஆம்; நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே, இழந்து கொண்டிருக்கின்றோம்.

இந்த சோகங்கள் தான் வாழ்க்கை என்று அர்த்தப் படும் என்றால், இழப்புக்களையே சுகமெனச் சொல்லிக் கொள்வோம்.

இன்னும்....

கூறினான். அப்போது வேறொருவன் இங்கு இருக்கும் டொக்டர்கள் மட்டும் என்ன இவர்களிலிருந்து வேறுபட்டவர்களா? அவர்களும் இராணுவத்தில் ஒருபகுதி தானே? குருநகரைச் சேர்ந்த சுரேஷ் என்றபையன் துப்பாக்கிச்சூட்டுக் காயத்துடன் பிடிபட்டு பளையிலுள்ள I.P.K.F ஆஸ்பத்திரியில் கிடந்தான். அவனுக்குக் குளுக்கோஸ் ஏறிக் கொண்டிருந்தது. அதேசமயம் அவனது காயத்துக்குள்ளே கம்பியை ஒட்டி ஆயுதம் எங்கே? என்று கேட்டுக்கொண்டிருந்

சிதலும் ரத்தமும் அவனது உடையுடன் ஒட்டிக்கொண்டிருந்தன; அவனது உடம்பிலிருந்து சேட்டைக்கழற்ற ஒருநாள் எடுத்தது. உடம்பிலிருந்து சிதலின் துர்நாற்றம் வீசியது. அப்போது கைதியாக இருந்த ஒருவர் வாசலில் கடமையில் இருந்த சிப்பாயிடம் சென்று அவனுக்கு வைத்தியம் செய்யுமாறு வேண்டினார். அந்தச் சிப்பாயோ குடித்துக் கொண்டிருந்த ரீயை அந்த நோயாளியின்மீது ஊற்றி விட்டுச் சென்றான்.. அப்படி



உரத்துக்கூறும் இவர்கள் தங்கள் பாதுகாப்புக்காக ஒருநோயாளிக்கு உரிய சிகிச்சையைச் செய்யாமலிருக்கிறார்கள். அது மட்டுமல்ல இவரால் மூக்கால் சுவா

அலட்சியமாகக் கூறிய ராஜீவ் காந்தியால் வழிநடத்தப்படும் படைகளால் இன்னொரு நாட்டில்இப்படித்தான் நடந்து கொள்ளமுடியும். □

# வால்ட் விட்மனும் நா. பிச்சமூர்த்தியும்

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் கவிதைத்துறையில் இருபெரும் புரட்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்புரட்சியாளர்களில் ஒருவர் பாரதி: மற்றவர் நா. பிச்சமூர்த்தி ஆகும்.

மரபைமீறிய புதுக்கவிதைத் துறைக்கு பிள்ளையார் சுழி போட்டவர் பாரதியே. எனினும். அதை முழுமையாக நடைமுறைப் படுத்தியவர் பிச்சமூர்த்தி என்பதில் ஐயமில்லை.

புதுக்கவிதை பற்றி ஆராய்கையில் புதுக்கவிதையின் முதல்வராக நா. பிச்சமூர்த்தியே தோற்றமளிக்கிறார். பிச்சமூர்த்தியைப் பற்றி பேசும் போது அவர் தமிழில் மரபை மீறி கவிதை எழுத காரணமான ஆங்கிலக் கவிஞன் வால்ட்விட்மன் (Walt Whitman) பற்றி குறிப்பிட வேண்டியது அவசியமானதாகும்.

> *மரபைமீறிய புதுக்கவிதைத்துறைக்கு பிள்ளையார் சுழி போட்டவர் பாரதியே. எனினும் அதை முழுமையாக நடைமுறைப் படுத்தியவர் பிச்சமூர்த்திஅவர்களே!*

### வால்ட் விட்மன்

ஆங்கிலத்தில் மரபு மீறிய புதுக்கவிதைத் தோன்ற காரணமானவர் அமெரிக்கக்கவிஞனானவால்ட்விட்மன் ஆகும் அக்காலத்தில் ஆங்கில மரபுக்கவிஞர்கள் பலரின் தீவிரமான எதிர்ப்புகளுக்கு மத்தியில் இவர் புதுக்கவிதை எழுதத் தொடங்கிறார். இவ்வாறு இவர் எழுதிய 'புல்லின் இதழ்கள்' (Leaves of Grass) எனும் கவிதை உலகப்புகழ் பெற்றது இதைத்தொடர்தே பல ஆங்கிலக்கவிஞர்கள் மரபு மீறி கவிதை எழுதத் தொடங்கினர் எனலாம்.

விட்மனைத் தொடர்ந்து எஸ்ரா பவுண்ட், டி. எஸ்.எலியட் போன்றோர் ஆங்கிலத்தில் மரபை மீறி கவிபுனைவதில் தீவிரம் காட்டினர். அத்துடன் புதுக்கவிதைத் துறையை ஒரு இயக்கமாகவே கொண்டு நடத்தினர்.

### புதுக்கவிதை இயக்கம்

அமெரிக்காவை விட்டு இங்கிலாந்தில் குடியேறிய கவிஞர் எஸ்ரா பவுண்டும், மற்றுமிருவரும் சேர்ந்து 1912 ஆம் ஆண்டு மரபான ஆங்கிலக் கவிதை மீறலில் மூன்று கொள்கைகளை வகுத்து செயல்பட ஆரம்பித்தனர். அக்கொள்கைகளாவன.

1. எழுதும் பொருளை நேரடியாக அணுகுதல். (Direct Treatment of the thing.)
2. கவிதை வெளியீட்டுக்கு உதவாத முறையில் எந்தவொரு சிறு சொல்லையும் சேர்க்காமை. (To use Obsosutely No Word That Doe Not Contribute To The Presentation)
3. சொற்றொடர்களின் இசைத்தொடர்ச்சி. (The Sequence of the Musical Phrase)

இக்குழுவினர் பின்னர் 'படிமவியலாளர்' (Imagists) என்னும் அழைக்கப்பட்டனர். இந்த எஸ்ராபவுண்டை குருவாகக் கொண்டு டி. எஸ். எலியட் எழுதிய கவிதைக்கு நோபல் பரிசு கிடைத்தது. யுத்தத்தினால் சேதமுற்ற ஐரோப்பாவை பாழ்நிலமாக வர்ணித்து இவர் எழுதிய Waste Land, என்ற கவிதைக்கே இப்பரிசு கிடைத்தது.

இப் படிப்படியான முயற்சிகளுக்கும் வெற்றிகளுக்கும் வித்திட்டபெருமை வால்ட் விட்மனையே சேரும்.

வால்ட் விட்மனின் கவிதைகள் அவர் இவ்வுலகுக்கு அருளிய உயிரோவியங்கள்என கவிதாகூர் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தன்னைப்பற்றி வால்ட் விட்மனே தனது கவிதை வரிகளில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

*எனக்கே நான் விழா எடுக்கிறேன்*
*என்னையே நான் பாடுகிறேன்*
*நான் எதை ஏற்கிறேனோ*
*நீங்களும் அதையே ஏற்கவேண்டும்.*
*ஏனெனில்*
*எனக்குச் சொந்தமான*
*ஒவ்வோர் அணுவும்*
*உங்களுக்குச் சொந்தமானதே!*
*சோம்பி நான்*
*என் ஆத்மாவை அழைக்கிறேன்.*
*என் அமைதியில்*
*நான் சாய்ந்து*
*இளவேனிற் புல்லின்*
*இதழ் ஈட்டியைப் பார்த்தபடி–*
*என் நாவும்*
*என் குருதியின் ஒவ்வோர் அணுவும்.*
*இந்த மண்ணால்*
*இந்தக்காற்றால் இயன்றவை.*
*இங்கே பிறந்த பெற்றோர்கட்குப்*
*பிறந்த பெற்றோர்களின் வழிவந்த*
*பெற்றோர்கட்குப் பிறந்தவன்நான்*
*முப்பத்தேழாண்டகவை முடித்தநான்*
*என் பூரண உடல் நலனோடு*
*தொடங்கிய தொடக்கம்*
*துஞ்சும் வரையும் எஞ்சலில்லாததென*
*நம்புகிறேன்.*
*உள்ள அளவே போதுமென்றே*
*கொள்கைகளை பள்ளிகளை*
*ஒதுக்கிப் புறந்தள்ளி;*
*ஆனால் அவைகளை மறுத்தலின்றி*
*சிறிது நேரம் - ஓய்வுடனும்*
*ஆதார வலுவோடும்*
*நான் நன்மைக்கோ*
*அன்றி தீமைக்கோ*
*உழைக்கிறேன்.*
*ஒவ்வோர் இடரின்போதும்*
*பேச அனுமதிக்கிறேன்.*

> *வால்ட் விட்மனின் கவிதைகள் அவர் இவ்வுலகுக்கு அருளிய உயிரோவியங்கள் என கவிதாகூர் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்.*

விட்மனிடம் தன்னம்பிக்கை மனிதநேயம், நிறைவு என்பவற்றோடு உலகளாவிய பார்வையும் காணப்படுவதை அவரின் கவிதைகள் உணர்த்துகின்றன.

### நா- பிச்சமூர்த்தியும் மரபுமீறிய தமிழ் கவிதையும்.

15- 08- 1900 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் பிறந்த பிச்சமூர்த்தி தனது கல்லூரிப் படிப்புக்காலத்தில் ஆங்கிலத்திலேயே எழுதிவந்தார். 1925 ஆம் ஆண்டில் பாரதியின் எழுத்துக்களில் இவருக்கு பரிச்சயம் ஏற்பட்டது. அதன்பின் தமிழில் எழுதத்தொடங்கினார்.

1934 ஆம் ஆண்டு முதல் 1944 வரை தனது புதுக் கவிதைகளை 'மணிக்கொடி' 'கலாமோகினி' 'கிராம ஊழியன்' ஆகிய இதழ்களில் அதிகமாக எழுதினார்.

புதுக்கவிதை என்றால் பிச்சமூர்த்தி என்று பேசும் அளவுக்கு அக்காலத்தில் அவர் சாதனைபடைத்தார். பிச்சமூர்த்தி எழுதிய 'காட்டுவாத்து' என்னும் கவிதை நூலில் வால்ட் விட்மனைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

''என் கவிதை முயற்சிக்கு யாப்பு மரபே காணாத வால்ட்விட்மனின் 'புல்லின் இதழ்கள்' கவிதைநூலே வித்திட்டது. அதைப்படித்த போது கவிதையின் ஊற்றுக்கண் எனக்குத் தெரிந்தது. தொடர்ந்து பாரதியின் வசன கவிதையைப்படித்த போது என்கருத்து வலுப் பெற்றது. 1934 இல் சோதனை ரீதியில் கவிதைகளை எழுதத்தொடங்கினேன்...''

1934 இல் எழுதப்பட்ட பிச்சமூர்த்தியின் காதல் கவிதையொன்றைப்பார்ப்போம்.

*மாந்தோப்பு-*
*வசந்தத்தின்*
*பட்டாடை உடுத்திருக்கிறது.*
*மலர்கள்*
*வாசம் கமழ்கிறது*
*மரத்திலிருந்து ஆண்குயில் கத்துகிறது*
*என்ன மதுரம்! என்ன துயரம்!*
*ஆண்குயில் சொல்லுகிறது*
*காதற்கனல் பெருக்கெடுத்து விட்டது*
*கரைகள் உடைந்து போயின*
*நெஞ்சத்தின் வேர்கள் கருகுகின்றன*
*குயிலி......*
*காதல் நீரைவார்த்து*
*தீயை அணைப்பாய்*
*கருகிய வேர்களுக்கு*
*உயிரை ஊட்டுவாய்!*

நா. பிச்சமூர்த்தி கல்லூரி நாட்களிலேயே விட்மனைப் பற்றி படித்து வைத்திருந்தமையால் விட்மனின் எழுத்துக்கள் காலப்போக்கில் அவரின் ஆழ்மனதில் ஓர் பதிவையும் அதனால் பாதிப்பையும் ஏற்படுத்திவிட்டன எனலாம்.

புதுக்கவிதையின் தோற்றத்திற்கு உரிமைகோரி அண்மையில் பல கவிஞர்கள் மோதிக்கொண்டனர். மு. மேத்தா, அப்துல் ரகுமான், வைரமுத்து ஆகிய கவிஞர்களுடன் கலைஞர் மு. கருணாநிதியும் உரிமை கோரினார்.

புதுக்கவிதையின் பரிணாமத்திற்கும் பரிணாமத்தினால் ஏற்பட்ட புதிய பரிமாணத்திற்கும் மேற்படி கவிஞர்களில் ஒருவரோ அல்லது அனைவருமோ காரணமாகவிருக்கலாம். ஆனால் புதுக் கவிதையின் தோற்றத்திற்கு நா. பிச்சமூர்த்தியே உரிமை கோரும் தகுதியுள்ளவர் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

**விவேக்**

### படைப்பு இலக்கியம்

*இலக்கியத்திற்கு வாழ்க்கைதான் அடிப்படையாக இருக்கிறது. பயணங்கள் வாழ்வின் தளத்திலிருந்துதான் மேற்கொள்ளப்படுகின்றன. கலைஞனின் ஆற்றலுக்கு ஏற்ப, உள்ளுணர்வுகளுக்கும் புற உலக அறிவுக்கும் ஏற்ப யாத்திரை விரிவடைகிறது சுய அனுபவத்திலிருந்து, சுய அனுபவத்தின் தெளிவற்ற கோலத்திலிருந்து, முன்னுக்குப் பின் முரணான கோலத்திலிருந்து, முழுமையற்ற கோலத்திலிருந்து உண்மைகளைத் தேடித் தொகுத்து வாழ்க்கை பற்றிய தன் பார்வையை முன் வைத்துச் செல்லும் யாத்திரை இது. இவ்வாறான தொகுப்பில் கற்பனையின் தீண்டல் தவிர்க்க முடியாதது. 'இவ்வாறு நிகழவில்லை' என்பதில்தான் படைப்பு, கற்பனையே தவிர, 'நிகழ்ந்ததில்' நான் கண்டது இதுதான்.*

மு. தளையசிங்கம்

# வெள்ளிவிழாக் காணும் கவிஞர்

## பா. சத்தியசீலன்


"மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நான் ஒருசிரேஷ்ட ஆசிரியர். சில பொறுப்புக் களை வகித்து வருகிறேன். தமது சிரேஷ்ட ஆசிரியர் ஒருவரை ஆசிரிய மன்றம் கெளரவிக்கும் பொழுது, அப்படிக் கெளரவிக்கும் ஆசிரிய மன்றுக்கே சமுதாயத்தின் கெளரவம் கிடைக்கலாம் அல்லவா? குறிப்பாகச் சொன்னால் என்னிடம் படித்த பழைய மாணவர் இருவர் எங்கள் ஆசிரியர் குழுவில் உள்ளனர். அவர்கள் எனது எழுத்துப் பணியைச் சிறப்பிகக முயன்றதன் விளைவே இந்த 'வெள்ளி விழா எழுத்து' விழா." இவ்வாறு வெள்ளி விழா காணும் எழுத்தாளர் கவிஞர் பா. சத்தியசீலன் அவர்களிடம்-


'மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் சங்கம் உங்கள் எழுத்தாற்றலையும், புத்தக வெளியீட்டு உழைப்பையும், புத்தக நேர்த்தி வண்ணத்தையும் கொண்டாடவே 'வெள்ளி விழாஎழுத்து' விழா என்றொரு புதுமையான விழாவுக்கு ஏற்பாடு செய்துள்ளதாகக் கருதுகிறோம். இது பற்றித் தங்கள் கருத்தை அறியலாமா?'' என்று கேட்டபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த விழா எத்தகைய மனநிலையைத் தங்களுக்கு உண்டாக்குகிறது என்பதை அறியலாமா?

என அவரிடம் கேட்டபோது ''உண்மையில் எனக்கு இந்த விழா மன நிறைவைத் தருகின்றது என்றே கூற வேண்டும். வழி நடந்து களைத்தவனை அழைத்துக் குளிர்பானம் கொடுப்பதைப் போல மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரிய குழுமம் என்னை அழைத்து இந்த விழாவை எடுக்கிறது. இப்பொழுது எனக்குள்ளே ஒரு மாற்றத்தை உணர்கிறேன். ஓடி ஓடி உழைத்தவன் நான் ஓடும் வியர்வை உலர முன்பேஎனது 'பாடு' பரிசு பெறவேண்டும் என்பதை இப்பொழுது விரும்புகிறேன். எனது எழுத்துக்கு வெள்ளிவிழா. எனது பிறப்புச் சான்றிதழுக்குப் பொன்விழா எனவே என்னைப் பொறுத்த வரை இவ்விழா சரியானதோர் சந்தர்ப்பத்திலே தான் எடுக்கப்படுகிறது என்று கூற வேண்டும்'' என்றார்.

மேலும் அவரிடம் எமது எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களை வெகு சிரமப்பட்டே வெளியிட வேண்டியிருக்கிறதுவெளியீட்டுவிழாவோ மிக மிகச் சிலருக்கே வாய்க்கிறது. அல்லைப்பிட்டியில் நாதனும் எனது உடனாசிரியரும் எனது 'தமிழ்' மாணவருமான திரு நடராசசுந்தரமும் எனது சிறுவர் இலக்கிய நூல்களின் முதல் பிரதிகளைப் பெற்றுக் கொள்கிறார்கள். கல்லூரி அதிபர் ஆசியுரை வழங்குகிறார். ஆசிரியர் குழுமமே விழாவை நடத்துகிறது. ஆக, இது மானிப்பாய் இந்துக்கல்லூரி எடுக்கும் மகிழ்விழா. மேலும் இவ்விழாவில் தொழிலதிபர் த. சண்முகலிங்கம் ''பன்றியாரை வென்று விட்ட பாட்





பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 1969-கவிஞருக்குப் பாவலன் என்ற பட்டத்தைப் பெற்றுத்தந்த 'பா' நூல் வெளியீட்டு விழாவில் முதல் பிரதி பெறவந்த பிரமுகரை றோயல் கல்லூரி மாணவர்கள் சகிதம் கவிஞர் சத்தியசீலனோடு வரவேற்று விழா மலரைத் தருகிறார் கவிஞர் சிவானந்தன் (கல்வி அதிகாரி)

### வானொலிப் பேட்டியில்

உங்கள் 'அருளப்பர்அம்மானை விழா மிகச்சிறப்பாக நடந்ததையும், அன்பர் ஒருவர் ஆர்வம் மேலீட்டால் ஆயிரம் ரூபா தங்களுக்குப் பரிசளித்ததையும் நேரிலே பார்த்தோம். ஒரு வெளியீட்டுவிழா இல்லையானால் சமுதாயம் எழுத்தாளனுக்கு வெகுமதி அளிக்கும் சந்தர்ப்பமே இல்லாமல் போகிறது என்று சொல்ல வேண்டும். புதுமையான முறையில் அமையும் உங்கள் மானிப்பாய் விழா எவ்வகையாக அமைகிறது என்று கூறுவீர்களா? என வினாவிய போது-

''எனது பழைய மாணவர் முன்னின்று நடத்தும் இவ் விழாவில் அம்மானை நூலின் முதற்பிரதியை வாங்குபவரும் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவருமான திரு. பொன்னுச்சாமி பாஸ்கரன் அவர்களே. அன்றியும், மேலதிக உபஅதிபர் திரு. பத்ம

டியம்மா'' என்ற சிறுவர் கதைப்பாடல் தொகுதியின் முதல் பிரதியைப் பெறுகிறார். அவர் எனது எழுத்தாக்கத்திற்குத் தொடர்ந்து கைதரும் 'சடையப்ப வள்ளல்களில்' ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.' என்றார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் 'வெள்ளிவிழா எழுத்து' விழாவினை வைப்பதால் மாணவருக்கு எவ்விதமான

களுக்கு உற்சாகமூட்டவும், உணர்வு எழுச்சி ஊட்டவுமே. தமிழறிஞர் சொக்கனின் இலக்கியச் சொற்பொழிவும் இத்தகைய நோக்கம் கொண்டதே. அன்றியும், 'இந்தின் இளம்பிறை' என்ற எமது மாணவ நாடக மன்றம் பரீட்சார்த்தமாக இரு நாடகத் துணுக்குகளை அரங்கேற்றுகிறது. மேலும், சிறுவருக்காக நான் எழுதிய பதினேழு சிறுவர் சின்னூல் பிரதிகளும் பா, அம்மானை ஆகிய இரு இலக்கிய நூல்களும் காட்சிப் பாங்கான முறையில் பெருப்பிக்கப்பட்ட எனது பத்திரிகைப் பாடல் நறுக்குகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும். சிறப்பாக மஹாகவி இளம் எழுத்தாளராக இருந்த எனக்கு எழுதிய நீண்ட கவிதைக் கடிதங்கள் ஐந்தும் காட்சிக்கு வைக்கப்பட இருக்கின்றன, இது பொதுவாக மாணவர்களுக்கும், குறிப்பாக உயர்தர மாணவருக்கும் உபயோகமான விஷயம் என்பது எனது கருத்து என்று குறிப்பிட்ட கவிஞர் வெள்ளிவிழா அவரது படைப்புகள் சம்பந்தமான ஆய்வுகள் பற்றி கேட்டபோது-

'அல்லைப்பிட்டியில் சென்ற மாதம் வெளியீடு பெற்ற 'அம்மானை' சிறப்பாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.' பன்றியாரை வென்று விட்ட பாட்டியம்மா' என்ற சிறுவர் நூல் எனது சிறுவர் சின்னூல்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. வளர்ந்த சிறுவருக்கு உரியது என்பது ஒன்று. சீமைக்கதைகளை செந்தமிழ்ச் சிறுவருக்காக மொழி பெயர்த்து எனது பாணியில் ஓசைச் சிறப்புடன் தந்திருப்பது இன்னொரு சிறப்பம்சம். இந்நூலை கல்வி நோக்கில்

### நவாலியூர் நடேசன்

நன்மை கிடைக்கும் என்று கருதுகிறீர்கள்? எனக்கேட்ட போது-

''எனது ஆக்கப்பாட்டுக்கு உதவியோரில் ஒருவரான மூதறிஞர், முதுகவிஞர் முருகையன் விழாவில் கலந்து கொள்கிறார். அவர் போன்ற வித்தகர்கள் கல்வி, கலையின் நிறைவுகளை நான் விழாவுக்கு அழைப்பது எனது மாணவர்

ஆய்கிறார் கவிஞர் சோ. பத்மநாதன். அதனைவிட, சத்தியசீலன் தமிழ்' என்ற பொதுத்தலைப்பில் 'நாடகப் பாடு, பற்றிச் சிறப்பாய்வு செய்கிறார். கவிதை நாடகத்தில் துறைபோனவரும். எனக்குப்'பா நாடகத்தைப் படிப்பித்த ஆசிரியருமான திரு. முருகையன் என நன்றியுடன் கூறினார் கவிஞர்.



கவிதை

# சிறகரியமுன் வந்தால்......

நாங்கள் ஏன் இன்னும்
நடுத்தெருவில் நிற்கின்றோம்?
ஏங்கி எதற்கும் கலங்கி
மனங் குழம்பி
தேம்பி அழாக் குறையாய்
திக்கித் திணறிப் போய்
நாங்கள் ஏன் இன்னும்
நடுத்தெருவில் நிற்கின்றோம்
தூங்கல் தனமும்
துடிதுடிப்பைக் கண்டு விட்டால்
ஓங்கி அறைந்து
பிறகும் இறகிடுங்கி
கூண்டில் அடைத்து விடும்
கொள்கை நிலையுடையோம்
ஆற்றலைக் கண்டால்
அனுமதிக்க மாட்டாத
கூற்றுவராய் நிற்கும்
குறுகல் மனப்பான்மை
சீற்றம், சிடுசிடுப்பு,செல்வாக்(கு)
இவற்றாலே
ஏற்றத்துக்கான பல
ஏணி முறித்தெறியும்
ஆற்றலால் அன்றோ
அவதிப்படுகின்றோம்
காற்றையும் கூடவே
கட்டுப்படுத்தி விடப் பார்க்கும்
முனைப்பு பலன்தர மாட்டாத
சீற்றம் சுதந்திரத்தைச்
சிறகரிய முன் வந்தால்......
காற்றே நெருப்பாய்
கனலாய் வடிவெடுக்கும்!

-நந்தா

☐ யாழ்ப்பாணம் கச்சேரியும் தமிழ் மொழி அமுலாக்கமும்.

☐ திருநெல்வேலி பாலர் பாடசாலையில் அடிதடி.

☐ ரசிய காட்டூன் படம்

''நேற்றைக்கு கச்சேரியில

''தின்னைவேலியில ஒருசிறுவர் பாடசாலை இருக்குது தெரியுமே''

''ஓமடாப்பா என்ன விசியம்'.' ''எனக்குத் தெரிஞ்ச ஆட்களின்டை பிள்ளை ஒண்டு அங்கை படிக்கப் போறது.''

''உதில என்ன புதினம்'' என்று தாடி மாமா கேட்டான்.

''தாடிமாமா எதுக்கும் அவசரப் படாத'' என்றான் சவுந்திரம்.

நிலையிலஇருக்கினமெண்டு விளங்கேல்லை.

☐ ☐ ☐

''போன கிழமை ரூபவாகினியில ஒரு காட்டூன் படம பார்த்தன். ரசிய காட்டூன் படம்.''

''என்ன புதினம்''

''அதில ஒரு எலி. அது எல்லாத்துக்கும் பயப்பிடுது. சருகு



கற்பதனால் இறைவனைக் காண முற்பட வேண்டும் என்கின்றார் வள்ளுவர். ஆனால் பக்தியே கடவுளை அடையும் மார்க்கம் என மகுடி வற்புறுத்தியுள்ளார் பக்தி இல்லாதவனால் கடவுளை அடைய முடியுமா என ஒருவர் வினாவினார். கணித அறிவில்லாதவனுக்கு கணிதத்தின் மறுமொழி புலப்படுமோ

அனுபவித்தீரா, என்றகேள்விக்கு வீடு இருந்தால் தானே எனப் பதிலளித்தார்- வீடு என்பதற்குச் சொர்க்கலோகப் பொருள் உண்டு. மகுடி காணும் வீடு இவ்வுலக நிஜ வீடாகும். மண்ணைச் சிந்தியாது விண்ணைச் சிந்தியாதே என்பது இதன் அகப்பொருள்; பெண்களை இழிவுபடுத்தும்



பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 1969-கவிஞருக்குப் பாவலன் என்ற பட்டத்தைப் பெற்றுத்தந்த 'பா' நூல் வெளியீட்டு விழாவில் முதல் பிரதி பெறவந்த பிரமுகரை றோயல் கல்லூரி மாணவர்கள் சகிதம் கவிஞர் சத்தியசீலனோடு வரவேற்று விழா மலரைத் தருகிறார் கவிஞர் சிவானந்தன் (கல்வி அதிகாரி)

முன்னின்று நடத்தும் இவ் விழாவில் அம்மானை நூலின் முதற்பிரதியை வாங்குபவரும் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவருமான திரு. பொன்னுச்சாமி பாஸ்கரன் அவர்களே. அன்றியும், மேலதிக உபஅதிபர் திரு. பத்ம

''எனது ஆக்கப்பாட்டுக்கு உதவியோரில் ஒருவரான முதறிஞர், முதுகவிஞர் முருகையன் விழாவில் கலந்து கொள்கிறார். அவர் போன்ற வித்தகர்கள் கல்வி, கலையின் நிறைவுகளை நான் விழாவுக்கு அழைப்பது எனது மாணவர்

பொதுத்தலைப்பில் 'நாடகப் பாடு, பற்றிச் சிறப்பாய்வு செய்கிறார். கவிதை நாடகத்தில் து றைபோ ன வ ரு ம் . எனக்குப்'பா நாடகத்தைப் படிப்பித்த ஆசிரியருமான திரு. முருகையன் என நன்றியுடன் கூறினார் கவிஞர்.

காற்றே நெருப்பாய்
கனலாய் வடிவெடுக்கும்!

-நந்தா



☐ யாழ்ப்பாணம் கச்சேரியும் தமிழ் மொழி அமுலாக்கமும்.

☐ திருநெல்வேலி பாலர் பாடசாலையில் அடிதடி.

☐ ரசிய காட்டூன் படம்

''நேற்றைக்கு கச்சேரியில வேலை செய்யிற கணபதிப்பிள்ளை அண்ணையிட்டை போனனான்'' என்றான் விக்கி.

''ஏன் என்ன அலுவல்?''

''மோட்டார் சைக்கிளுக்கு 'ராக்ஸ்'' எடுக்கவேணும். அதுக்குத் தான் போனனான்''.

''பிறகு''

''அந்த மனிசன் ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து போட்டுது''.

''என்னவாம்''

''எல்லா அரசாங்க திணைக்களங்களில் இருந்தும் சிங்களத்தில கடிதங்கள் வருகுது எண்டு நாங்கள் பெரிசாய் சத்தம் போட்டுக் கொண்டு தமிழுக்குச் சம உரிமை இல்லை எண்டு சத்தம் போடுறம். ஆனால் யாழ்ப்பாணக் கச்சேரியில இருந்து அனுப்புற கடிதங்கள் எல்லாம் இங்கிலீசில தான் அனுப்பினம். சகல சுற்றறிக்கைகள் தமிழில் அனுப்ப வேண்டிய கடிதங்களை எல்லாம் இங்கிலீசில அனுப்பிக் கொண்டு இருக்கினம்.''

''ஓமடாப்பா''

''தமிழ் அரசாங்க அதிபர், தமிழ் உத்தியோகத்தர்கள் உள்ள ஒரு தமிழ்க் கச்சேரியில உந்த நிலைமை எண்டால் எங்கை போய் முடியப் போகுது?''

ஓமோம் சம்பந்தப்பட்ட ஆக்கள் உதில வலுகவனம் எடுக்க வேணும். இல்லாட்டி ஒரு பிரயோசனமும் இல்லை.

☐ ☐ ☐

''தின்னைவேலியில ஒருசிறுவர் பாடசாலை இருக்குது தெரியுமே''

''ஓமடாப்பா என்ன விசியம்'.'

''எனக்குத் தெரிஞ்ச ஆட்களின்டை பிள்ளை ஒண்டு அங்கை படிக்கப் போறது.''

''உதில என்ன புதினம்'' என்று தாடி மாமா கேட்டான்.

''தாடிமாமா எதுக்கும் அவசரப்படாத'' என்றான் சவுந்திரம்.

''பிள்ளைக்கு எத்தினைவயது''

''அண்டைக்கு பிள்ளை திரும்பி வந்த பிறகு தாய் பிள்ளைக்கு குளிக்கவாக்க வெளிக்கிட்டு இருக்கிறா''

''என்னடாப்பா சஸ்பென்ஸ் வைச்சு கதை சொல்லுறாய்''

''பொறு பொறு அவசரப்படாத அந்தப் பிள்ளையை குளிக்கவாக் கேக்க தான் பாாத்தால் முதுகு கால் எல்லாம் தழும்புகள் கனக்க இருந்தது.''

''என்ன தழும்புகள்''

''என்ன தழும்புகளோ. எல்லாம் அடிகாயங்கள்''.

''என்னடாப்பா-நீசொல்லுறாய்''

''அந்த மூண்டரை வயதுப் பிள்ளைக்கு நேசறி ரீச்சர் தடியால எக்கச்சக்கமான அடியள். அதுவும் தழும்பு வரக் கூடிய மாதிரி அடிச்சிருக்கிறா.''

''எவ்வளவு பெரிய அநியாயம். ஒரு சின்னப்பிள்ளைக்கு உப்பிடி அடிக்கிறது எண்டது எவ்வளவு மோசமான வேலை.''

''பாலர் பாடசாலை ஆசிரியர்மார் அதுக்காக விசேடமான பயிற்சிகள் எல்லாம் எடுத்துத் தான் படிப்பிக்க வருகினம். சின்னப் பிள்ளையளோடை எப்படிப் பழகுகிறது, எப்பிடி அதுகளை பார்க்கிறது எண்டது எல்லாத்துக்கும் பயிற்சி இருக்கு. ஆனால் உந்த ரீச்சர் மாதிரி ஆட்கள் எல்லாம் என்ன மாதிரியான மனோநிலையிலஇருக்கினமெண்டு விளங்கேல்லை.

☐ ☐ ☐

''போன கிழமை ரூபவாகினியில ஒரு காட்டூன் படம பார்த்தன். ரசிய காட்டூன் படம்.''

''என்ன புதினம்''

''அதில ஒரு எலி. அது எல்லாத்துக்கும் பயப்பிடுது. சருகு விழுந்தால் பயம். துணிஞ்சுவெளிக்கிடும் பூனையைக் கண்டவுடனே பயந்து ஓடியிடும்.''

''ம்''

''ஒரு மந்திரவாதி அந்தஎலியை ஒரு நாயாக மாற்றி விடுவார்''. வீரமுடன் வெளிக்கிட்ட நாய் பூனையைக் கண்டு பழையபடி ஓடத் தொடங்கும்.''

''அடடா''

''மந்திரவாதி திரும்ப அந்த எலியை ஒரு புலியாக மாற்றி விடுவார். இனி ஒண்டுக்கும் பயப்படாது எண்ட மாதிரி''

''பிறகு''

புலியும் வீராப்புபேசிக் கொண்டு வெளிக்கிடும். திரும்ப பூனையைக் கண்ட உடன் பயம் வந்திடும். புலி பூனையைக் கண்டு ஓடத் தொடங்கியிடும்.''

''நல்ல பகிடி தான்''

''கடைசியாய் மந்திரவாதி எலியைக் கூப்பிட்டு உன்னை நாயாய் மாத்தினால் என்ன? புலியாய் மாத்தினால்என்ன? உன்ரை உள்ளம் எலி உள்ளமாய்த்தான் இருக்கு. ஆனபடியால் நீ எலியாகவே இரு. உன்ரை உள்ளத்தை புலியின் உள்ளமாய் மாத்தி விடுறன் எண்டு சொல்லி எலியின்ரை உள்ளத்தை புலியின்ரை உள்ளமாய் மாத்திவிடுவார்.''

''ம்''

''இப்ப புலி உள்ளமுடைய எலி பூனையைக் கண்டு பயந்து ஓடாமல் பூனையுடன் சேட்டை விடத் தொடங்கியிடும். அதின்ரை வாலைக் கடிக்கிறது. தோளில ஏறுறது எண்டு பெரிய அட்டகாசம்.''

''நல்லாய்த்தான் இருக்கு.''

''இந்தக் கதை எந்தக் கருத்தைச் சொல்லுது எண்டு விளங்குதே.''

''ஓமோம்-நல்லாய்விளங்குது''

☐ ☐ ☐

**அபாக்கிரீவன்**



# மகுடி என்றொரு மானிடன் -3

**-திக்கவயல்-**

**மகுடி**

கே: அயோக்கிய செல்வந்தனுக்கும் யோக்கியமான ஏழைக்கும் என்ன வேறுபாடு?

ப: ஒன்று விடம் நிறைந்த பொற்குடம். மற்றையது தீர்த்தம் நிறைந்த மட்பாண்டம்.

செவிக்கு உணவில்லாதபோது வயிற்றுக்குச் சற்று உணவு கொடுக்கப்படும்.

-வள்ளுவர்

**மகுடி**

கே: எப்போது வயிற்றை நிரப்பக் கூடாது?

ப: அகதிகளின்அழுகை காதை நிரப்பும் போது கல்யாணப் பந்தலில் வயிற்றை நிரப்பக் கூடாது.

☐

பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்கும்
-வள்ளுவர்

**மகுடி**

கே: அரிச்சந்திரன் பற்றி உமது கருத்து என்ன?

தொழிலின் மகத்துவத்தை அறிந்த உண்மைத் தொழிலாளி. அரச தொழிலையும் சுடலைகாக்கும்தொழிலையும் சந்தோஷத்துடன்செய்வோன்

☐

வள்ளுவர் 3000 ஆண்டுகட்கு முற்பட்டவர். அவரின காமத்துப்பால் பெண்களின் அழகை, உணர்வை, காதலை நன்கு வெளிப்படுத்தி நிற்கும். ஆயினும் பெண்ணடிமைத்தனத்தை வள்ளுவர் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொண்டார். பெண்கள் மனம் திரியக் கூடியவர்கள் என்ற சந்தேகக் கருத்துக்கள் வள்ளுவரிடம் குடி கொண்டிருந்தன. மற்றத் தெய்வங்களை விடக் கணவனைத் தொழுதல் இன்னொரு குறளில் இடம் பெறுகின்றது. இது காலத்தின் கோலமாகவும் இருக்கலாம்.

ஆனால் மகுடி சற்று வித்தியாசமானவர். ஆண்கள் மனதை அவர் சந்தேகப்படுகின்றார். மனம் திரிபவர்கள் ஆண்களே என அவர் தனது பதில்களில் வற்புறுத்தி உள்ளார். ''மனைவி விட்டு மனைவி தாவுதல்'' ஆண்களின் வேலைகளில் ஒன்று என்கின்றார் மகுடி! இது பரவலாக ஆராயப்பட வேண்டிய ஒரு பகுதி.

சக்தி இன்றிச்சிவன் இல்லை என்பதும் எம்நாடே; சீதனமின்றித் திருமணம் இல்லை என்பதும் எம்நாடே என்கின்ற கு இன்னொரு கேள்வி பதில், மதத்தத்துவங்கள் போல் மண்ணின் மைந்தர்கள் இல்லையே என்ற ஏக்கப்பாடு மகுடியை மிகவும் வருத்தியுள்ளது. மதக்கருத்துக்கள் போல் மனிதன் வாழ்வை அழுத்தும் பார்வை வள்ளுவரிடத்து என்றும் இருந்தது இல்லை. இது ஒரு அடிப்படை முரண்பாடாகும்.

கற்பதனால் இறைவனைக் காண முற்பட வேண்டும் என்கின்றார் வள்ளுவர். ஆனால் பக்தியே கடவுளை அடையும் மார்க்கம் என மகுடி வற்புறுத்தியுள்ளார் பக்தி இல்லாதவனால் கடவுளை அடைய முடியுமா என ஒருவர் வினாவினார். கணித அறிவில்லாதவனுக்கு கணிதத்தின் மறுமொழி புலப்படுமோ என மகுடி திருப்பிக் கேள்வி ரூபத்தில் பதில் அளித்துள்ளார்.

முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும் என்கின்றார் வள்ளுவர். இது மன்னவர்கட்குச் சொல்லப்பட்டது. இப்போது மன்னர்கள் ஆட்சி கிட்டத்தட்ட ஒழிந்து போனதால் மகுடியின் பார்வை மக்களின் பக்கம் திரும்பியது. நல்லது செய்ய எனக்கு மனம் உண்டு. நான் என்ன செய்தல் வேண்டும் என மகுடியிடம் கேட்கப்பட்டது. அவர் தனது பதிலில் உள்ளம் என்ற உளியால் உன்னைத் தெய்வம் என்ற சிலையாய் வடித்து எடுக்க வேண்டும் என்றார்.

அறம், பொருள், இன்பம், குறளின் தத்துவம். மகுடி யாரே அறம் செய்தீரா, பொருள்சேர்த்தீரா, இன்பம் அனுபவித்தீரா, என்றகேள்விக்கு வீடு இருந்தால் தானே எனப் பதிலளித்தார்- வீடு என்பதற்குச் சொர்க்கலோகப் பொருள் உண்டு. மகுடி காணும் வீடு இவ்வுலக நிஜ வீடாகும். மண்ணைச் சிந்தியாது விண்ணைச் சிந்தியாதே என்பது இதன் அகப்பொருள்; பெண்களை இழிவுபடுத்தும் கருத்துக்களை மகுடி ஒதுக்கி விட்டுள்ளார். பெண்ணானவள் கணவனைத் தொழ வேண்டும் என்கின்றேன் என ஒருவர் மகுடிக்குக் கேள்வி ஒன்றை அனுப்பினார். அதற்குப் பதில் அளித்த மகுடி துர்நடத்தையால் தொழுநோயராகிய கணவனையும் தொழுதெழ வேண்டும் என்றா பண்பு பேசுகின்றீர் எனக் கேட்டுள்ளார். வருங்காலத் தமிழ்ப்பெண் பாட்டும் பரதமும் படித்தால் போதாது.

கராத்தேயும் கற்று அறிந்திருக்க வேண்டும் என்றார். தற்காத்துத் தற்கொண்டாற் பேணும் தத்துவம் மகுடியைப் பொறுத்து 'கராட்டி'யே! மகுடியில் வள்ளுவன் சாயல் அதிகம் உண்டு. இது ஆய்வு செய்யப்பட வேண்டியது.

●

# "கோணர் கிக்"

இந்தியா எமக்குச் சுதந்திரம் பெற்றுத் தருவதாகச் சொல்லியிருந்தால் அது ஏமாற்றே, ஒரு சிறு மனை விட உயரமான குண்டுகள் எமது சுதந்திரத்தை அ க்கப்பாவிக்கப்பட்டன. அவற்றில் ஒன்று யாழ்ப்பாணத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டது. சிறுவர்கள் அதன் அருகே நின்ற போது, சிறுவர்களின் உயரத்துக்கு மேல் அக்குண்டு, உயர்ந்து நின்றது.

அச்சிறுவர்கட்கு நான் சொன்னேன்; பெரிய குண்டுகளைப் போட்டும் சிறிய இனங்களின் தேசிய உணர்வை அடக்க முடியாது. சிறுவர்கட்கு விளங்கியதோ என்னவோ...... உங்களுக்கு விளங்கினால் சரி.

- அங்கதன்

# மக்களின் கேள்விகளும் மாத்தயா பதில்களும்

ஆலய வழிபாடு என்றுகூறிக் கொண்டு வழிபாட்டுச் சுதந்திரம் என்று சொல்லிக் கொண்டு ஆலயங்களில் களியாட்டநிகழ்ச் சிகளையும், கேளிக்கை நிகழ்ச்சிகளையும் பெருமளவில் பணத்தைச் செலவு செய்து ஏற்பாடு செய்வதைக்கண்டு நாம் வேதனை அடைகின்றோம்.

ஒரு பக்கம் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பெற்றோரை இழந்து அநாதைகளாகவும் பெற்றோர்கள் இருந்தும் பொருளாதார கஷ்டத்தாலும் அநாதைகளாகவும் உணவின்றி சுகாதார வசதியின்றி உடைகளின்றி அல்லலுறும் பொழுது பெரும் பணச் செலவில் கேளிக்கை நிகழ்ச்சிகள் வேண்டும் தானா?

**கேள்வி:** 5

தியாகங்கள் நிறைந்த நம் தமிழீழத்தில் எத்தனையோ ஆயிரம் மக்கள் சொந்த இருப்பிடம் இன்றியும் உடுபிடவை இன்றியும் ஒரு நேரச் சாப்பாட்டிற்கு வழி இன்றியும் அல்லல் உறும் போது நம் கோவில் திருவிழாக்களில் தேவையற்று செலவிடப்படும் பணத்தை அந்த மக்களுக்காகப் பயன்படுத்தி அவர்களையும் ஒரு குறித்த நிலைக்கு கொண்டுவர இந்த பக்த கோடிகள் உணர்ந்து செயற்பட மாட்டார்களா? கடவுள் நம்மைக் கேட்டாரா இவ்வளவு ஆயிரம் செலவழித்தால் தான் அருள்பாலிப்பேன் என்று. ஏன் இதை மக்கள் உணரத் தவறுகின்றார்கள்?

இந்தவகையில் இதற்கு உங்கள் நடவடிக்கை என்ன?

எஸ். ரொஸா
முள்ளியவளை

**பதில்:**

நாங்களும் உங்களைப் போன்றுதான்.

ஆலய வழிபாடுஎன்றுகூறிக் கொண்டு, வழிபாட்டுச் சுதந்திரம் என்று சொல்லிக் கொண்டு ஆலயங்களில் களியாட்ட நிகழ்ச்சிகளையும் கேளிக்கை நிகழ்ச்சிகளையும் பெருமளவில் பணத்தைச் செலவுசெய்து ஏற்பாடு செய்வதைக்கண்டு நாம் வேதனை அடைகின்றோம்.

ஒரு பக்கம் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பெற்றோரை இழந்து அநாதைகளாகவும் பெற்றோர்கள் இருந்தும் பொருளாதார கஷ்டத்தாலும் அநாதைகளாகவும் உணவின்றி சுகாதார வசதியின்றி உடைகளின்றி அல்லலுறும் பொழுது பெரும் பணச் செலவில் கேளிக்கை நிகழ்ச்சிகள் வேண்டும் தானா?

இராணுவ பயங்கர வாதத்தால், குண்டுவீச்சால் தொழில்களை இழந்து, வீடு வாசல் இழந்து அகதிகளாக ஆயிரக்கணக்கான மக்கள் இன்னலுறும் பொழுது அன்றாடம் இறந்து கொண்டிருக்கும் பொழுது பெரும்பணச் செலவில் கேளிக்கை நிகழ்ச்சிகள் வேண்டும் தானா?

நாளை எம்மீது பெரும் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று எமது மக்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் பொழுது அந்தத் தாக்குதலில் என்ன நடக்குமோ என்று ஏங்கிக் கொண்டிருக்கும் பொழுது அந்தத் தாக்குதலை எதிர் கொள்ளத்தயாராக வேண்டிய எமது மக்களுக்கு இந்தப் பெரும் பணச் செலவில் கேளிக்கை நிகழ்ச்சிகள் தேவை தானா?

நாம் மதசுதந்திரத்தையோ வழிபாட்டுச் சுதந்திரத்தையோ விவாதிக்கவில்லை இப்படி வழிபாடு என்னும் பெயரில் பெரும் தொகையான பணம் செலவழிக்கும் போது அதில் ஒரு பகுதியை வட/கிழக்கு புனர்வாழ்விற்கும் அபிவிருத்திக்கும் முன் வைக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கும் தந்துதவும்படி வேண்டுகின்றோம்.



**கேள்வி:** 6

சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின் போது எத்தனையோ இனிய தோழர்களை முக்கியமாக பலாலியில் உயிர்த் தோழர்களை இழந்தீர்கள். இத்தகைய இழப்புகளை தாங்கிய நீங்கள் பிரேமதாசாவின் முன்னணியில் அமைதியாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டீர்கள். இந்நிலையில் உங்கள் மனநிலை எப்படி இருந்தது?

எஸ் கிருஷ்ணா
ஊர்காவற்துறை

**பதில்:**

பலாலியில் உயிர் நீத்த தோழர்கள் மட்டுமன்றி இருபத்தையாயிரம் பொது மக்களையும் இழந்துள்ளோம். பேசும்போது என்ன மனநிலையில் இருந்தோம் என்பதைவிட எதற்காக பேசினோம் என்பதே முக்கியமானது.

எமது போராளிகளின் இழப்புக்கும் எமது மக்களின் இழப்புக்கும் காரணமாக இருந்தவர்களை நாம் என்றும் மறக்கப் போவதில்லை. எமது மண்ணை ஆக்கிரமித்து எமது மக்களை பெருமளவில் கொலை செய்து கொண்டிருந்த இந்திய கூலிப்படையை எமது மண்ணிலிருந்து வெளியேற்றுவதற்கும் இங்கு நடக்கின்ற இனப்படுகொலையை எல்லா நாடுகளுக்கும்எடுத்துச் செல்லக்கூடிய இடமாக இப் பேச்சு வார்த்தையைப்பயன் படுத்தி பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டோம் அதில் வெற்றியும் பெற்றோம்.

☐ போராட்டம் அரசியல், பொருளாதாரம், சமூகம், நிகழ்காலப் பிரச்சினைகள் கலாசாரம்... ஆகியவற்றில் மக்களின் ஆக்கபூர்வமான கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) வாரந்தோறும் 'வெள்ளிமஞ்சரி' யில் பதிலளிக்கிறார்,

☐ உங்கள் கேள்விகளை தெளிவாக எழுதி முழுமையான முகவரியும் எமக்கு அனுப்பிவையுங்கள்.

☐ கேள்விகளின், ஆழம், கனதி, அவசியம் ஆகியவற்றின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்பட்டு பதில்கள் அளிக்கப்படும்.

# தலைவர் பிரபாகரனின் கருத்துரைகள்

"பிரபாகரன் சுத்தமான வீரன் என்பதற்கு அவன் இரண்டு பலம் வாய்ந்த அரசுகளுடன் போராடிக் கொண்டிருக்கிறானே போதாதா? சிறுவயதில் உள்ளவன், கொண்ட கொள்கைக்காகப் போராடி வருகிறான் அவன் வீரன் தான்!"

"புறநானூற்றுக் காலம் படிக்கிறேன்; அந்தத் தமிழர் வீரத்தைப்பற்றிப் படிக்கிறேன். எனக்கு 91வயது: எவ்வளவோ படித்துள்ளேன். அதில் இருந்து கடந்த 2000 ஆண்டுகளில் இப்படிப் பட்ட வீரன் தோன்றவேயில்லை"

என தமிழறிஞர் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களால் விதந்துரைக் கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவ்வப்போது வெளியிட்ட கருத்துக்களைத் தொகுத்துத் தந்துள்ளார் பண்டிதர் வீ. பரந்தாமன்

☐ ''ஒரு' கெரில்லாப் போராளியின் வாழ்க்கையானது துன்பமும் மகிழ்ச்சியும் வெறுப்பும் கலந்த பல்வேறு பட்டறிவுகளின் (அனுபவங்களின்) கலவையாகும் இவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் உயர்வானது''


☐ ''எமது வெற்றிகரமானகெரில்லாத் தாக்குதல்கள், எதிரிப்படைகளைத் தோற்கடித்து விடுதலையை வென்றெடுக்க எம்மால் முடியும் என்ற நம்பிக்கையை எமது மக்களுக்கு ஊட்டியிருக்கின்றன.'

☐ ''இயற்கை எனது நண்பர்.' வாழ்க்கை எனது நல்லாசிரியன், வரலாறு எனது வழிகாட்டி',

☐ ஒரு புரட்சியியக்கத்தின் தலைவன், அந்த இயக்கத்தின் கட்டுப்பாட்டுக்குத் தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொள்ள வேண்டும்; அப்போதுதான் இயக்கத்தில் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவும். அடிப்படைக் கட்டுக்களைத் தலைவனே மீறி நடப்பானே யானால் ஒழுங்கு குலைந்து குழப்பம் மலிந்து இயக்கம்சிதைந்து போகும்''

☐ 'உயர்ந்த குறிக்கோளுக்காகப் போராடுவதும், உழைப்பதும், வாழ்வதும் எமகெல்லாம் முழுமையான உயிர் நிறைவை ஆத்ம திருப்தியை தருகின்றன.

☐ 'இன்று எமது இளைஞர் செய்யும் தியாகங்கள் எங்கள் எதிர்கால மக்களுக்கு ஒளியூட்டும் - வழிகாட்டும்.'



☐ ''மக்கள் பரிவைப் பெறாத எந்த இயக்கமும், வலிமையுறவோ நிலைபெறவோ முடியாது''

☐ 'தங்களின் தனிப்பட்ட மனக்குகைக்குள் தம்மை அமிழ்த்திக் கொள்பவர்களுக்கு இந்தத் தனிமையுணர்வு ஒரு சிக்கல் தான். ஒரு உண்மையான புரட்சியாளன் இத்தனியாள் சிக்கலை, மக்களின் பொதுச் சிக்கலோடு இணைத்து எண்ணிப்பார்ப்பதால் வென்றுவிடுகிறான்.'

☐ 'உயிரோடு எதிரிகள் கைகளில் பிடிபட்டு, உடலூறும் மனப்புண்ணும் பட்டு வருந்திச் சாவதைவிட, மானத்தோடு நாமாகவே இறந்து விடுவது எவ்வளவோ மேலானது.'

☐ 'அடிமையாக வாழ்வதிலும் போராடி விடுதலையுணர்வுடன் மானத்துடன் சாவதை விரும்புகிறேன்.'

☐ 'கொடியவருக்கும் (பயங்கரவாதிகள்) விடுதலைப் போராட்ட வீரருக்கும் வேறுபாட்டை பலர் புரிந்து கொள்ளாமல் தடுமாறுகிறார்கள். தன்னலத்துக்காக பிறரை வருத்துபவர் கொடியோர்; மக்களின் நன்மைக்காக-அவர்களின் உரிமைக்காக - விடுதலைக்காக எதிரிகளை அழிப்பவன் விடுதலைப்போராட்டவீரன்.'

☐ 'உப்புக்கஞ் சியென்றாலும் தன்முயற்சியால் வந்தது மேலல்லவா? அதே போலத் தான்: நாமே போராடி எங்கள் விடுதலையை வென்றெடுக்க வேண்டும். வீரத்தை விலைக்கு வாங்கவும் முடியாது; இரவல் பெறவும் முடியாது.'

☐ எங்கள் காப்புக்கு பிறரை நம்ப முடியாது: நம்மை நாமே காப்பது முழுமையான காப்பாகும். உரிமையுடைய வீட்டிலே தானே நாம் விரும்பிய படி உலாவலாம் :பிறர் வீட்டிலே எம் விருப்பப்படி நடக்க முடியுமா? அது போலத் தான் தனிநாடாகிய தமிழீழத்திற்றான் தமிழினத்துக்கு முழுமையான உரிமையும் காப்பும் விடுதலையும் உண்டு''

☐ ''எங்கள் இளைஞரிடம் இலட்சியம் - தியாகம் - வீரம் மனவுறுதி ஆகிய வல்லமைகள் இருக்கினறன. இவற்றை எந்தப் ''பீரங்கி'' யாலும் உடைத்து விட முடியாது. ஆதலால் நாம் வெல்வோம்!''

☐ 'நாம் நிச்சயம் வெல்வோம்; ஏனென்றால், அறமும் உண்மையும் எங்கள் பக்கமே நிற்கின்றன''

☐ .''ஒரு மக்கள் இனத்தின் விடுதலை வேட்கையை, அவர்களது உயிரெழுச்சியைப் படைக்கலங்களைக் கொண்டு அடக்கி விட முடியாது. இது மக்கள் வரலாறு கூறும் உண்மை''

☐ ''தமிழீழத்தில் புலிகளை அழித்து விடலாம்; ஆனால், புலிகள் படைத்து விட்ட புரட்சியை வீரவரலாற்றை- இலட்சியத்தை- தியாகத்தை எந்த ஆற்றலாலும் அழித்து விட முடியாது.''

☐ ''எமது சாவிலே புதிய புலிகள் பிறந்தது, எமது தமிழீழத் தாயகத்தின் விடுதலை விளக்கை ஏற்றி வைப்பார்கள்.''

☐ எல்லா ஒடுக்கப்பட்ட மக்களினது போராட்டங்களும எமக்கு வழிகாட்டியாக அமைந்தன''

☐ ''தோல்விக்கு அஞ்சி உரிமைகளைக் கை விட முடியாது.''

## மீண்டும் யாழ் நகரில்...

கள் அளிக்கப்படும்.

திரம் என்று சொல்லிக் கொண்டு ஆலயங்களில் களியாட்ட நிகழ்ச்சிகளையும் கேளிக்கை நிகழ்ச்சிகளையும் பெருமளவில் பணத்தைச் செலவுசெய்து ஏற்பாடு செய்வதைக்கண்டு நாம் வேதனை அடைகின்றோம்.

ஒரு பக்கம் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பெற்றோரை இழந்து அநாதைகளாகவும் பெற்றோர்கள் இருந்தும் பொருளாதார கஷ் ருக்கும் பொழுது பெரும்பணச் செலவில் கேளிக்கை நிகழ்ச்சிகள் வேண்டும் தானா?

நாளை எம்மீது பெரும் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று எமது மக்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் பொழுது அந்தத் தாக்குதலில் என்ன நடக்குமோ என்று ஏங்கிக் கொண்டிருக்கும் பொழுது அந்தத் தாக்குதலை எதிர்

வட/கிழக்கு புனர்வாழ்விற்கும் அபிவிருத்திக்கும் முன் வைக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கும் தந்துதவும்படி வேண்டுகின்றோம்.

**கேள்வி: 6**

சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின் போது எத்தனையோ இனிய தோழர்களை முக்கியமாக பலாலியில் உயிர்த் தோழர்களை இழந்தீர்கள். இத்தகைய இழப்புக்

கொலை செய்து கொண்டிருந்த இந்திய கூலிப்படையை எமது மண்ணிலிருந்து வெளியேற்றுவதற்கும் இங்கு நடக்கின்ற இனப்படுகொலையை எல்லா நாடுகளுக்கும்எடுத்துச் செல்லக்கூடிய இடமாக இப் பேச்சு வார்த்தையைப்பயன்படுத்தி பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டோம் அதில் வெற்றியும் பெற்றோம்.

●

பானே யானால் ஒழுங்கு குலைந்து குழப்பம் மலிந்து இயக்கம்சிதைந்து போகும்''

☐ 'உயர்ந்த குறிக்கோளுக்காகப் போராடுவதும், உழைப்பதும், வாழ்வதும் எமகெல்லாம் முழுமையான உயிர் நிறைவை ஆத்ம திருப்தியை தருகின்றன.

☐ 'இன்று எமது இளைஞர் செய்யும் தியாகங்கள் எங்கள் எதிர்கால மக்களுக்கு ஒளியூட்டும் - வழிகாட்டும்.'

தான். ஒரு உண்மையான புரட்சியாளன் இத்தனியாள் சிக்கலை, மக்களின் பொதுச் சிக்கலோடு இணைத்து எண்ணிப்பார்ப்பதால் வென்றுவிடுகிறான்.'

☐ 'உயிரோடு எதிரிகள் கைகளில் பிடிபட்டு, உடலூறும் மனப்புண்ணும் பட்டு வருந்திச் சாவதை விட, மானத்தோடு நாமாகவே இறந்து விடுவது எவ்வளவோ மேலானது.'

☐ 'அடிமையாக வாழ்வதிலும் போராடி விடுதலையுணர்வுடன் மானத்துடன் சாவதை விரும்புகிறேன்.'

வீரவரலாற்றை- இலட்சியத்தை- தியாகத்தை எந்த ஆற்றலாலும் அழித்து விட முடியாது.''

☐ ''எமது சாவிலே புதிய புலிகள் பிறந்தது, எமது தமிழீழத் தாயகத்தின் விடுதலை விளக்கை ஏற்றி வைப்பார்கள்.''

☐ எல்லா ஒடுக்கப்பட்ட மக்களினது போராட்டங்களும எமக்கு வழிகாட்டியாக அமைந்தன''

☐ ''தோல்விக்கு அஞ்சி உரிமைகளைக் கை விட முடியாது.''


மீண்டும் யாழ் நகரில்...

## உலகப் பிரசித்தி பெற்ற 'ஏசியா பைக்'




o கரடு முரடான பாதைகளில் கூட கச்சிதமான சவாரி!

o முற்றிலும் சீனா உதிரிப்பாகங்கள் பொருத்தப்பட்டது.

o எல்லா அளவுகளிலும் விற்பனைக்கு வந்துள்ளது

o ஏசியா பைக் பெரியது 22"
ஏசியா பைக் லேடீஸ் 21"
ஏசியா பைக் ஸ்போட்ஸ் 21"

o போக்-பார் (*BAR*) ஆகியவற்றிற்கு உத்தரவாதம் உண்டு.

உற்பத்தியாளரும் சந்தைப்படுத்துவோரும்

## ஸ்ரீ லங்கா இண்டஸ்றியல் கோப்பரேசன்

114 காலி வீதி, - கேனமுல்லை - பாணந்துறை.

☐ எல்லா முன்னணி வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

# விடுதலைப் புலிகள் ஆட்சிக்கு அரசும் வெளிநாடுகள் பலவும் அங்கீகாரமா?

''ஆயுதங்களைக் கீழே போட்டு விடுதலைப் புலிகள் சரணடைந்தாலேயேஅவர்களுடன் பேச்சு நடத்த முடியும்'' என்று இந்தியப்பிரதமமந்திரியாக இருந்த ராஜீவ்காந்தி கூறிவந்தார்.

புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைந்தாலே அவர்களைச்சந்திக்க முடியும் என்று இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதல் ஜனாதிபதியாகஇருந்த ஜே. ஆர். ஜயவர்த்தன கூறி வந்தார்.

## வாரசாரம்

ராஜீவும் ஜே.ஆரும் விடுதலைப்புலிகளின் மனோ பலத்தைக் கணிப்பிலெடுக்காமல் தமது ஆயுதப்படைகளின் பலத்தில் அதீத நம்பிக்கை கொண்டிருந்தனர்.

இப்பொழுது பிரேமதாசா அரசின் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா புலிகளுடன் நாம் மோதுவதற்கு முட்டாள்களல்ல என்று திட்டவட்டமாகவே தெரிவித்திருக்கிறார்

''நாம் புலிகளுடன் மோத விரும்பவில்லை''என்று ஜனாதிபதி பிரேமதாசாவும் தெளிவாகக்கூறியிருக்கிறார்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில்பேச்சுவார்த்தை தொடர்ந்து. சுமுகமான முறையில் நடந்து கொண்டிருக்கிறது.

பிரேமதாசா அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஆரம்பமான பேச்சுவார்த்தைகளைக் குழப்பி இரு தரப்புக்குமிடையில் மோதலை ஏற்படுத்துவதற்குச் சில சக்திகள் முயற்சி செய்தன என்பது வெளிப்படை.

இந்திய உளவுப் பிரிவான 'றோ' இதற்குப் பின்னணியிலிருந்தது என்பதும் பகிரங்க ரகசியம். தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணுமுகமாக சமரச முயற்சிகளை மேற்கொண்டபோது சாத்தியமற்ற பத்தொன்பது அம்சக் கோரிக்கையை முன்வைத்துக் குழப்பியடித்தது. ஈ. பி. ஆர், எல். எப் என்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி இப்பத்தொன்பது அம்சக் கோரிக்கையை 'றோ' என்ற உளவுப் பிரிவே தயாரித்தது என்பதும் வெளிப்படை.

அரசுக்கும்'புலிகளுக்குமிடையில் ஆரம்பமான பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதற்கும் இப்பத்தொன்பது அம்சக் கோரிக்கையைப் பயன்படுத்த முனைந்தனர்.

தங்களுடனும் அரசாங்கம் பேச்சு நடத்த வேண்டுமென்று ஈ. பி. ஆர். எல் எப் வலியுறுத்தியது, மாகாண சபைத் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் கூட்டுச் சேர்ந்திருந்த ரெலோ, ஈ. என். டி. எல். எப். ஆகியவற்றைக் கைவிட்டுவிட்டு அரசுடன் தாம்பேசவேண்டுமென ஈ. பி. ஆர். எல். எப். கூறியது.

இந்தக் குழுக்களில் நம்பிக்கையற்ற ஜனாதிபதி பிரேமதாசா ஈ. பி. ஆர். எல். எவ் குழுவைச் சந்தித்துப் பேசும்படி பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவைப் பணித்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். இரவல் புத்தியுடன் செயல்பட்டதால் அதன் முயற்சி ''பிள்ளையார் பிடிக்க குரங்கானகதையாக'' முடிந்தது. பத்தொன்பது அம்சக் கோரிக்கையை ஆராய்வதற்கு சர்வகட்சி மாநாடு தான் உகந்த இடம் என்பது அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்து சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளாமலிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ளச் செய்தார்.

இதுமட்டுமல்ல; ஈ பி.ஆர். எல்.எவ். தலைவரும் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சருமான வரதராஜப்பெருமாள் திருக்கோணமலையிலிருந்து தலைமறைவாவதற்கு முன்னர் அவசர அவசரமாக ஒரு வருடகால அவகாசம்கொடுத்துப் பிரகடனப் படுத்திய''ஈழ சோஷலிஸ குடியரசு'' பிரகடனத்துக்காக அரசாங்கத்திடம் ஈ.பி.ஆர்.எல் எவ். வருத்தம் தெரிவித்து மன்னிப்பும் கோர வேண்டியநிலை ஏற்பட்டது. ஈ.பி.ஆர்.எல்.எவ் சர்வகட்சி மாநாட்டில் நுழைந்ததும் அதுவரை அந்த மாநாட்டில் பார்வையாளராகக் கலந்து கொண்டிருந்த விடுதலைப் புலிகள் அதிலிருந்து வெளியேறி விட்டனர்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வந்த நீதிஅமைச்சரும் வடக்கு கிழக்கு மாகாண சமாதானக் குழுத்தலைவருமான ஜனாப் ஏ.ஸி.எஸ். ஹமீத்கூட ஈ பி. ஆர்.எல்.எவ். குழுவினரைச் சந்தித்துப்பேசவிரும்பவில்லை

எஸ்·எம்·ஜி

ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்திக்கப் போவதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவைச் சேர்ந்த எம்.பி. பிரேமச்சந்திரன் நாளும் குறித்துப் பத்திரிகைகளுக்குத் தெரிவித்திருந்தார். ஆனால் அப்படி ஒரு சந்திப்புக்கு ஏற்பாடேஇல்லை என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்து விட்டது.

இதிலும் ஈ.பி. ஆர்.எல்.எவ் மூக்குடைபட்டது. தலைவர் வரதராஜப்பெருமாளும் செயலாளர் பத்மநாபாவும் கொழும்புக்கு வரமுடியாத நிலையில் அமைச்சரை எம். பிக்கள் பாராளுமன்றக் கட்டிடத்தில் சந்தித்துப்பேசும் ஒரு சந்திப்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைச்சர் ரஞ்சன் பேச்சு முடிந்தது.

இந்தப் பேச்சுக்கூட விடுதலைப் புலிகளுக்கு ஆத்திரத்தைக்கொடுத்தது. அரசுடன் தொடர்ந்து பேச்சு நடத்துவதில் ஆர்வம் காட்ட புலிகள் மறுத்தனர்.

அமைச்சர் ஹமீது யாழ்ப்பாணத்துக்குப் பறந்து வந்து புலிகளைச்சந்தித்து சமாதானப்படுத்தி விட்டுக் கொழும்பு திரும்பி ஜனாதிபதி பிரேமதாசாவைச்சந்தித்தார். மீண்டும் யாழ்ப்பாணம் வந்த அமைச்சர் ஹமீத்ஜனாதிபதியின் செய்தியை தெரிவித்தார்.

இரண்டாவது தடவையாக விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணியின் தூதுக்குழு ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்தது.

வடக்கு கிழக்கு மாகாண சபை அமைக்கப்பட்டு அதன் ஆட்சி பீடத்தில் ஈ.பி.ஆர்.எல் எவ். கூட்டுக் குழு இந்தியாவின் ஆசியுடனும் இந்தியப் படையின் பாதுகாப்புடனும் அமர்த்தப்பட்டிருந்த காலத்தில் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களோ தூதரக அதிகாரிகளோ அந்த ஆட்சியை அங்கீகரித்து மரியாதைக்காகக் கூட முதலமைச்சரைச்சந்திக்க முன்வந்ததில்லை வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் கூட அவரைச்சந்திக்க முயலவில்லை முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் பெரும்பாலும் கொழும்பில் தங்கியிருந்த போது கூட வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள் உத்தியோகரீதியில் அவரைச் சந்தித்ததில்லை இலங்கை அரசாங்க அமைச்சர்கள் கூட ஒரு மாகாணத்தின் முதலமைச்சர் என்ற வகையில் வரதராஜப் பெருமாளைச் சந்தித்துப் பேச திருக்கோணமலைக்குச்சென்றதில்லை.

இப்பொழுது அமைச்சர் ஹமீது அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு.கோ. மகேந்திரராசா, செயலாளர் திரு யோகரத்தினம்யோகி அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரைச் சந்தித்து ஆலோசனை நடத்துகிறார்.

கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் வெளிநாட்டுத் தூதுவர் கனடா தூதுவர் வந்து புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்களைச் சந்தித்துப் பேசிச் சென்றனர். அமெரிக்கத் தூதரக முதல் செயலாளர், இரண்டாவது செயலாளர் அரசியல் அதிகாரிகள் வந்து சந்தித்துச் சென்றனர். நோர்வேயிலிருந்து நொராட் நிறுவன அதிகாரியும் வந்து சென்றார். மற்றும் பல தூதரக அதிகாரிகளும் வந்து சந்தித்துச் சென்றுள்ளனர். வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் விடுதலைப் புலிகளைச் சந்திக்க வந்து கொண்டிருக்கின்றனர்.

கடந்த வாரம் மக்கள் முன்னணித் தலைவர்கள் கொழும்புக்குச் சென்றிருந்த சமயம் கொழும்பிலுள்ள சுவிட்சர்லாந்துத் தூதுவர் இவர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்று சந்தித்துப் பேசினார். அமெரிக்கமற்றும்வெளிநாட்டுத்தூதரகஅதிகாரிகளும் மக்கள் முன்னணித் தலைவர்களைச் சென்று சந்தித்தனர்.

ஒரு மாகாணத்தின் ஆட்சிப் பொறுப்பில் கூட விடுதலைப் புலிகள் இப்பொழுதுஇல்லை.

ஆனாலும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளின் அரசாங்கம் தான்இருக்கின்றதென்பதை இலங்கை அரசும் வெளிநாட்டு அரசுகளும் ஏற்றுக்கொண்டு அங்கீகாரமளித்திருப்பதையே அமைச்சர்களும் வெளிநாட்டுத் தூதுவர்களும் விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேசுவதை எடுத்துக்காட்டுகிறது அடுத்த வாரம் பதில் எதிர்க்கட்சித் தலைவர் அநுரா பண்டாரநாயகாவும் யாழ்ப்பாணம் வந்து புலிகளைச் சந்திக்க விருப்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சிக்கு எதிர்க்கட்சிகளும் அங்கீகாரமளிப்பதையே எடுத்துக் காட்டும்.

**வடக்கு கிழக்கு மாகாண சபையில் இந்திய ஆசியுடனும் இந்தியப் படையின் பாதுகாப்புடனும் வரதராஜப் பெருமாளின் ஈ. பி. ஆர். எல். எவ். கூட்டு ஆட்சி இருந்தபோது மரியாதைக்காவது ஓர் அமைச்சரோ வெளிநாட்டுத்தூதரக அதிகாரிகளோ சென்று சந்தித்ததில்லைஇப்பொழுது அமைச்சரும் வெளிநாட்டுத் தூதுவர்கள், அதிகாரிகள் அடிக்கடி யாழ்ப்பாணத்துக்கு வந்து விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேசுவது ஏன்?**


## ஆண் உதவித் தாதியர் பயிற்சி நெறி

**TRAINING FOR NURSES AIDE (MALE)**

ஆண்களுக்கான உதவித் தாதியர் பயிற்சி நெறி
**10. 06. 1990** இல் ஆரம்பமாகவுள்ளது.

பதிவுகளுக்கு;


## கேள்வி அறிவித்தல்

**வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை**

**அச்சுவேலி பஸ் நிலையத்தின் முன்பாகக் கட்டப்பட்டுள்ள சந்தைக் கட்டடத்தில் அமைந்துள்ள கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை.**

01. அச்சுவேலி பஸ் நிலையத்தின் முன்பாகக் கட்டப்பட்டுள்ள சந்தைக் கட்டடத்தில் அமைந்துள்ள 14 கடைகளிலும் வியாபாரம் செய்யும் உரிமைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இலங்கைப்

ந்து. சுமுகமான முறையில் மென்று ஈ. பி. ஆர். எல் எப் ஈ.பி.ஆர்.எல்.எவ் சர்வகட்சி தைக்கொடுத்தது. அரசுடன் சனை நடத்துகிறார். னார். அமெரிக்காமற்றும்வெளி காட்டும்.


## ஆண் உதவித் தாதியர் பயிற்சி நெறி

## TRAINING FOR NURSES AIDE (MALE)

ஆண்களுக்கான உதவித் தாதியர் பயிற்சி நெறி
**10. 06. 1990** இல் ஆரம்பமாகவுள்ளது.

பதிவுகளுக்கு:

**Dr. V. P. சுந்தரராஜன்**

## சாயி மெடிக்கல் அக்கடமி

இல. 10, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## COMPUTER PROGRAMMING COURSES

| | Commencement | Days | Time |
|---|---|---|---|
| **BASIC** | 12- 06- 90 | Tue. | 10.30–12.30 |
| | | Thu. | 10.30–12.30 |
| **LOTUS I, 2, 3** | 11. 06. 90 | Mon. | 9.00–11.00 |
| | | Wed. | 9.00–11.00 |
| **d BASE + III** | 12. 06. 90 | Tue. | 10.30–12.30 |
| | | Thu. | 10.30–12.30 |
| **WORD PROCESSING** | 14. 06. 90 | Tue. | 8.30–10.30 |
| | | Thu. | 8.30–10.30 |

**BOOK KEEPERS**

| | | | | |
|---|---|---|---|---|
| I. A. B. | Inter | 09 . 06 . 90 | Sat. | 1 . 00 - 3 . 00 |
| | | | Sun. | 1 . 00 - 3 . 00 |
| I. A . B. | Final | 16 . 06 . 90 | Sat. | 3 , 00 - 5 . 00 |
| | | | Sun, | 3 . 00 - 5 , 00 |

C. I. M. A. & A. A. T,
Classes have just Commenced

## School of Business Administration

(Leaders in Computer Education)
16, 3rd Cross Street,
( West of O. L. R. Church )
JAFFNA

(C/4582)


# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை

### அச்சுவேலி பஸ் நிலையத்தின் முன்பாகக் கட்டப்பட்டுள்ள சந்தைக் கட்டடத்தில் அமைந்துள்ள கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை.

01. அச்சுவேலி பஸ் நிலையத்தின் முன்பாகக் கட்டப்பட்டுள்ள சந்தைக் கட்டடத்தில் அமைந்துள்ள 14 கடைகளிலும் வியாபாரம் செய்யும் உரிமைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து 25-06-1990 ஆந் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.
02. 21-06-1990 ஆந் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.30 மணிவரை கேள்விப்பத்திரக் கட்டணமாக 100/- ரூபாவும், மீளளிப்புச் செய்யப்படும் கேள்விப் பாதுகாப்பு வைப்புப் பணமாக 1000/- ரூபாவும் அச்சுவேலி உப அலுவலகத்தில் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
03. நிரப்பப்பட்ட கேள்விகள் குறிக்கப்பட்ட தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக் கூடியதாக 'விசேட ஆணையாளர், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை, நீர்வேலி' என [illegible] முகவரியிடப்பட்டு கேள்வியைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'அச்சுவேலி சந்தைக் கடைக்கான கேள்வி'' எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது இத்தலைமைக் காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடப்படல் வேண்டும்.
04. தற்பொழுது இப்பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலக கடைகளில் ஏதாவது ஒன்றின் பதிவு செய்யப்பட்ட வாடகைக்காரராக இருப்பவர்களுக்கோ அல்லது அன்னாரது கணவன் / மனைவி எவருக்கேனும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது.
05. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் சபையினால் அங்கீகரிக்கப்படும் முறையிலான கதவுகளைத் தங்களது செலவில் தயாரித்துப் பொருத்துதல் வேண்டும்.
06. கடைகளைத் தெரிவுசெய்யும் முன்னுரிமை கூடிய கேள்வியின் அடிப்படையில் வழங்கப்படும்.
07. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் குறிப்பிட்ட காலத்திற்குள் கடையைப் பொறுப்பேற்காவிடின் அவரது கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
08. ஒருவர் ஒரு கேள்விக்கு மேல் சமர்ப்பிக்க முடியாது.
09. எந்தவொரு கேள்வியையும் எதுவித காரணமும் காட்டாது கேள்விகள் திறப்பதை நிறுத்தி வைக்கவோ, ஒத்தி வைக்கவோ அல்லது திறக்கப்பட்ட எந்தவொரு கேள்வியையும் அல்லது கேள்விகள் அனைத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியையும் எதுவித காரணமும் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு.
10. கடைச்கான மின் இணைப்புக்களைக் கடையைப் பொறுப்பேற்கும் கேள்விக்காரரே தனது செலவில் பெற்றுக்கொள்ள வேண்டும்.
11. கடைக்கான உரிமை 10 வருடங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.
12. சபையால் நிர்ணயிக்கப்படும் மாதாந்த வாடகையை அடுத்து வரும் மாதத்தின் 10ஆம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும், இவ்வாடகை காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்படும்.
13. கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்பட்ட ஒரு கிழமைக்குள் குறிப்பிடப்பட்ட உரிமைப்பணம் முழுவதையும், மூன்றுமாத வாடகை முற்பணத்தையும் 1990 ஆம் ஆண்டிற்கான உரிமக் கட்டணத்தையும் செலுத்தி உடன்படிக்கை செய்தல் வேண்டும்
14. பஸ் நிலையப் பார்வையுடைய கடைகளின் ஆகக்குறைந்த கேள்வித்தொகை ரூபா 1,00000 ஆகவும் சந்தைப் பார்வையுடைய கடையின் ஆகக்குறைந்த கேள்வித்தொகை ரூபா 75000 ஆகவும் நிர்ணயிக் கப்பட்டுள்ளது.
15. பஸ் நிலையப் பார்வையுடைய கடைகள் 7லும் பின்வரும் வகையான வியாபாரங்கள் மட்டுமே செய்யப் படலாம்.
    1. பிடைவைகள் / தைக்கப்பட்ட ஆடைகள்
    2. மின்னியல், மின்சார சாதனங்கள்
    3. காகிதாதிகள் / புத்தகங்கள்
    4. மருந்துப் பொருட்கள் (பார்மசி)
    5. அழகுசாதனப் பொருட்கள்/ஆடம்பரப் பொருட்கள்
    6. பாதணிகள்
    7. ஆபரண வகைகள்
    8. வாகன உதிரிப்பாகங்கள் (புதியவை)
16. சந்தைப் பார்வையுடைய 7 கடைகளிலும் பஸ் நிலையப் பார்வையுடைய கடைகளுக்கு அனுமதிக்கப் பட்ட வியாபாரம் அல்லது பின்வரும் வகையான வியாபாரங்கள் மட்டுமே செய்யலாம்.
    1. பலசரக்கு வியாபாரம்
    2. மணிக்கூடு, மின்சார சாதனங்கள் திருத்துதல்
    3. பிளாஸ்ரிக், உலோகப் பாத்திரங்கள்
17. கேள்விப் படிவங்கள் பெறுவதற்கு கேள்விக்காரர்கள் தேசிய அடையாள அட்டை அல்லது அவர்கள் பகுதி கிராம சேவையாளரிடமிருந்து பெறப்பட்ட வதிவிடச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்.
18. மேலதிக விபரங்கள் தேவைப்படின் வலி. கிழக்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அல்லது அச்சுவேலி உப பணிமனையில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**திருமதி தனேஸ்வரி பாஸ்கரன்**
விசேட ஆணையாளர்
வலி. கிழக்குப் பிரதேச சபை,
நீர்வேலி.

வலி. கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
1990 - 06 - 06.

(B/1118)

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

## வற்றாப்பளைக்கு முதலிடம்

(முல்லைத்தீவு)

1990- ஆம் ஆண்டிற்கான கிராமோதய சபைகளுக்கிடையிலான முல்லைத்தீவு மாவட்டத் தெரிவுப் போட்டியில் வற்றாப்பளைக் கிராமசேவகர் பிரிவுக் கிராமோதய சபை முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

குறைந்த செலவிலான வீடமைப்புத் திட்டத்திலும் வற்றாப்பளை முல்லைத்தீவு மாவட்டத்திலும் முதலாம் இடத்தைத் தட்டிக் கொண்டது.

வற்றாப்பளைகிராமசேவகர் சு. கிருஸ்ணபிள்ளையின் தன்னலமற்ற சேவையே இச்சாதனைகளுக் கெல்லாம் காரணம் என உயர்அதிகாரிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர் (58)

யாழ். பல்கலைக்கழக

# காணியில் இருந்து உடன் வெளியேறவும்; வேறு காணியும்; நஷ்டஈடும் வழங்கப்படும்

(கிளிநொச்சி)

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்திற்குச் சொந்தமான 25 ஏக்கர் காணியில் அத்துமீறிக் குடியேறிய 21 குடும்பங்களும் உடனடியாக காணிகளை விட்டு வெளியேற வேண்டும். காணிகளுக்குப் பதிலாக வேறு காணிகளும், நஷ்ட ஈடாகப் பணமும் வழங்கப்படும்.

கிளிநொச்சிக் கச்சேரியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திரு. கே. குணராசா மேற்கண்டவாறு கூறினார்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். வேலுப்பிள்ளை, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு. ப. மூர்த்தி. திரு. எம். ஜி. ஆர். திரு. பாலசுந்தரம், கிளிநொச்சி மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ரி. பிரபா ஆகியோரும் மேற்படி காணிகளில் அத்துமீறிக் குடியேறியவர்களும் கலந்து கொண்டனர்.

அங்கு கூடியிருந்த மக்கள் தாம் காணிகளைவிட்டு வெளியேற முடியாது என்றும். 1969ஆம் ஆண்டு முதல் தாம் அக்காணிகளில் வாழுவதாகவும் தெரிவித்தனர்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. குணராசா தொடர்ந்து பேசுகையில் அரசாங்கக்காணிகளில் அத்துமீறிக் குடியேறிவிட்டு காணிகளைவிட்டு வெளியேற மாட்டோம் என்று கூறுவது முறையல்ல.

இக்காணிகளை விட்டு எழும்பும்படி நீதி மன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது. சிவில் நிர்வாகம் இருந்திருந்தால் நீங்கள் எல்லோரும் எப்போதோ குடி எழுப்பப் பட்டிருப்பீர்கள்.

எமது மாணவ சமுதாயத்தின் நலன் கருதி நீங்கள் அனைவரும் காணிகளை விட்டு வெளியேறி உங்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் குடியேறவேண்டும்.

இங்கு ஒரு விவசாய பீடம் அமைவதால் கூடுதலாக இங்கு வாழுகின்ற மக்களே பயனையடைவர். ஆதாலால் மனமுவந்து காணிகளைவிட்டு எழும்பி பல்கலைக்கழகம் அமைய உதவி செய்யுங்கள் என்றார்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தமதுஉரையில் கூறியதாவது:

இப்போது எம்மால் வழங்கப்படும் காணிகள் குடியிருக்க உகந்ததாக இல்லா விட்டால் வேறு காணிகளைக் காட்டுங்கள் அவற்றை உங்களுக்கு வழங்குவோம்.

இது தவிர அரசாங்க ஊழியர்கள் அல்லாதவர்களுக்கு வீடு கட்டுவதற்கு 15 ஆயிரம் ரூபாவும், மீள் குடியேற்றத்திற்கு 2 ஆயிரம் ரூபாவும், தொழில் நஷ்டத்திற்கு 4 ஆயிரம் ரூபாவுமாக 21 ஆயிரம் ரூபாவும் வழங்குவோம். அத்தோடு யாழ். பல்கலைக்கழகம் வழங்கும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும் சேர்த்து நல்லவீட்டைஅமைக்க முடியும்

ஆதலால் மக்கள் இந்த நாட்டிற்குக் கிடைக்க இருக்கின்ற பல்கலைக்கழகத்தையோ, அல்லது உங்களுக்கு கிடைக்கின்ற நிவாரணத்தையோ இழக்கக்கூடாது என்றார்.

மக்கள் முன்னணி அமைப்பாளர் மூர்த்தி பேசுகையில் அரச காணிகளில் அத்துமீறிக் குடியேறிவிட்டு எழும்பமாட்டோம் என்று கூறுவதை நாம் அனுமதிக்க முடியாது. காணி வழங்குவதில் பாரபட்சம் காட்டப்பட்டிருந்தால் கூறுங்கள் விசாரணையை மேற்கொண்டு நீதி வழங்குவோம் என்றார். (49)

## உடல் ஊனமுற்றோரை மனமூனமுறாது காக்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு–கிழக்குப் பகுதிகளில் இயற்கையாக ஊனமுற்றவர்களை விட வன் செயல் காரணமாக ஊனமுற்றவர்களே அதிகளவில் உள்ளனர். உடல் ஊனமுற்றவர்களின் மனமும் எமது நடத்தையால் ஊனமுறாது அவர்களை கவலையின்றி வாழ வழிசெய்ய வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாநகர சபையில் நடைபெற்ற ஊனமுற்றோர் புனர்வாழ்வு பற்றிய கலந்துரையாடலில் கலந்துகொண்ட பயிற்சித் திட்டப் பொறுப்பாளர் வண, சகோதரி லூட்ஸ் ஜோசப் குறிப்பிட்டார்.

இம் மாநாட்டிற்கு மாநகர சபை ஆணையாளர் திரு.வி. பி. பாலசிங்கம் தலைமை தாங்கினார். உடல் ஊனமுற்றவர்களுக்கு சமுதாய மட்டத்திலான புனர்வாழ்வு அளித்தல் பற்றி இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

மாநகர சுகாதார வைத்திய பிரிவு சிறுவர் பாதுகாப்பு நிதியம், அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், சர்வதேச லயன்ஸ், லியோ கழகங்கள் போன்ற பல சமூக சேவை ஸ்தாபனங்களின் முக்கிய பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கு பற்றினர். (மு)

## உற்பத்தித் திறன் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி யாழ் ஆஸ்பத்திரிக் கிளையில் நாளை சனியன்று பின்வரும் கிராம சேவகர் பிரிவுகளுக்கு உற்பத்தித் திறன் கொடுப்பனவுவழங்கப்படவுள்ளது.

மாதகல் .கி. சே. பிரிவில் 238, பண்டத்தரிப்பு 70,மாசியப்பிட்டி 46 , சங்கானை10, சுநுமலை 93 குடும்பங்களுக்கும் உற்பத்தித்திறன்கொடுப்பனவு வழங்கப்படும்.

## உற்பத்தித் திறன் உதவி ரூபா 4000

(யாழ்ப்பாணம்)

பின்வரும் கிராம சேவகர் பிரிவுகளுக்கான ரூபா 4000 கொடுப்பனவுகள் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளையில்வழங்கப்படும்.

தாவளை யற்றாலை (ஜே 176) பிரிவில் 34 குடும்பங்களுக்கும், வரணி வடக்கு (ஜே 172) 02,நாவற்காடு (ஜே 171) 01, எழுதுமட்டுவாழ் (ஜே 168) 07, தவசிகுளம் (ஜே 165) 24, கொடிகாமம் (ஜே 164) 1, கைதடி நுணாவில் (ஜே 157) 12, நுணாவில் கிழக்கு (ஜே 155) 10, நுணாவில் மேற்கு (ஜே 144) 72. கல்வயல் (ஜே 153) 01, மறவன்புலோ (ஜே 147) 08, குடும்பங்களுக்கு ரூபா 4000 வழங்கப்படும்.

மிருசுவில் (ஜே 170 ) கிராம சேவகர் பிரிவில் 06, குடும்பங்களுக்கு ரூபா 3681 வழங்கப்படும்.

முன்பு யாழ் ஆஸ்பத்திரி வீதிக் கிளையால் கொடுப்பனவு வழங்கப்பட்டு நிவாரணம் பெறத் தவறியவர்களுக்கும் ரூபா 1000/-, ரூபா 3681/-, ரூபா 4000/- அன்றையதினம் வழங்கப்படும்.

## பருத்தித்துறையில்479பேருக்கு அரசகாணிகள் பகிர்ந்தளிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்திற்குச் சொந்தமான பயன்படுத்தப் படாமல் கிடக்கும் காணிகளை பொது மக்களுக்கு வழங்குவதற்கான வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.வீடுகட்ட காணி இல்லாதோருக்கும், விவசாயம், கைத்தொழில் செய்ய விரும்புவோருக்கும் இக் காணிகள் பகிர்ந்தளிக்கப் படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் இது வரை ஊர்காவற்றுறை, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் காணி வழங்கும் வேலைகள் முடிவுற்றன. ஊர்காவற்றுறையில் 93 பேருக்கும் பருத்தித்துறையில் 479 பேருக்கும் காணிகள் வழங்கப்பட்டுள்ளன மற்றும் மருதங்கேணி வேலணை, தெல்லிப்பளை, சாவகச்சேரி பகுதிகளில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் காணி வழங்கும் வேலைகள் தொடர்ந்துநடைபெற்று வருகின்றன (ம)

## கசிப்புப் பிடிபட்டது

(யாழ்ப்பாணம்)

இரண்டாம் குறுக்குத் தெரு கஸ்தூரியார் வீதி ஆகிய இடங்களில் கசிப்பு விற்றவர்கள் கையும் மெய்யுமாக பிடிபட்டனர். இரண்டாம் குறுக்குத் தெரு கஸ்தூரியார் வீதி ஆகிய இடங்களில் கசிப்பு விற்பதாக யாழ்ப்பாணம் கில்னர் லேனில் உள்ள விடுதலைப் புலிகள் முகாமிற்குக் கிடைத்த தகவலை அடுத்து விடுதலைப் புலிகள் திடீர் என்று அவ்விடங்களுக்கு சென்றதில் கசிப்பு ரியூப்களும் கசிப்பு விற்பவர்களும் பிடிபட்டனர். கஸ்தூரியார் வீதியில் மறுநாளும் அதே இடத்தில் கசிப்பு விற்றவர்கள் இரண்டாம் முறையாகப் பிடிபட்டார்கள். (ம)

## பிஜி தலைமை தாங்கியதால் கூட்டம் பலமணிநேரம் தாமதம்

(பாங்கொக்)

ஐ, நா. சபையின் ஆசிய பசுபிக்நாடுகளுக்கிடையிலான சமூகப் பொருளாதார கமிஷன் கூட்டத்திற்கு பிஜிதலைமை தாங்குவதற்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்ததினால் 47 நாடுகளைக் கொண்ட அந்த அமைப்பின் கூட்டம் ஆரம்பமாக நேற்றுப் பல மணி நேரம் தாமதமானது.

10 நாட்கூட்டத்தில் 47நாடுகளைக் கொண்ட 22 அமைச்சர்கள் உட்பட 300 இற்கு மேற்பட்ட அதிகாரிகளும் கலந்து கொள்கின்றார்கள். இது இந்த அமைப்பின் 46 வதுவருடாந்தக் கூட்டமாகும்

பிஜியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை இராணுவம் சட்ட விரோதமாக கவிழ்த்ததும், இன வேறுபாட்டை நிலைநாட்ட முயற்சித்ததுமே இந்தியாவின் எதிர்ப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

பலமணி நேரம் தனியாக நடந்த ஆலோசனைக்குப் பின்னர் தனது எதிர்ப்பை இந்தியா பின் வாங்கியது. பிஜியின் வர்த்தகத் கைத்தொழில் அமைச்சர் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

## ஆகஸ்டிற்குள் செயற்திட்டம் முடியாவிட்டால் பணம் திரும்பும்

### ஸ்ரீலங்கா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தை நடாத்த

### வவுனியாவில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் வவுனியா நகரிலிருந்து முல்லைத்தீவு நோக்கிப் புறப்

### ராக்கிங்

( 1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தொடரமுடியாது வெட்கத்தினால் தாம் வீட்டிற்குத் திரும்பி விட்டதாக அவர் கூறினார்.

தென்மராட்சியைச் சேர்ந்த இவர் தமது பெயரைக் கூறிக் கொள்ள விரும்பவில்லை.

### எம்.பிகளின்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு இராணுவப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

நாட்டில் நிலைமை படிப்படியாகச் சீராகி வருவதைத் தொடர்ந்து சபை உறுப்பினர்கள் எம், பிக்கள் அமைச்சர்களின் மெய்க்காப்பு வாகனங்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிடவும் அரசாங்கம் முடிவு செய்தது.

### தற்செயல்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட மோதல் ஒரு தற்செயலான சம்பவமென்று இராணுவத் தளபதி ஹமில்டன் ரணசிங்கா தெரிவித்தார்.

இம் மோதலில் படுகாயம் அடைந்த ஐவரில் கருணாரெட்ணா, கமலஸ்ரீ, ஜெயவர்த்தனா ஆகிய மூவரின் பெயர்களே கிடைத்துள்ளன.

### தமிழ்த்தேசிய

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்திற்குச் சொந்தமான பயன்படுத்தப் படாமல் கிடக்கும் காணிகளை பொது மக்களுக்கு வழங்குவதற்கான வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. வீடுகட்ட காணி இல்லாதோருக்கும், விவசாயம், கைத்தொழில் செய்ய விரும்புவோருக்கும் இக் காணிகள் பகிர்ந்தளிக்கப் படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை ஊர்காவற்றுறை, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் காணி வழங்கும் வேலைகள் முடிவுற்றன. ஊர்காவற்றுறையில் 93 பேருக்கும் பருத்தித் துறையில் 479 பேருக்கும் காணிகள் வழங்கப்பட்டுள்ளன மற்றும் மருதங்கேணி வேலணை, தெல்லிப்பளை, சாவகச்சேரி பகுதிகளில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் காணி வழங்கும் வேலைகள் தொடர்ந்துநடைபெற்று வருகின்றன (ம)

# ஆகஸ்டிற்குள் செயற்திட்டம் முடியாவிட்டால் பணம் திரும்பும்

(யாழ்ப்பாணம்)

1989ஆம் ஆண்டிற்கான செயற்திட்ட வேலைகள் யாவும் இன்னும் இரண்டு மாதத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்குள் முடிக்கப் படாத 1989ஆம் ஆண்டிற்கான செயல்திட்டத்திற்கென வழங்கப்பட்ட பணம் மீளப் பெறப்பட்டு, வேறு திட்டத்திற்கோ அல்லது வேறு திணைக்களத்திற்கோ மாற்றப்படும்

இம்முடிவு நேற்று யாழ். அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற பன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டதாக யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிறேட் அவர்கள் தெரிவித்தார். இக்கூட்டத்திற்கு யாழ். மாவட்ட பாராளுமன்ற பிரதிநிதிகளும் வருகை தந்திருந்தனர். (4)

## யாழ். வைத்தியசாலை

# சுகாதார ஊழியர்கள் சம்பள முற்பணத்தில் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் கடமையாற்றும் சுகாதார ஊழியர்கள் சம்பள முற்பணக்கடன் பெறுவதில் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் ஏனைய திணைக்கள ஊழியர்களுக்கு மேற்படி கடன் வழங்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்குப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட அரசஊழியர்களுக்கு இருவருட சம்பள முற்பணக் கடன் வழங்குமாறு 29-11-89 இல் மந்திரிசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

திறைசேரியின் உதவிக் காரியதரிசி சகல திணைக்கள அதிகாரிகளையும் 11-12-89 இல் அனுப்பிய சுற்றுநிருபத்தில் இக் கடனை வழங்குமாறு பணிப்புரை வழங்கியிருந்தார். எனினும் இதுவரை இக்கடன் வழங்கப்படவில்லை என சுகாதார ஊழியர் சங்கத்தினர் கவலை தெரிவித்தனர்.

இது சம்பந்தமாக வேலை நிறுத்தமொன்றை மேற்கொள்ள உத்தேசித்ததாகவும் மக்களின் நலனில் அக்கறை கொண்டு தாம் அதைக் கைவிட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

மேல்மட்ட ஊழியர்கள் சிலருக்கு 8மாத சம்பள முற்பணக்கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதிலும் தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார சுத்திகரிப்பு ஊழியர் சங்கத்தினர் கவலை தெரிவித்துள்ளனர். (மு)

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

## உளவியல்...

வெழுச்சி எவ்வாறு சாதகமாக இருக்க முடியும்? ப்ரொஸ்டீன் உளப் பகுப்பாய்வுக் கொள்கையின்படி மனிதனின் ஆசைகள் அடக்கப்படுவதனாலும்மாஸ்லோவின் தேவைக் கொள்கையின்படி தேவைகள் நிறைவேறா திருப்பதும் மனமுறிவு ஏற்படப் பாதகமான மன வெழுச்சிகள் ஏற்படுவதாகத் தெரிகின்றது. இவை நிறைவேறியதும் சிறந்த மன வெழுச்சி ஏற்படுகின்றது. எனவே உளவியற் காரணிகளும் மனவெழுச்சி வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும் எனலாம்.

கஸ்தூரியார் வீதி ஆகிய இடங்களில் கசிப்பு விற்றவர்களை கையும் மெய்யுமாக பிடிபட்டனர். இரண்டாம் குறுக்குத் தெரு கஸ்தூரியார் வீதி ஆகிய இடங்களில் கசிப்பு விற்பதாக யாழ்ப்பாணம் கில்னர் லேனில் உள்ள விடுதலைப் புலிகள் முகாமிற்குக் கிடைத்த தகவலை அடுத்து விடுதலைப் புலிகள் திடீர் என்று அவ்விடங்களுக்கு சென்றதில் கசிப்புரியூப்களும் கசிப்பு விற்பவர்களும் பிடிபட்டனர். கஸ்தூரியார் வீதியில் மறுநாளும் அதே இடத்தில் கசிப்பு விற்றவர்கள் இரண்டாம் முறையாகப் பிடிபட்டார்கள். (ம)

## புலிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தச் சட்டத்தை நீக்குவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஆதரவு வழங்கி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியை ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் கொண்டு வந்து நாட்டின் சுபீட்சத்திற்கும், ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் வழி சமைக்க வேண்டுமென எமதுகட்சிகேட்டுக் கொள்கிறது என தமிழ் முஸ்லிம் மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் அறிக்கையொன்றின் மூலம் கேட்டுள்ளார்.

## அத்துமீறிய

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

க்கு நியாயம் வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இது சம்பந்தமாக கிளிநொச்சி நீர்ப்பாசன பொறியியலாளர்இரணைமடுத்திட்ட முகாமையாளர் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது;

சிறுபோகவேளாண்மையின் போது அங்கீகரிக்கப்பட்ட அளவு காணிக்கு மேல் விவசாயம் செய்வது குற்றமாகும் அரசாங்க நிலங்களில், வாய்க்கால்களில், வடிகால் வாய்க்கால்களுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளில் விவசாயம் செய்வதும் குற்றமாகும்.

அணைக்கட்டுக்களை வெட்டியோ அல்லது நீர் இறைக்கும் இயந்திரங்களைக்கொண்டோ நீர் எடுப்பது பாரிய குற்றமாகும்.

இம்முறை விவசாயம் செய்ய ஒதுக்கப்பட்ட 4599 ஏக்கர் நிலத்திற்கு மாத்திரமே இரணைமடுக் குளத்து நீர் போதுமாகவுள்ளதால் அதற்குமேல் ஒரு ஏக்கர் காணியில் விவசாயம் செய்வது கூடக் குற்றமாகும். இதனால் சட்டபூர்வமாக விவசாயம் செய்பவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆதலால் விவசாயிகள் நீரைக் சிக்கனமாகப் பாவிக்கவேண்டும்எனத் தெரிவிக்கப்பட்டது.

ஐ. நா. சபையின் ஆசிய பசுபிக்நாடுகளுக்கிடையிலான சமூகப் பொருளாதார கமிஷன் கூட்டத்திற்கு பிஜிதலைமை தாங்குவதற்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்ததினால் 47 நாடுகளைக் கொண்ட அந்த அமைப்பின் கூட்டம் ஆரம்பமாக நேற்றுப் பல மணி நேரம் தாமதமானது.

10 நாட்கூட்டத்தில் 47நாடுகளைக் கொண்ட 22 அமைச்சர்கள் உட்பட 300 இற்கு மேற்பட்ட அதிகாரிகளும் கலந்து கொள்கின்றார்கள். இது இந்த அமைப்பின் 46

## ஸ்ரீலங்கா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தை நடாத்த நியமிக்சப்பட்டிருக்கும் குழு அதன் அறிக்கையை அடுத்து வரும் மத்திய குழுக் கூட்டத்திலும் சமர்பிக்க வேண்டும் எனக் கட்சியின் பொதுக் காரியதரிசிகே.ஆர். பி'சூரியப் பெருமா தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா போக்குவரத்துச் சபையை தனியார் உடமையாக்கியதை ஆட்சேபித்து, ஜூன் 12-ஆம் திகதிநுகொட மத்திய சந்தையில் நடைபெற விருக்கும் கூட்டத்திலும் ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிரான கட்சிகளைப் பங்குபற்றுமாறுஅழைப்பதென்று மற்றொரு தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

## அளவைகளுக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டபோது, அவர் மேற்படி தெரிவித்தார்.

குழப்பமான காலத்தில், மோசடிகளில்ஈடுபட்டகடைக் காரர்களும், அரிசி ஆலை உரிமையாளர்களும், தமது தராசு, படிகளுக்கு 'சீல்' வைத்துக் கொள்வதில் அக்கறை அற்றுக் காணப்படுகிறார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்திற்கான தராசு, படிகளுக்கு முத்திரையிடல் வேலை எதிர்வரும் பதினாறாம்திகதி நடைபெறும் என்று தெரிவித்த அவர், வவுனியா மாவட்டத்தில் கடைக்காரர்களினதும், அரிசி ஆலைக்காரர்களினதும் அக்கறையின்மை காரணமாக மீண்டும் எதிர்வரும் இருபதாம் திகதியும், இருபத்தொராம் திகதியும் வவுனியா கச்சேரியில் மேற்படி முத்திரையிடல் வேலை இடம் பெறும் என்று தெரிவித்தார்.

பல படிக்கற்கள் நிறை குறைந்திருப்பதால், அவற்றுக்கான ஈயம்கட்டும் வேலையும் செய்யவேண்டியுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (தி)

தெடுக்கப்பட்ட அரசை இராணுவம் சட்ட விரோதமாக கவிழ்த்ததும், இன வேறுபாட்டை நிலைநாட்ட முயற்சித்ததுமே இந்தியாவின் எதிர்ப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

பலமணி நேரம் தனியாக நடந்த ஆலோசனைக்குப் பின்னர் தனது எதிர்ப்பை இந்தியா பின் வாங்கியது. பிஜியின் வர்த்தகத் கைத்தொழில் அமைச்சர் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

## வவுனியாவில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் வவுனியா நகரிலிருந்து முல்லைத்தீவு நோக்கிப் புறப்பட்டனர் தாண்டிக்குளத்தில் அரசினர் விவசாயப் பண்ணைக்கு அருகாமையிலுள்ள புலிகளின் காவல் அரணில் இராணுவத்தினரை புலிகள் தடுத்தனர். ஆனால் இராணுவ கவசவாகனங்கள் புலிகளின் காவல் அரணையும் உடைத்துக்கொண்டு முன்னேறமுயன்றபோது புலிவீரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனையடுத்து கடும் சண்டை நிகழ்ந்தது. இந்தச் சண்டையில் கோப்ரல் காமினிசில்வா (28) ஸ்தலத்தில் கொல்லப்பட்டார். 10பேர் படுகாயமடைந்தனர். இவர்கள் அனைவரும் உடனடியாக ஹெலிமூலம் கொண்டுசெல்லப்பட்டு அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் ஐவர் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரியவருகிறது.

இம் மோதலை தொடர்ந்து விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்திற்கும் அரசுக்கும் மத்தியில் பேச்சுக்கள் நடைபெற்றது. இந்தப் பேச்சின்போது இருதரப்பினரையும் போர் நிறுத்தம் செய்யுமாறு பணிக்கப்பட்டது. விடுதலைப்புலிகளால் சுற்றி வளைக்கப்பட்ட இராணுவத்தினரை உடனடியாக வவுனியா முகாமிற்கு வாபஸ் பெறுமாறுவிடுதலைப்புலிகள், பாதுகாப்புக் காரியதரிசி ஜெனரல் சிறில் ரணதுங்காவைக் கேட்டுள்ளனர். விடுதலைப்புலிகளின் வேண்டுகோளுக்கு இணங்கி இறுதியில் இராணுவத்தினர் வவுனியா முகாமிற்கு வாபஸ் பெறப்பட்டனர்,

விடுதலைப் புலிகள் - இராணுவத்தினர்மோதலையடுத்து வவுனியா நகரில் பெரும் பதட்ட நிலை காணப்பட்டது வவுனியா - யாழ், வீதியில் மோதல் நிகழ்ந்ததால் நூற்றுக்கணக்கான வாகனங்கள் வீதியோரம் இடைநிறுத்தப் பட்டன. கடைகள் பூட்டப்பட்டிருந்தன. பின்னர் சிங்கள இராணுவம் வாபஸ் பெறப் பட்டதை அடுத்து வவுனியாவில் சகஜநிலை தோன்றியுள்ளது.

கிழக்கு (ஜே 155) 10, நுணாவில் மேற்கு (ஜே 144) 72. கல்வயல் (ஜே 153) 01, மறவன்புலோ (ஜே 147) 08, குடும்பங்களுக்கு ரூபா 4000 வழங்கப்படும்.

மிருசுவில் (ஜே 170) கிராம சேவகர் பிரிவில் 06, குடும்பங்களுக்கு ரூபா 3681 வழங்கப் படும்.

## ராக்கிங்

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தொடரமுடியாது வெட்கத்தினால் தாம் வீட்டிற்குத் திரும்பி விட்டதாக அவர் கூறினார்.

தென்மராட்சியைச் சேர்ந்த இவர் தமது பெயரைக் கூறிக் கொள்ள விரும்பவில்லை. அத்துடன், தாம்திரும்பிவரும் பொழுது தமக்கு ''பொறுத்திருக்கும் பட்டியலில்'' பல்கலைக் கழகத்திலிருந்து அழைப்பு வந்திருப்பதால் வீடு செல்லவேண்டிஉள்ளது என்று கூறிவந்துவிட்டதாக அம் மாணவன் தெரிவித்தார். (அ)

# பி.பி.ஸி நிருபர் சந்திக்கவருகிறார்

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள லண்டன் பி.பி.ஸி.நிருபர் இன்று விடுதலைப் புலிகளைச் சந்திப்பதற்காக யாழ்ப்பாணம் வருகிறார்

## இந்தியாவுடன்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது பற்றியும் பேசப்பட்டதாகத் தெரிகின்றது.

அதேவேளை இந்தியத்தூதுவரை திருமதி ஹேமா பிரேமதாசா இந்தியத் தூதரகத்திற்குச் சென்று வழியனுப்பிவைத்ததும் குறிப்பிடத்தக்கது.

## பற்றாக்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அடுத்த பருவ ஆரம்பத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் எனவும் தெரிய வருகிறது. (மு)

## மோட்டார்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவருக்குத்தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதனால் இவர் இம்மாதம் 5 ஆம் திகதி யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு கிகிச்சை பலனளிக்காததினால் 7ஆம் திகதி மரணமானார். (ம)

சர்களின் மெய்க்காப்பு வாகனங்களின் எண்ணிக்கையைக் குறைத்து விடவும் அரசாங்கம் முடிவு செய்தது.

## தற்செயல்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட மோதல் ஒரு தற்செயலான சம்பவமென்று இராணுவத் தளபதி ஹமில்டன் ரணசிங்கா தெரிவித்தார்.

இம் மோதலில் படுகாயம் அடைந்த ஐவரில் கருணாரெட்ணா, கமலஸ்ரீ, ஜெயவர்த்தனா ஆகிய மூவரின் பெயர்களே கிடைத்துள்ளன.

## தமிழ்த்தேசிய

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிலும் குறிப்பாக இலங்கைத் தமிழரினதும், இந்தியத் தமிழரினதும் நட்புறவைப் பாதிக்கும் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது,

இம்மகாநாட்டின்மீது தடை விதிக்குமாறு மாவட்ட அதிகாரிகளை உள்துறைச் செயலாளர் ஆர். நாகராஜன் பணித்துள்ளார்.

இம்மகாநாட்டில் வைக்கப் பட்டிருந்த படங்கள் இந்திய இராணுவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதாக இருப்பதாகவும் அரசு தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு இது தொடர்பாகத் தமிழர் தெரிவு இயக்கத்தின் தஞ்சாவூர் கிளைத் தலைவர், தஞ்சைக் கிளைத் தலைவர் முருகேசன். நெடுமாறனின் உதவியாளர் மூர்த்தி ஆகியோர் கைது செய்யப்பட்டதோடு படங்களும் பறிமுதல் செய்யப் பட்டுள்ளன.

அதேவேளை இம்மகாநாட்டில் பஞ்சாப் பாராளுமன்ற உறுப்பினர் சுந்தர்னி சித்மான் கலந்து கொள்வதற்கு ஆட்சேபம்தெரிவித்து பாரதீய ஜனதாக்கட்சி இந்திய ஜனாதிபதிக்கும், பிரதம மந்திரிக்கும் கடிதம் அனுப்பியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# கண்டெடுத்த காசோலை

(யாழ்ப்பாணம்)

ஆயிரம்ரூபா பெறுமதியான இலங்கை வங்கிக் காசோலை ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் வந்து ஆதாரத்தைக் கூறிப் பெற்றுச் செல்லவும். (ஆ-ர்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.